1972 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போதே அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் வருகின்றதனுல், முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு என்று போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இடங்கள் அதிகமாக இருந்து விண்ணப்பங்கள் குறைவாக இருந்தால், தரக் குறைவாக இருப்பவர்களைக்கூட சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் வரும். இப்போது முதல், இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கல் அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பித்துக் கொள்ளும் நிலையில் யாரைச் சேர்த்துக் கொள்வது என்று வரும்போது, சில பல விதிமுறைகளை வைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த விதிமுறை நியாயத்தின் அடிப் படையில் அமைய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விதிமுறை இப்போது வகுக்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : பி. டி. ட்ரெயினிங்குக்குப் போவதாக, இருந்தால் 28 வயதுக்குள் விண்ணப்பம் போட வேண்டும். 28 வயதை நெருங்கக்கூடியவர்கள் மூன்றும் வகுப்பில் தேறியவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தால்தான் எதிர்காலத்தில் அவர்கள் இந்த வேலைக்காவது போகமுடியும். ஆகவே இந்த வயதை மனத்தில் வைத்துக் கொண்டு, 28 வயதை நெருங்கக்கூடியவர்கள் மூன்றுவது வகுப்பில் தேறியிருந்தாலும், அவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகை கொடுப்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறைந்த வயதுடையவர்கள் ஏராளமானவர்கள் விண்ணப்பம் செய்து கொண்டிருப்பதால் 28 வயது வரையில் அலட்சியமான போக்கிலே விட்டுவிட்டு வந்தவர்களைக் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்காது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இன்றைய தேர்வு முறை மாணவர்களுடைய ஞாபக சக்தியைச் சோதிக்கக்கூடிய ஒன்றுக இருக்கிறதே தவிர, மாணவர்களுடைய திறமையை வெளிப்படுத்து வதற்கான சந்தர்ப்பங்களை அளிப்பதாக இல்லை. ஆகவே, இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்க்கும்போது மூன்றும் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, முதல் வகுப்பு ஆகிய எந்த வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தவர்களானுலும், அவர்கள் எல்லோருக்கும் நேரடித் தேர்வு வைத்து, "வைவா வோஸ்" முறையில் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சிப் பள்ளியில் இடம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேறு ஒரு திறமை யான முறையைக் கண்டுபிடிக்கும் வரையில் இந்த முறைக்கு நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நேர்முகத் தேர்வு வைத்து அதிலும் ஓரளவுக்கு எண்கள் தரப்பட்டு, அந்த எண்களின் அடிப்படையில் அவர்கள் ஆப்டிட்யூட், எக்ஸ்ட்ரா–கரிகுலர் ஆக்டிவிடீஸ் இன்னும் வேறு பல நிகழ்ச்சிகளிலே அவர்கள் கலந்து கொள்ளும் தன்மை ஆகியவைகளைக் கணக்கிட்டு அவர்களுக்கு மதிப்பெண்கள் தரப்பட்டு அந்த வகையில் தேர்ந்தெடுக்கப்படுகிறுர்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : இப்பொழுது ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இட நெருக்கடி இருக்கிறதா ? அப்படி இருந்தால், மாலை நேர ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு. டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அந்தப் பள்ளியில் சேருவதற்கு ஏராளமான மாணவர்கள் விண்ணப்பம் செய்கிறார்கள். அதனால் இட நெருக்கடி இருக்கிறது. ஆனால், ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அதிகமாகவே இருக்கிறது. அதனால், ஆசிரியர் பயிற்சி எண்ணிக்கையை ஓரளவு குறைத்துக் கொண்டு வருகிறோம். 260 செக்ஷன்கள் இருந்த இடத்தை இப்பொழுது 160 ஆக ஆக்கியிருக்கிறோம். இன்னும்கூட குறைக்க வேண்டும். அதிகமான ஆசிரியர்களை, பயிற்சி அளித்துத் தயார் செய்து கொண்டிருக்கும்போது அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத சூழ்நிலை, இன்னும் இதுபோன்ற பல்வேறு சங்கடங்களெல்லாம் ஏற்படுகின்றன. ஆகவே, இரண்டாண்டுக் காலம், மூன்றாண்டுக் காலம் கழித்து எத்தனை ஆசிரியர்கள். நமக்குத் தேவைப்படும் என்று திட்டமிட்டு, அந்தத் திட்டமிட்ட அடிப்படையில் ஆசிரியர் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அத்தகைய சூழ்நிலையை நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தனியார் கல்லூரிகளில் ஜாதி மதம் பார்த்து, மூன்றாவது வகுப்பில் தேறியிருந்தாலும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஜாதி மதம் பார்க்கக் கூடாது, சட்டப்படி. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சத வீதம், பிற்பட்ட வகுப்பினருக்கு 31 சத வீதம் இடங்கள் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியின் அடிப்படையில் தனியார்க் கல்லூரிகளிலும் சர்க்கார்க் கல்லூரிகளிலும் இப்போதே அவர்களுக்கு இடம் இருக்கிறது.

Radio sets inSchools

790 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have instructed educational institutions to equip them with radios for the benefit of students ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) (இ) தமிழகத்திலுள்ள எல்லா உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடமிருந்து ஒலி ஒளிக் கல்விக்காக தனிக் கட்டணத்தை (Audio-visual Education special fees) வசூலிப்பதற்கும் , இந்நிதியினின்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டியினை நிர்ணயிக்கப்பட்ட விலையினில்

வாங்கிக் கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன. பள்ளி மின்வசதி யற்று இருந்தால், மாணவர்கள் வானொலி கல்வி நிகழ்ச்சிகள் மூலம் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், மின்கல வானொலிப் பெட்டிகளைப் பெறுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ் : எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஆணையிட பட்டு செயல்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே எல்லாக் கல்வி நிலையங்களும் பெறவேண்டுமென்றுதான் ஆணையிடப் பட்டிருக்கிறது. பெரும்பாலான பள்ளிகளில் இருக்கின்றது என்று கருதுகிறேன். சிலவற்றிலே இல்லாமல் இருக்குமானால் அவைகளும் வாங்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. சென்ற இரண்டு ஆண்டுகாலமாக வானொலி மூலம் 5-வது வகுப்பிலிருந்து 11 வகுப்பு வரையிலே உள்ள மாணவர்களுக்கு எல்லாப் பாடங்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலேதான் அந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய நிகழ்ச்சி நிரல்கள் எல்லாப் பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப் படுகின்றன. கட்டாயமாக வாங்கவேண்டுமென்றுதான் ஆணை பிறப்பிக் கப்பட்டிருக்கிறது. எவ்வளவு பள்ளிகள் வாங்கவில்லை என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆல் இண்டியா ரேடியோ மூலமாக சொல்லித்தரப்படுகின்ற நிகழ்ச்சிகள் பிற்பகல் இரண்டு மணிக்குமேல் அரை மணி நேரம்தான் சொல்லிக் கொடுக்கப் படுகிறது. கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாகவே ஒரே மாதிரி யாகத்தான் போதனை நடைபெறுகிறது. காலத்திற்கு ஏற்றாற்போல் நம் முடைய வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் எல்லாப் பாடங்களையும் ஆறுவது வகுப்பிலிருந்து அதிகமான நேரம் ஒதுக்கிச் சொல்லித் தருவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே வெவ்வேறு வகுப்புகளுக்கும் இருக்கின்ற பாடங்களைப் பற்றித்தான் சொல்லித்தரப்படுகின்றது. ஆண்டுக்கொருமுறை அவர்கள் அகில இந்திய அளவில் ஒரு மாநாடு நடத்துகிறார்கள், அதிலே ஆசிரியர்கள் தலைமையாசிரியர்கள், கல்வித் துறையினர்களைக் கலந்து கொள்ளச் செய்து அவர்கள் ஆலோசனைகளைக் கொடுத்தால் அவற்றை ஏற்றுக் கொண்டு செயல்படுகிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு ரிவ்யூ செய்கிற நிலையில் இருக்கின்ற முறையில் பலன் இருக்கிறதா, குறைபாடு இருக்கிறதா, எப்படி அதை நிவர்த்திக்கலாம் என்று பார்க்கிறார்கள். அங்கே சொல்லப்படுகின்ற யோசனைகளை யெல்லாம் ஆராய்ந்து ஏற்றுக் கொண்டு சங்கடங்கள் இருக்குமானால் அவற்றை நிவர்த்தி செய்ய வழி இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education, whether it will be possible to arrange radio programmes according to the syllabus that has been prescribed in schools ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வகுப்புகளிலே சொல்லித்தரப்படுகின்ற பாடத் திட்டங்களின், சிலபஸின் அடிப்படையிலேதான் அந்த மாணவர்களுக்குப் பயன்பட்டு வருகின்ற அளவுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதிலே மாறுதல்கள் ஏதாவது வேண்டுமென்று கேட்டால் இந்திய வானொலி நிலையத்தினர் அதற்கேற்றவாறு ஆராய்ந்து முடிவு செய்வார்கள்.

திரு. கு. காமாட்சி : வானொலியிலே பாடம் சொல்லிக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே ஆங்கிலப்பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது பள்ளியிலே பூகோளப் பாடம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி பாடங்கள் சொல்லித்தர வசதிகளைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தத் தன்மையை யொட்டிதான் நிகழ்ச்சி நிரல்களை எல்லாப் பள்ளிகளுக்கும் அவர்கள் அனுப்பி வைக்கிறார்கள். மாணவர்கள் கேட்பதற்கு ஏற்ற வகையிலே பீரியட்களை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டுமென்று பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளுக்கும் பிரஜக்டர் வாங்கித் தருவதற்குத் திட்டம் இருக்கிறதா? அதற்கு நிதி ஒதுக்கல் ஏதாவது செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாப் பள்ளிகளுக்கும் அதை வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகின்ற நிலைமை இல்லை. சில பள்ளிகளிலே அந்த நிதியை வைத்துக் கொண்டே பிரஜக்டர் வாங்கி வைத்து இருக்கிறார்கள். சில பள்ளிகளிலே நன்கொடைகள் மூலமாகப் பெறப்பட்டு இருக்கிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலே பெரும் பள்ளிகளிலே பிரஜக்டர்கள் வைத்திருக்கிறார்கள். அங்கங்கு உள்ள நிதி வசதிகளைப் பொறுத்து ஆண்டுக்காண்டு சேருகின்ற தொகையைச் சேர்த்து அப்படிப்பட்ட கருவிகளை வாங்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்த் தினசரியான மாலைமுரசு என்ற இதழில் மாணவர்களுக்கு என்ற பகுதியிலே மாணவர்களுக்குத் தேவையான கணிதம், பொருளாதாரம் போன்ற விளக்கங்களை அளிக்கிறார்கள், அதைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களின் எண்ணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பாராட்டுவதற்கு வரவேற்க வேண்டிய வாழ்த்துதற்குரிய ஒரு செயலாகும்.

திரு. என். இராஜாங்கம் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஆங்கிலத்திலேதான் பயிற்சி நடப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டிலே படிக்கிறவர்கள் தமிழிலேதான் படிக்கிறார்கள், எனவே பயிற்சியையும் தமிழிலே அமல்படுத்துவதற்கு அரசு ஆலோசனை கூறுமா?

1972 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பெரும்பாலான மாணவர்களுக்குப் பாடத் திட்டங்கள் எல்லாம் தமிழிலேதான் நடைபெறுகின்றன, ஆங்கிலம் மட்டும் தான் ஆங்கிலத்திலே செல்லித் தரப்படுகிறது. கணக்கு, வரலாறு, புவியியல் போன்றவைகள் எல்லாம் தமிழிலேதான் நடைபெறுகின்றன.

திரு. எஸ். மருகையன் : தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளும் வானொலிப் பெட்டிகள் வாங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆறாவது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரையில் நடக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளைத் தவிர 6-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரையில் நடைபெறுகிற துவக்கப் பள்ளிகளும் இருக்கின்றனவே, அவைகளும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவைகளும் வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்களும் ஒலி-ஒலிக்கான தனிக் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். ஆடியோ விஷுவல் எஜுகேஷன் ஸ்பெஷல் பீஸ் என்ற வகையிலே வாங்குவதை வைத்து அவர்கள் வாங்கிக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கேயும் வாங்கலாம்.

கல்லூரிகளில் கடல்வளம் பற்றிய வகுப்புகள்

* 791 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கடல் வளத்தைப் பற்றி தமிழகத்தில் எந்த எந்த கல்லூரிகளில் தற்போது பாடம் கற்பிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—

1. மாநிலக் கல்லூரி, சென்னை-5.
2. பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.
3. கிறிஸ்தவக் கல்லூரி, தாம்பரம்.
4. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தமிழ்நாடு கைத்தொழில் ஆசிரியர்கள் சங்கக் கோரிக்கைகள்

* 792 வினா : திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு கைத்தொழில் ஆசிரியர்கள் சங்கம், கரூர் கிளையிலிருந்து அமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அந்த விண்ணப்பம் எப்பொழுது வந்தது? பரிசீலனை முடிவு பெறுமலிருந்தால் விரைவிலே பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே விண்ணப்பங்கள் பல்வேறு வகையிலே பல்வேறு இடங்களிலிருந்து அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

திருப்பூரைச் சேர்ந்தவர்களும் அனுப்பியிருக்கிறார்கள். அவர் களுக்கு 30 ரூபாய் என்று இருந்த சம்பளத்தை 60 ஆக உயர்த்தி இருக்கிறோம். முழு நேர ஆசிரியர்களாக ஆக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 800 ஆசிரியர்கள் வரையில் முழுநேர ஆசிரியர் களாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கின்ற இரண்டொரு பள்ளிகளையும் சேர்த்து அவர்களுக்கு வேலை அளித்து முழுநேர ஆசிரியர்களாக பீரியட்கள் வரத்தக்க அளவுக்கு ஆக்க முடியுமா என்பதைப்பற்றி கல்வித்துறையினர் கவனித்து வருகிறார்கள். அவர்கள் செலக்ஷன் கிரேட் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாநில அளவிலே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மாவட்ட அளவிலே கணக்கிட வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். மாவட்ட அளவிலே ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாகிற நேரத்தில் அதுபற்றிக் கவனிக் கலாம். முழுநேர ஆசிரியர்களாக ஆவதற்கு 9, 10, 11 வகுப்புகளிலும் கைத்தொழில் பாடத்தை வைத்தால் அந்தத் தன்மை கிடைக்கும் என்று கேட்டிருக்கிறார்கள். அது ஆராயப்பட வேண்டிய ஒன்று. அந்தப் பாடத்தை பரீட்சைக்குரிய பாடமாக ஆக்க வேண்டும், அப்படி வைத்தால்தான் மாணவர்கள் அக்கறையோடு படிப்பார்கள் என்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். இவை யெல்லாம் அரசாங்கத் தினுடைய பரிசீலனையில் இருந்து வருகின்றன.

ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர்கள்

* 793 வினா :—திரு. பி. இராமநாதன் : மாண்புமிகு கல்வி- உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் தற்போது வருவாய் விரிவாக்க அலுவலர்கள்[extention Ufficers (Revenue)] நியமிக்கப் பட்டுள்ளார்கள் ?

(இ) மீதமுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் எப்பொழுது நியமிக்கப் படுவார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) எழுபத்தைந்து.

(இ) உத்தேசமில்லை.

மையூரா நதியின் குறுக்கே மேம்பாலம்

*794 வினு —திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

கள்ளக்குறிச்சி தாலுக்காவிலுள்ள அசகளத்தூர் அருகே ஓடும் மையூரா நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தைகள்.

*795 வினு : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 8—12—1971 அன்று பேரவையில் 158 எண்ணுள்ள கேள்வியை ஒட்டிய துணைக் கேள்விக்கு அளிக்கப்பட்ட விடையின் தொடர்பாக மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம் இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தையை 1970–71-ல் ஏலம் எடுத்தவர் கட்ட வேண்டிய பாக்கித் தொகையை வசூலிக்க கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதா?

(இ) மொத்தம் எவ்வளவு தொகைக்கு எந்தத் தேதியில் தாக்கல் செய்யப்பட்டது ?

(உ) தொகை உடனடியாக வசூலிக்க உடன் ஜப்திக்குக் கோரப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. ஏனெனில் ஏலதார் பாக்கித் தொகை முழுவதையும், மேலும் அபராதத் தொகை வட்டித் தொகை முழுவதையும் கட்டிவிட்டார் என்று மாவட்ட ஆட்சியாளர் இப்போது அறிவித்துள்ளார்.

(இ) (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே நான் முன்பொருமுறை வினுவை எழுப்பிய நேரத்தில் கோர்ட்டிலே இருக்கிறது என்ற தகவலைக் கொடுத்தார்கள். இப்பொழுது இல்லை யென்ற பதில் வந்திருக்கிறது. நாளை என்ன பதில் வருமோ ? இப்படித் தவறுன தகவல்களை இந்த மாமன்றத்திற்குத் தருவதைப் பற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முன்பு சொன்ன பதில், இரும்பூதிப் பட்டியிலுள்ள சந்தை ரூ. 32,101வுக்கும், கொசூரிலுள்ள சந்தை ரூ. 13,001-வுக்கும் ஏலம் விடப்பட்டன. இரும்பூதிப் பட்டி சந்தைக்காக செலுத்தப்

பட்ட தொகை ரூ 8,036 ஆகவே, இன்னும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 24,065 கொசூர் சந்தைக்காக செலுத்தப்பட்ட தொகை ரூ. 3,254. ஆகவே இன்னும் செலுத்தப்படவேண்டிய தொகை ரூ. 9,747. . பாக்கித் தொகைகளை குத்தகைதாரிடமிருந்து நீதிமன்றத்தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆகவே, நடவடிக்கை எடுப்பதற்குள்ளாக முழுத்தொகையையும் கட்டி யிருப்பதால், வட்டியையும் சேர்த்துக் கட்டியிருப்பதால் மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இதை வசூலிக்காமல் இருந்த அதிகாரிகள் யார் யார் என்று அறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாவட் ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே பல குறைபாடுகள் இருப்பதாக நான் இந்த மாமன்றத்தில் பல வினாக்களை எழுப்பியிருக்கிறேன். அதிலே இதுவும் ஒன்றுதான். அப்பொழுது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் பதில் அனுப்பியுள்ளதாக கூறியிருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது இது போன்ற மாமன்றத் றத்திற்கு உரிய பதிலை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே அவர்கள் உரிய தகவலைத்தான் தருகிறார்கள், நாங்களும் உரிய பதிலைத் தான் தருகிறோம். அதிலே மாறுபாடு, குறைபாடு இருந்தால் சுட்டிக் காட்டலாம். பாக்கித் தொகைகளை குத்தகைக்காரரிடமிருந்து நீதிமன்றத் தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்திருந்தார். அந்த வகையிலேதான் அந்தப் பதில் அளிக்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பாக்கித் தொகைகள் பூராவும் பெற்றுவிட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். பாக்கித் தொகைகளைப் பெற்ற காரணத்தினால் கோர்ட்டில் இருக்கும் கேஸ் வாபஸ் வாங்கப்பட்டதா அல்லது அந்தத் தொகைக்கு எந்தக் கேசும் போடப்படவில்லையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளர் இத் தொகைகளை நீதிமன்றத்தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பெறுகிறது என்று அப்பொழுது கூறிய பொழுதிலும், ஏலத் தொகை முழுவதும், 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் ஏலதார் கட்டியுள்ளார், மீதியுள்ள அபராத வட்டித் தொகை முழுவதையும் பின்னால் கட்டியுள்ளார், ஆகவே கோர்ட்டுக்கு இனிமேல் போக வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.

Woodlands Hotel

*796 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for State Labour be pleased to state—

(a) whether it is a fact that lockout has been declared by the Woodlands Hotel in Edward Elliots Road, Mylapore, Madras about August 1971 ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் (அ) சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் நிர்வாகம் 3-8-1971 பிற்பகல் 1 மணியிலிருந்து கதவடைப்பு செய்தது.

(இ) என்னுடைய முயற்சியின் பலனாகத் தொழிலாளர் நலத்துறை ஆணையாளரது முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து உட்லண்ட்ஸ் ஓட்டல் 26-8-1971-ல் மீண்டும் திறக்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இவ்விதமாக உணவு விடுதிகளில் ஏற்படுகின்ற கதவடைப்புகள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, உடனடியாகக் கூடுமான அளவில் இரு தரப்பாரையும் கலந்து பேச, அதை நிவர்த்தி செய்வது என்ற முறையை அரசு கடைப்பிடித்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பொதுவாக ஹோட்டல் தொழிலாளர்கள், உட்லண்ட் உள்பட, 6 மாதங்கள் பணியாற்றியவர்களை விலக்கி விடுவதாகவும், புதிதாக வேலைக்குச் சேர்ப்பதுமாகச் செய்கிறார்களே இப்படி நிரந்தரத் தன்மையில்லாமல் செய்கிறார்கள். அந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையில் ராஜன் கமிட்டி சிபார்சு இருப்பதாக அறிகிறேன். ஆகவே, பல ஆண்டுகளாக வேலை செய்யும் தொழிலாளர்களை 6 மாதம் 6 மாதம் என்று செய்யும் இந்த ஹோட்டல்களின் பெயரிலேயே அரசு நடவடிக்கை எடுக்குமா ? அங்கே நல்ல முறையில் இன்ஸ்பெக்ட் செய்து என்னென்ன ஹோட்டல்களில் இம்மாதிரி செய்கிறார்கள் என்பதைப் பரிசிலனை செய்ய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஹோட்டல் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் இந்தக்கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். இராஜன் கமிட்டி ரிப்போர்ட்டி அடிப்படையில் தக்க நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

1972 மார்ச் 30]

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*797 வினா —திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

அரிசனங்களுக்கு வீட்டுமனைகள் ஆர்ஜிதம் செய்து தரப்படுவதில் தாமதம் இன்றி வீட்டு மனைகள் வழங்கிட வழிவகை செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்து தாமதமின்றி வழங்கிட வகை செய்யும் செயற் குறிப்பு அரசின் நடைமுறையில் இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்புகின்றனர்.

திரு த. சோனையா : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று மனுக்கொடுத்தால் 10, 15 ஆண்டு களுக்கு முன் நிலம் ஆர்ஜிதம் செய்தவர்கள் இன்னும் வீடுகள் கட்டப் படாமல் இருக்கிறது. அதனால் கொடுப்பதற்கு ஏதுவில்லை என்று சில அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே முன்னால் கொடுத்த இடங்களிலே அரசு கடன் கொடுத்து உதவி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுமா அல்லது கட்ட முடியாமல் இருப்பவர்களிடமிருந்து அந்த இடத்தை எடுத்துக் கட்ட முன்வருபவர்களுக்குக் கொடுக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நில ஆர்ஜிதம் செய்து வீட்டுக்காக மனை கொடுப்பது ஒரு திட்டம். வீடு கட்ட முடியாமல் இருக்கின்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இன் னொன்று. ஆகவே ஆர்ஜிதம் செய்த இடங்களிலே யெல்லாம் அரசு வீடு கட்டும் என்ற திட்டம் இல்லை. ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் திட்டத்தில் வீடு கட்ட முடியவில்லை யென்றால்தான் அரசு வீடு கட்டிக் கொடுக்கிறது. பத்தாண்டுகளுக்கு முன் ஆர்ஜிதம் செய்த சில இடங்களெல்லாம் மிகப் பள்ளமாக, நஞ்சை நிலங்களாக எடுத்ததால் 3 அடி, 4 அடி பள்ள மாக இருக்கிறது. அவைகளைத் தூர்த்து வீடுகளைக் கட்ட வேண்டுமென்றால் ஏராளமான பணம் செலவாகிறது. அப்படியும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து முதலிலே, 14,000 பேருக்குக் கொடுக்க வேண்டிய நிலங்களிலே பல தவறுகள் இருந்தன. அதை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி கிட்டத்தட்ட 8,000 பேர் இன்றைக்கு அவர்கள் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மீதி 6,000 பேர்கள் இன்னும் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசே இந்தத் தூர்த்துகின்ற ஒரு திட்டத் தைக் கையாள வேண்டும், அதற்கு அதிகமாகப் பணம் செலவாகும் என்பதால் அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. வீ. செல்லதுரை : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் நேரத்தில் நிலச் சொந்தக்காரர் கள ஸ்டே வாங்கிவிடுகிறார்கள், எனவே ஸ்டே கொடுக்கும் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

1972 மார்ச் 30)

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசு ஸ்டே கொடுக்க வில்லை யென்றால் அவர்கள் வழக்குமன்றங்களுக்குச் சென்று ஸ்டே வாங்கு வார்கள். ஸ்டே கொடுப்பது சட்டப்படி முறையான செயலாகும்.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, அரிசனங்கள் வீட்டு மனைகளுக்காக மனுச் செய்தால், அதிகாரிகள் அதைப் பரிசீலனை செய்யும் நேரத்தில் அதை அரசாங்கத்திற்கு அனுப்புவதற்குள் அந்த நிலத்திற் குரியவர்கள் அந்த நிலத்தில கிணறுகளை வெட்டியோ அல்லது வேறு ஏதாவது உயிருள்ள இனங்களை வளர்த்தோ ஆர்ஜிதம் செய்வதைத் தடுப்பதற்கு ஏதுவான முறையில் இருக்கிறது. எனவே, உடனடியாக அந்த நிலத்தை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்கள் நிலத்தை எடுக் கிறோம் என்று அறிவிப்புக் கொடுத்து விட்டால், 4 (1) நோட்டிபிகேஷன் கெஜட்டில் வந்துவிட்ட பிறகு வீடு கட்டவோ, கிணறு வெட்டவோ அல்லது வேறு பலனுள்ள காரியங்களைச் செய்தார்களானால் அரசு கிணற்றையும் சேர்த்துக் கூட எடுக்கிறது. ஆனால் சில நேரங்களில் அப்படிப்பட்டவர்கள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். வழக்கு மன்றத்தில் எத்தனை ஆண்டுகள் ஆகிறதோ அதுவரையில் பொறுத்திருக் கிறோம். வழக்கில் நம் பக்கம் தீர்ப்பாக்கப்பட்டால் நாம் எடுக்கிறோம். அவர்கள் பக்கம் தீர்க்கப்பட்டால் நாம் ஆலோசனை செய்கிறோம். பிறகு அந்த நிலம் நல்லமுறையிலே பயிரிடப்பட்டு செழிப்பாக இருக்கிறதா, கிணறு அந்த இடத்தில் செயல்படுகிறதா என்று அறிந்து அரசு விட்டுவிடுகிறது. சில இடங்களில், இருந்தாலும் அரசு எடுக்கிறது.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீடு நெருக்கடியாக இருக்கும் இடங்களி லெல்லாம் அந்த ஊர்களை விரிவு படுத்த வேண்டுமென்று மனுச் செய்தால் அரிசன நல அதிகாரிகள் மனுவைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக் கொடுக்க வேண்டும். அப்படி அவர்கள் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னாலும், பக்கத்திலிருக்கும் நிலச்சுவான்தார்களிடத்தில் ஒருவித மாக அவர்களோடு கலந்து அரிசனங்களுக்கு விரோதமாகச் செயல்படு கிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அல்லது இனிமேலாவது ஒரு மனுக் கொடுத்தால் உண்டு அல்லது இல்லை என்று 3 மாதத் திற்குள்ளாகத்தெரிவிக்க முடியுமா ? அந்த வேலைகளைத் துரிதமாகச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசு சார்பில் நில ஆர்ஜிதம் செய்யும் அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளை நிலச் சொந் தக்காரர்களோடு சேர்ந்து கொண்டு செய்கிறார்கள் என்று இதுவரையில் அரசுக்குப் புகார் வரவில்லை. நிலச் சொந்தக்காரர்கள் தான் சட்ட மன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு ஸ்டே கொடுக்க வேண்டும். நிலத்தைக் கொடுக்க முடியாது என்று சொல்வதாகப் புகார் வருகிறது. ஆகவே, அரசுச் சார்பில் அதிகாரிகள் தவறு செய்தால் மாண்புமிகு அங்கத்தினர்கள் எழுதிக் கொடுத்தால் அந்த அதிகாரியின் மீது நட வடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

*798 வினா—திரு. எம் முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோவில்பட்டி தாலுகா, கட்டாலங்குளம் கிராமத்திலுள்ள அரிசனப் பொது மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரி, 9—5—1970-ல் மனுச் செய்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில்அரசு என்னநடவடிக்கைஎடுத்துள்ளது?

மாண்புமிகுதிரு சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) ஐம்பத்துமூன்று வீடில்லா ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்கத் தேவையான 4·58 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய, கோவில்பட்டி தனித் தாசில்தார், மேல் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. எம். முத்தையா : இந்த நடவடிக்கையை ஓராண்டுக் காலமாக எடுத்துக் கொண்டு வருவதாகத் தாசில்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார். அந்த நடவடிக்கை எப்போது முடியும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தாமதத்திற்குக் காரணம் அந்த இடம் ஒரே இடமாக இல்லாமல் ஐந்து துண்டுகளாகப் பரவலாக இருப்பதுதான். நான்கு ஏக்கர் ஒரே பிளாக்காக கிடைக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கிடைக்கவில்லை என்றால் இந்த இடத்திலேயே கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மக்களிடத்தில் நல்லமுறையில் பிரசாரம்செய்வார்களானால் நல்லமுறையில் அந்த இடத்தை எடுக்கமுடியும்

அரிசன மாணவர்களுக்கு படிப்பு உதவிப் பணம்

*799 வினா :—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை அண்மையில் அதிகரிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1971–72-ஆம் கல்வி ஆண்டு முதல் உணவு, உறைவிடத்திற்கான உதவித் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

படிப்பு.	சென்னை மாநகர் பழைய வீதம்.	சென்னை மாநகர் உயர்த்தப்பட்ட வீதம்.	வெளியூர்ப் புறம். பழைய வீதம்.	வெளியூர்ப் புறம். உயர்த்தப்பட்ட வீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(மாதம் ஒன்றுக்கான ரூபாய்).			
கலை விஞ்ஞானம் மற்றும் சட்டக்கல்வி.	60	70	50	55
மருத்துவம், பொறியியல் ..	70	75	70	70
உழவியல்	..	..	50	70

படிப்பு	சென்னை மாநகர்		வெளியூர்புறம்	
	பழைய வீதம்	உயர்த்தப் பட்டவீதம்	பழைய வீதம்	உயர்த்தப் பட்ட வீதம்
(1)	(2)	(3)	(4)	(5)
கால்நடை மருத்துவம் ..	60	75	50	70
எல். சி. இ. எல். எம். இ. போன்ற டிப்ளமோ படிப்பு.	50	60	45	50
ஆசிரியர் பள்ளி பயிற்சிப் படிப்பு.	20	40	25	45

இதேபோல் 1971–72-ம் ஆண்டிற்கு சிறப்புக் கட்டண உதவித் தொகையை மத்திய அரசு வழங்கும் சிறப்புக் கட்டண உதவித் தொகை யின் அளவிற்கு உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது.

திரு. தொ. ப. சீனிவாசன் : தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவித் தொகை அளித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். சமுதாயத்தில் மிக மிகப் பின்தங்கிய மக்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மத்திய அரசு சில உதவிகளைத் தருகிறது. அதை வைத்துக் கொண்டு மாநில அரசு கூடச் சேர்த்து இந்தத் தொகையை அதிகமாகக் கொடுக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : சர்க்காரிடமிருந்து செல்லுகின்ற உதவித் தொகை கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஒருமாதம், இரண்டுமாதம் பாங்கில் போட்டு வைத்துக் கொண்டு பிறகு தான் மாணவர்களிடத்தில் கொடுக்கிறார்கள் என்ற புகார் வருகிறது. அதைப்பற்றி பரிசீலனை செய்து ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நலத்துறையிலிருந்து செக்குகளை அனுப்புவதில் தாமதம் இல்லை. அந்தந்தக் கல்லூரிகள் பள்ளிகளுக்குச் செக் அனுப்பப்பட்டு மாணவர்களுக்குக் கொடுப்பதிலே தாமதம் இருப்பதாக அறிந்து இப்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அதிகாரி போடப்பட்டு அவ்வப்போது மாணவர்களுக்கு அந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் அத்தகைய தாமதம் ஏற்படாது. இதைப் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறோம். அவர்களும் எல்லாப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் சர்குலர் அனுப்புவதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : சென்னை நகரம், வெளியூர் என்ற வகையிலே உதவித் தொகை வித்தியாசப்படுகிறது. எந்த இடமாக இருந்தாலும் ஒரே தொகை வழங்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சென்னையிலே ஆகின்ற செலவு அதிகமாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் அவ்வளவு செலவாவது இல்லை. சென்னை மாநகரத்தில் அதிகமான விலை கொடுத்து பண்டங்களை, காய்கறிகளை வாங்க வேண்டியிருக்கிறது. அந்த நிலையை வைத்துக் கொஞ்சம் கூட்டித் தரப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாணவர்களுக்கு வழங்கப் படுகின்ற உதவித் தொகை மார்ச் மாதம் இறுதியான பிறகு கூட கொடுக்கப்படுவது இல்லை. திருச்சி பெரியார் கல்லூரி, காந்தி கிராமக் கல்லூரி மாணவர்கள் இந்த ஆண்டு கூட இதைப்பற்றி அரசுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். டிசம்பர் மாத இறுதிக்குள் இந்தத் தொகையை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதைப் பற்றி மாண்புமிகு பாலசுந்தரம் அவர்கள் கேட்டபோதே விவரமாக எடுத்துச் சொன்னேன். நலத் துறையில் தாமதம் இல்லை. கல்வித் துறையில் தாமதம். கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறி இருக்கிறார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க வருமான வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வருமான வரம்பை ஐயாயிரம் ரூபாயாக உயர்த்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இவ்வளவு ஆண்டு காலமாக வருமான வரம்பு 1,500 ரூபாயாக இருந்தது. அது 2,000 ஆக்கப்பட்டு தற்போது 2,500 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. படிப்படியாக உயர்த்தப்படும். இதுவே பெரிய உயர்வு என்றுதான் கருதுகிறேன்.

திரு. கு. காமாட்சி : இந்த உதவித் தொகை தாழ்த்தப்பட்ட கிறித்தவ சமுதாயத்தினருக்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாநில அரசு முழுக்க முழுக்க தொகை கொடுப்பதாக இருந்தால் அது கிறித்தவர்களுக்கும் பொருந்தும். இந்த உதவித் தொகைக்கு மத்திய அரசும் நிதி உதவி செய்கிற காரணத்தால் இது கிறித்தவர்களுக்குப் பொருந்தாது.

அரிசி கைப்பற்று.

*800 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு உணவு–வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1972-ஆம் ஆண்டு, சனவரி முதல் வாரத்தில், வட ஆர்க்காடு மாவட்டம் செய்யாருக்கு அருகில் உள்ள சோழவரத்திலிருந்து சென்னைக்கு பஸ் மூலம் எடுத்துச் சென்ற 18 மூட்டை அரிசியை, சிவில் சப்ளை அதிகாரிகள் போலீஸ் உதவியுடன் கைப்பற்றியது உண்மையா ?

1972 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேருந்து ஒன்றில் அனுமதியின்றி எடுத்துச் செல்லப்பட்ட 7 குவிண்டால் 40 கிலோ எடையுள்ள 18 சிப்பங்கள், தூசி காவல் நிலையத்திற்கு முன்னால், கைப்பற்றப்பட்டது. சம்பந்தப்பட்ட நபர்கள், கொள் முதல் செய்வதற்கென அந்த அரிசியைக் கொடுக்க முன் வந்ததன் பேரில், அந்த அரிசி முழுதும் அரசுக் கணக்கில் கொள்முதல் செய்யப்பட்டது.

திரு. கே. எ. வகாப்: வட ஆர்க்காடு மாவட்டம் உபரியான மாவட்டம்; குறைந்த பட்சம் அங்கிருந்து சென்னைக்கு அரிசி எடுத்து வருவதற்கு நம்முடைய அரசு அனுமதி அளிக்குமா? இந்தத் தடைகள் சென்னைக்கும் வடஆற்காட்டுக்கும் ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வட ஆற்காடு மாவட்டம் உபரி மாவட்டம் என்ற காரணத்தால்தான் லெவி முறை வைத்திருக்கிறோம். சென்னைக்குச் சொந்த உபயோகத்திற்கு எடுத்து வருவதாக இருந்தால் பர்மிட் வாங்கி எடுத்துக் கொண்டு வரலாம்.

திரு. நா. வீராசாமி: விவரம் தெரியாத பொது மக்கள் இப்படி அரிசியை 20 படி, 30 படி என்று பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு வருகிறார்கள். கண்டக்டர்களும், டிரைவர்களும் இதை ஏற்ற முடியாது என்று சொல்லி விட்டால் இப்படிப்பட்ட சங்கடங்கள் வராது. ஆகவே, போக்குவரத்துத் துறையிலிருந்து கட்டாயமாக இது மாதிரி அரிசி ஏற்றுவதை அனுமதிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டால் பயணிகளுக்குச் சௌகரியமாக இருக்கும் என்பதால் அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியின் மூலம் போக்குவரத்துத் துறையினர் இதிலே கவனம் செலுத்துவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பர்மிட் வாங்கி அரிசி கொண்டு போகிறவர்கள் ஒரே பர்மிட்டை வைத்துக் கொண்டு பல முறை அரிசியை ஏற்றிப் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒருமுறை அரிசி கொண்டுபோய்விட்டால் அந்த பர்மிட்டிலே எண்டார்ஸ் பண்ணுகிற ஏதாவது முறை கையாளப்படுகிறதா இல்லையா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: அங்கத்தினர் சொல்வதிலிருந்து திருடர்கள் பல வழிகளில் முயற்சிக்கிறார்கள் என்பது தெரிகிறது. குறிப்பிட்ட கேஸ் சம்பந்தமாக அவர்கள் சொல்லுவார்களானால் நடவடிக்கை எடுக்க முடியும். அவர்கள் கூறியது போன்ற விதிமுறைகளை வைத்திருக்கிறோம். அதையும் மீறி சமுதாய விரோதிகள் இப்படிச் செய்கிறார்கள் என்பது உண்மை.

திருமதி. த. ந. அனந்தநாயகி: அடிக்கடி இந்த விதிமுறைகள் மாற்றப்படுவதன் காரணமாக என்ன விதிமுறைகள் இருக்கின்றன என்பதே தெரியாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த விதிமுறைகள் மாற்றப்

படுகின்ற நிலையில் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தக்க விளம்பரம் கொடுக்க முன் வருவார்களா ? சில சமயங்களில் பர்மிட் வைத்துக் கொண்டிருந்தாலும் பிடித்துக் கொள்ளுகிறார்கள். இந்த நிலைமையை எல்லாம் போக்கும் வகையில் விளம்பரம் செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கம் ஏற்கனவே இதைப் பற்றி எல்லா விவரங்களும் பொது மக்களுக்குத் தெரியும்படி விளம்பரப்படுத்தியிருக்கிறது. தங்களுடைய சொந்த உபயோகத்திற்குக் கொண்டு வருகின்றவர்கள் பர்மிட் வாங்கிக் கொண்டு தாராளமாகக் கொண்டு வரலாம். இது அனைவருக்கும் தெரிந்த உண்மை. இந்த விதிமுறைகளை அடிக்கடி மாற்றுவதாக அராங்கத்திற்கு உத்தேசம் இல்லை. பொதுவாக, பத்து கிலோ கிராமுக்குக் கீழ் யார் வேண்டுமானாலும் அரிசி எடுத்துக் கொண்டு வரலாம். யாரும் பிடிக்கமாட்டார்கள். அதற்கு மேல் எடுத்து வரவேண்டுமென்றால் அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்று எடுத்துக் கொண்டு வரவேண்டும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஏழைகள் நிறையப் பேர் சென்னையில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பத்து படி, பதினைந்து படி என்று அரிசி எடுத்து வரத் தடை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பதினைந்து படி வரை அவர்கள் அரிசி எடுத்துவர அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அங்குள்ள வட்டாட்சித் தலைவரிடம் பெர்மிட் வாங்கி எடுத்து வந்தால் பிடிக்க மாட்டார்கள். அதுவே அதற்குப் பாதுகாப்பாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது பத்து கிலோ வரையில் கொண்டு வரலாம் என்று சொல்கிறார்கள். பத்து கிலோ என்பது மிகவும் குறைவானதாகும். ஆகவே 15 கிலோ என்று ஆக்கினால் கிட்டதட்ட பத்துபடி வரும். அதையாவது அதிகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பத்து கிலோவிற்குக் கீழே கொண்டு வரலாம் என்று சொன்னேன். இதுவே பல முறை சென்றால் அதிகமாகிவிடும். 15 என்று ஆக்கினால் அதை 20 என்று ஆக்க வேண்டும் என்று சொல்வார்கள். இருப்பதே போதும் என்று நாங்கள் கருதுகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : எல்லையோரப் பகுதிகளில் லாரிகளில், வண்டிகளில் போவதைத் தடுக்க முடிகிறது. குறுக்கு வழியே கால்நடைகளின் மீது மூட்டைக் கணக்கில் அரிசி வெளி மாநிலங்களுக்கு கடத்திச் செல்கிறார்கள். அது சம்பந்தமாக ஏதாவது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு நிறைய அனுப்பப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது போன்று புகார்கள் வந்து நிறைய பிடித்து இருக்கிறோம். தலையில் தூக்கிச் செல்கிறார்கள். கழுதைகளின் மேல் ஏற்றிச் செல்கிறார்கள். குறுக்கு பாதையில் வழி கடத்திச் செல்கிறார்கள். இவைகளை எல்லாம் பிடிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் போலீஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். கழுதைகளின் மேல் ஏற்றி அனுப்புகிறார்கள். ஆள் இல்லாமல் 100, 200 கழுதைகள் காடுகள் வழி போய்க் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு நல்ல பழக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள், கேரளாவிற்குப் போவதற்கு. அக் கழுதைகளைப் பிடித்து அவைகளைக் கொண்டு வந்து பட்டியில் அடைத்து ஏலம் போட்டிருக்கிறோம். விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: அம்பாசமுத்திரம், செங்கோட்டை, தென்காசி போன்ற மூன்று தாலுகாக்களில் செக்போஸ்ட்ஸ் இப்போது போடப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக மாஞ்சோலைப் பகுதிகளில், மலைப் பகுதிகளில் வசிக்கும் ஏழைத் தொழிலாள மக்களுக்கு அங்கிருந்து உணவு தானியங்கள் கொண்டு போவதற்கு பல சிரமங்கள் இருந்து வருகின்றன. ஆகவே அவர்களுக்கு மட்டும் விதி விலக்கு அளிக்கக் கூடிய வகையில் கலெக்டருக்கு ஏதாவது உத்தரவு பிறப்பித்தால் நன்மையாக இருக்கும். அதை அரசு உடனடியாகக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: அந்தப் பகுதியில் செக்போஸ்ட்ஸ் போடப்பட்டிருப்பது உண்மைதான். போட்டிருக்கிறோம். அதிகக் கள்ளக் கடத்தல் ஆகியிருக்கிறது என்ற தகவல் வந்ததால் எல்லையோரம் முழுவதும் அரசாங்கக் கடைகளை வைத்து அரிசி எவ்வளவு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாட்டை விதித்து அதிகமாகப் போக முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அப்படி எடுத்துச் சென்று பழக்கப்பட்டவர்கள் இப்படிக் கட்டுப்பாடு விதிக்கும் போது கஷ்டப்படுகிறார்கள். அப்படி எடுத்துச் சென்றவர்கள் எடுத்துச் செல்லாமல் இருப்பதற்கு வழி செய்கிறோம். அதல்லாமல் யாவரையும் கொடுமைப் படுத்த வேண்டும் என்ற நோக்கம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கழுதைகள் பிடிபட்டதாகச் சொல்கிறார்கள். அப்படி எவ்வளவு கழுதைகள் பிடிபட்டன? எவ்வளவு நாட்கள் பட்டியில் அடைத்து வைக்கப்பட்டு பின்னர் ஏலம் போடப்பட்டது? அதனால் எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்ற தகவல் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கழுதை பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, almost all the Southern States i.e., Madras, Andhra and Mysore have become self-sufficient in respect of paddy and rice production. May I know from the Hon. Minister for Revenue whether he will consider removing the ban on inter-state movement of rice and constitute a single unit?

THE HON. THIRU P. U. SHANMUGAM : I hope, Sir, the Hon. Member will not forget that there is a great syphon in Kerala.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கழுதைகள் அரிசி ஏற்றிச் சென்றதைப் பிடித்துக் கொண்டு வந்து ஏலம் போட்டதாகச் சொன்னார்கள். இந்தியன் பீனல் கோட் சட்டப்படி மென்ஸ்ரியா, க்ரிமினல் இன்டன்ஷன் இருந்தால்தான், குற்றம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்தால்தான் தண்டிக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அப்படியிருக்கும்போது கழுதைகள் அவைகளை சுமந்து செல்கின்றன என்றால், அவைகள் மீது குற்றஞ் சாட்டுவது என்றால் அவைகளின் மீது க்ரிமினல் இன்டென்ஷன் அட்ரிப்யூட் செய்வது நியாயந்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : வழக்கறிஞர் அவர்களது வாதத்தை கழுதைகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டாம். நாட்டு மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: இந்தக் கள்ளக் கடத்தலில் கழுதைகள் ஈடு பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதைக் கழுதைகள் தாமே கொண்டு போவதில்லை. அந்தக் கழுதைகளின் மேல் ஏற்றி அனுப்புகிற மனிதர்கள் பிடிபட்டார்களா ? அவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது. ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சில பேர்கள் அப்படி கிடைத் திருக்கிறார்கள். அவர்கள்மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கழுதைகள் மேல் ஏற்றிவிட்டு காடுகளில் யாருக்கும் தெரியாமல் நடந்து செல் கிறார்கள். 100, 200 என்று கழுதைகள் செல்வதைப் பிடிக்க வேண்டி யிருக்கிறது. பயங்கரமான யானைகள் நிறைந்த காடுகளில் பிடிப்பது கூட சில சமயங்களில் சிரமமாகயிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கழுதைகள் பிடிபட்டு கோர்ட்டில் நிறுத்தப்பட்டால் அதற்காக வாதாட ஏதாவது வக்கீல்களை இந்த அரசாங்கம் நியமிக்கிறதா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : யாராவது வழக்கறிஞர்கள் அப்படி வருவார்களேயானால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. கே. எ. வகாப் : தமிழ்நாடு, கேரளா எல்லையோரங்களில் இப்படி இப்போது கண்காணிப்பு அதிகமாக இருப்பதன் காரணமாக தமிழ் நாட்டின் எல்லையோரங்களில் இருக்கிற மக்களுக்கு அரிசி அதிகம் கிடைக் காத ஒரு சூழ்நிலை இருப்பதாக அங்கிருந்து புகார்கள் வந்துள்ளன. ஆகவே அங்கு அதன் விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே அதைக் கட்டுப்படுத்த எல்லையோரப் பகுதிகளில் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி விலையைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தமிழ்நாடு எல்லையோரத்தில் உள்ள ஐந்து மைல்களுக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் அனை வருக்கும் ரேஷன் கடைகளைத் துவங்கி அரிசி கொடுக்க வேண்டுமென்று

விலையை அந்தந்த மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் அவ்வப்போது நிர்ணயிக்கும்படி புதிதாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. எனவே விலை அதிகம் செல்லும் என்று பயப்படத் தேவையில்லை. வியாபாரி களின் லாபம் போக என்ன விலைக்கு விற்க வேண்டும் என்று கட்டுப் படுத்த அதிகாரம் தந்திருக்கிறோம்.

சிறிய கார்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

* 801 விஞ : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு கார் தயாரிக்கும் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் ஏற்படுத்த முயற்சிகள் எவையேனும் அரசால் மேற்கொள்ளப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டப்பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த விவர அறிக்கைப்படி தமிழ்நாட்டில் ஆவடியில் ஒரு சிறிய கார் தொழிற்சாலை துவங்குவதற்கு மத்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. இந்தத் தொழிற்சாலை துவங்குவதற்கு உரிய மொத்த மூலதனம் எவ்வளவு? எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் ப்ரோடோடைப் கார் செய்த பின்னர்தான் சொல்ல முடியும். எவ்வளவு முதல் தேவை என்று கணக்குச் சொல்ல முடியாது.

திரு சு. துரைசாமி : மாதிரி கார் அமைப்பதற்கு முயற்சிக்கிறார் கள். கோவை டெக்ஸ்டூல் கம்பனியால் ஐந்தாண்டுகளுக்கு முன்பு மாதிரிக் கார் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதையே ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு இந்தத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு விரை வாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மாதிரிக் கார், ப்ரோட்டோ டைப் கார் செய்வதற்கு இரண்டு லட்சம் ரூபாய் நிதி உதவி கேட்டிருக்கிறார்கள். இந்த டெக்ஸ்டூல் கம்பனி, இப்போது நம் நிர்வாகத்தில் இருப்பதால் அந்தக் கம்பெனி மூலம் உதவி செய்யலாமா என்பதைப் பற்றி பரிசீலித்து வருகிறோம்.

திரு. கோவை செழியன் : கார் என்றால் முன்பெல்லாம் அது ஒரு லக்ஷுரிப் பொருளாக இருந்தது. ஆனால் இப்போது அது வாழ்க்கை யில் இன்றியமையாத ஒரு பொருளாக ஆகிவிட்டது. ஆனால் கார் வாங்கலாம் என்றால் 30,000 ரூபாய்க்குப் பக்கம் ஆகிவிடுகிறது. எனவே காரின் அமைப்புகளை தரமானதாகவும்—ஆனால் லக்சுரியாகயில்லாமல் —நமது தேவைகளை அடிப்படையாக வைத்து அதன் செலவைக் குறைத்து 10,000 ரூபாய்க்குக் கீழ் வருகிற மாதிரி ஹார்ஸ் பவரைக் குறைத்து, பெட்ரோல் கன்ஸம்ஷன் குறைவாக இருக்கும் வகையில் அமைக்குமாறு அரசாங்கம் ஆலோசனை கூறுமா ?

* 117-118ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கார் உற்பத்தி செய்கிற தொழிற் சாலை சொந்தக்காரர்கள் காரோடு காம்பொணண்ட்ஸ், காருக்குப் போடும் வரி இவற்றைக் குறைத்தாலே விலை குறைந்துவிடும் என்று வாதாடு கிறார்கள்.

திரு. வீ. மலைக்கண்ணன் : இந்தச் சிறிய கார் தயார் செய்வதில் இந்தக் காரில் எவ்வளவு பேர்கள் பயணம் செய்யலாம்? சாதாரண மக்கள் பயன்படுத்தும் வகையில் இதன் விலை அடக்கமாக இருக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படித்தான் எதிர்பார்க்கப் படுகிறது. எவ்வளவு பேர்கள் என்பது கார் வந்ததற்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

திரு. செ. கந்தப்பன் : பிரெஞ்சு நாட்டில் ரெனால்ட் கார் பொதுத் துறையில் உற்பத்தி செய்ய அரசாங்கம் ஒத்துக்கொண்டு விட்டதாக இன்று செய்தி ஏடுகளில் தகவல் காணப்படுகிறது. இந்தப் பின்னணியில் நம் தமிழகத்திலும் ஒரு சிறிய கார் தொழிற்சாலை நிறுவுவதற்கு வாய்ப்புக்கூறுகள் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறைந்த விலையில் சிறிய கார் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டம். அதற்காக உலகத்திலுள்ள பல நாடுகளிலிருந்து அவர்கள் ஆலோசனை கேட்டிருந்தார்கள். இன்று பிரெஞ்சு நாட்டு கருத்தை ஏற்றுக்கொண் டுள்ளதாக ஒரு குறிப்பு பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அரசுக்கு அதைப் பற்றித் தகவல் இல்லை. நமக்குக் கொடுத்திருக்கக்கூடிய அனுமதி பொறுத்த அளவிற்கு நம் சொந்தத்தில் டெக்னிக்கல் கொலா பரேஷன் இல்லாது உற்பத்தி செய்வதற்கு இயலுமானால் என்று சொல் லித்தான் இந்த அனுமதியைத் தந்திருக்கிறார்கள். இந்த முயற்சி வெற்றியடையுமானால் விலையில் போட்டியோடு விற்பதற்கு வாய்ப்பிருக்கும்.

THIRU K. M. SUBRAMANIAM : Does this Government consider that in the most poor country like India with 52 crores (A VOICE : 55 crores) of people—yes, 55 crores subject to correction—whether the manufacture of cars is a priority industry and whether we should enter with our limited resources into that, whether we can afford manufacturing cars however small they be even with Rs. 10,000 a car it would be impossible for our poor people to invest and in view of all this, does this Government think about manufacture of small cars that it is necessary ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்றைய உலக நிலையில் கார் நம் நாட்டுக்குத் தேவை இல்லை என்று ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. இப்போதுகூட கார் வேண்டுமென்று பணம் கட்டியவர்கள் காத்திருக் கிறார்கள். அதிகமான விலையில் விற்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அது ஒன்றே போதும் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து கார் தேவைப்படுகிறது என்பதைக் காட்டுவதற்காக.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, வளர்ந்து வருகிற பொருளாதாரத்தில் கார்களின் மார்கெட்டுகள் இப்போது அதிகமாகிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, நம்முடைய அரசாங்கம் ஏதாவது மேல்நாட்டோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, பொதுத்துறையில் லாபம் ஈட்டும் கார் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த விரைவில் முயலுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதை மத்திய அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஆட்டோ மொபைல்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ் என்ற முறையில் மிகுந்த அளவுக்கு பல ஆண்டுகளாகத் தொழில் வளர்ச்சி மிகுந்து இருக்கிற காரணத்தால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அந்தப் புதிய சிறிய கார் தொழிற்சாலைத் திட்டத்தை பொதுத்துறையில் நம்முடைய மாநிலத்திற்கு தருவது தான் நியாயம் என்று எடுத்துக் கூறியிருக்கிறோம். அப்படித் தருவார்களானால், நம்முடைய அரசாங்கம் அதைப் பங்கேற்று நடத்தத் தயார் என்றும் சொல்லியிருக்கிறோம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, அந்த சிறிய கார் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் நேரத்தில் கோவை அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு போன்ற அறிவாளிகளின், தொழில் மேதைகளின் அறிவுத் திறன் பயன்படுத்திக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யாருடைய அறிவைப் பயன்படுத்துவதற்கும் தடையில்லை.

Neyveli Lignite for Salem Steel Plant

*802 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to use Neyveli Lignite for Salem Steel Plant ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த நிலக்கரியை கோக்காக மாற்றி இரும்பு செய்வதை விட மின்சாரத்தைப் பயன்படுத்தி உருக்காக்கினால், அந்த உருக்கு எந்த அளவுக்கு சிக்கனமான விலையில் கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மின்சாரம் ஒரு கட்டத்தில் பயன் படுத்தப்பட வேண்டும். இந்த கோல் வெளி மாநிலத்திலிருந்து கொண்டு வரலாம், இந்த இரண்டு கருத்துக்களும் மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக பிராஜக்ட் ரிப்போர்ட்டில் எது பொருத்தமாக இருக்கும், மின்சாரம் உகந்த தாக இருக்குமா, அல்லது பழுப்பு நிலக்கரி உகந்ததாக இருக்குமா, என்று குறிப்பிட்டு இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1964-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையில் நம்முடைய நெய்வேலி லிக்னைட் பயன்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். காரணம் அன்றைக்கு அதிலே சல்பர் ·5 சத விகிதம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. இப்போது பல இடங்களில் நெய்வேலியில் லிக்னைட் எடுப்பதால், இன்றைக்கு ஆராய்ச்சிப்படி, ·77 சதவிகிதத்திலிருந்து 1·72 சதவிகிதம் வரையில் சல்பர் இருப்பதால், லிக்னைட் தேவையில்லை என்ற முடிவிற்கு வந்து விட்டார்கள். இப்போது மின்சாரத்தையும், வெளிமாநிலத்திலிருந்து நிலக்கரியையும் கொண்டு வருவதுபற்றி பரிசீலித்து வருகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்து இருந்தார்கள். அந்த நிலைமை எப்படியிருக்கிறது ? அது செயல்படுமானால், இந்த சல்பர் கன்டன்ட் அதில் குறைவாக இருக்கலாம் அல்லவா? அப்படி வருகிற போது நெய்வேலியிலிருந்து, சேலம் வரையில், இப்போது ஜெர்மனியில் இருக்கும் ரூரல் பெல்ட் மாதிரி சுரங்கம், நிலக்கரியும், இரும்பும் வரக் கூடிய ஒரு பகுதியாக அதை வளர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நெய்வேலி லிக்னைட்டில் இரண்டா வது கட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று மாநில அரசின் சார்பில் வலியுறுத்தி வருகிறோம். அப்படி ஆரம்பித்ததற்குப் பின்னாலே, மாண்புமிகு அங்கத்தினர் சொன்னதுபோல் சல்பர் கன்டன்ட் குறைவாகக் கிடைக்கு மானால், அதைப் பயன்படுத்துவதைப் பற்றி மத்திய அரசு கவனிக்கும் என்று நம்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்போது நெய்வேலி பழுப்பு நிலக்கரியில் சல்பர் கன்டன்ட் அதிகமாக இருப்பதால் வெளிநாட்டிலிருந்து கோக் கொண்டு வந்தால் காஸ்ட் ஆப் ப்ரொடக்‌ஷன் அதிகமாகுமா ? எவ்வளவு வித்தியாசம் இருக்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றி மத்திய அரசாங்கம் பரிசீலித்து வருகிறார்கள் என்று சொன்னேன். ஜப்பான் நாட்டிலே இரண் டையும் வெளிநாட்டிலிருந்து பெறுகிறார்கள். அது மட்டுமல்ல, நம்முடைய சேலம், திருவண்ணாமலை கனியையும் எடுத்துச் சென்று அங்கே பயன்படுத்த முடியும் என்று சொல்லும்போது மத்திய அரசாங்கம் அது சரியல்ல என்று சொல்லாது என்று நம்புகிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : சார் இந்த சேலம் லிக்னைட் விஷயத்தை மத்திய சர்க்கார் மின்சாரத்தை கன்ஷசன் ரேட்டில் கொடுக்க வேண்டு மென்று சர்க்காரைக் கேட்டு இருக்கிறார்களா ? அப்படியானால், சர்க்கார் பதில் என்ன சொன்னார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அவர்கள் சில கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். ஆனால் குறைந்த விகிதத்தில், குறைந்த விலையில் தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு என்பதற்கு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு அரசுகளின் கருத்தை வெளியிடுவது சரியல்ல என்று நினைக்கிறேன்.

Iron Deposits in Kavuthimalai Hill.

*803 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that there is an iron indication or deposit in the Kavuthimalai Hill area near Thiruvannamalai in North Arcot District ; and

(*b*) if so, the details thereof and the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் (United Nations Development Programme) உதவியோடு தமிழ்நாடு கனிவள ஆராய்ச்சிப் பிரிவு (Tamil Nadu Mineral Development Project) கவுத்திமலை, வேடியப்பன்மலை மற்றும் திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள பிற மலைகளிலும், சுமார் 140 மில்லியன் டன் இரும்புத் தாதுக்கள் கிடைக்கும் எனக் கண்டுபிடித்துள்ளது. இந்த இரும்புத் தாதுக்களை காந்தத்தின் மூலம் செறிவு படுத்த முடியும் என விரிவான ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வருகின்றது. ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் விவர அறிக்கை தயாரிக்கும் திட்டங்களில் இதையும் ஒன்றாகச் சேர்க்கக் கோரும் இவ்வரசின் கோரிக்கை மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, கவுத்திமலைப் பகுதியை அண்மையில் அமைச்சரவர்கள் சென்று பார்த்தார்கள். அப்போது ஜப்பான் நிபுணர்கள் அங்கே ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன கருத்தை வெளியிட்டார்கள் ? அமைச்சர்கள் இடத்தில் என்ன சொன்னார்கள் ? அதை உடனடியாக ஆரம்பிக்கும் ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இரும்புக்கனியும் கிட்டத் தட்ட சேலம் இரும்புக்கனியைப்போல் "ஃபி" கன்டன்ட் இருப்பதாகக் கண், பிடித்து உள்ளார்கள். ஜப்பான் நிபுணர்கள் இரண்டு நிறுவனத்தினர் (Messrs. Toyo Menka KaishaLimited and M/S Maruberi ii DA. Company Limited) அந்த இரும்புத் தாதுவை எடுத்துச் சென்று பரிசீலித்து அவர்களுடைய அறிக்கையை நம்முடைய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறுர்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, திருவண்ணுமலை, கவுத்திமலைப் பகுதியில் ஜப்பான் நாட்டு நிபுணர்கள் வந்து ஆராய்ச்சி செய்திருக்கிறுர்கள் என்று சொன்ஞர்கள். அந்தப் பகுதியில் இருக்கும் மற்ற மலைகளிலும் இரும்பு ஆராய்ச்சி செய்யப்படும் என்று குறிப்பிட்டார்கள். நான் இந்த மன்றத்தில் அடிக்கடி குறிப்பிடும் எனது பகுதியில் உள்ள மாணிக்கவல்லி மலையிலும் ஓரளவு இரும்பு இருக்கிறது. அந்த இடத்திலும் ஜப்பான் நிபுணர்களை ஒரு முறை அந்தப் பகுதியில் ஆராய்ச்சி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இரும்புக்கனி பற்றி ஆராய்ச்சி செய்வது நாம்தான். அந்த மலையில் மட்டும் அல்ல, எல்லா மலையிலும் தொடர்ந்து செய்யப்படும். ஜப்பான் நிபுணர்கள் இந்த இரும்பை எடுத்துச் சென்று, எந்த வகையில் தொழில் தொடங்கலாம் என்று ஆராய்ச்சி செய்து வருகிறுர்கள்.

மேட்டூர் வட்டத்திற்கு சிறிய அணைத் திட்டங்கள்

*804 வினு திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மேட்டூர் தாலுகாவில் பாலமலை காரு, கார்டு என்ற இரண்டு சிறிய அணைத் திட்டங்கள் கீழ் மட்டத்தில் பரிசீலனை முடிந்து அரசாங்கத் திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், மேற்படி திட்டங்கள் எப்போது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) & (இ) முல்லிக்காடு கிராமத்திற்கு அருகில் உள்ள பாலமலை ஓடையின் குறுக்கே கண்மாய் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. கார்டுகாடுக் கிராமத்திற்கு அருகே உள்ள தும்பல் காட்டுப் பள்ளத்தின் குறுக்கே ஒரு ஏரி அமைக்கும் திட்டம் தல அதிகாரிகளின் மறு பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார் இந்த தும்பல் காட்டுப் பள்ளத் திட்டத்தில், அங்கே தண்ணீர் தேங்கி நிற்பதற்கு காட்டிலாக்கா நிலம் வழங்கவில்லை என்று சொல்லுகிறுர்கள். நிலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? இந்த திட்டங்களெல்லாம் தவிர, கருங்காடு, கொத்தநேரி, தோணி மடுவு போன்ற திட்டங்கள் 1967-ல் இருந்து பெண்டிங்காக இருக்கிறது. அது எப்போது அமல் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த தும்பல் காட்டுப் பள்ளம் ஏரி விஷயமாக வருவாய் வாரியம் சேலம் மாவட்ட ஆட்சியாளர் எடுத்துக்கூறிய கருத்துக்களின்படி குறைந்தளவு வனநில ஆர்ஜிதம் உள்ள வகையில் இத்திட்டத்தை மறு பரிசீலனை செய்யுமாறு தலைமைப் பொறியாளரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தத் திட்டம் சேலம், தருமபுரி வட்டம் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

சிமிட்டிச் சாலைகள்

* 805 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சிமிட்டிச் சாலைகள் அமைப்பது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

மதுரை மாவட்டத்திலுள்ள அணைக்கட்டுகள்

* 806 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டத்தில் உல்லாசப் பயணிகள் காண்பதற்குரியவையாக அரசு அங்கீகரித்துள்ள அணைக்கட்டுகள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

மதுரை மாவட்டத்தில், வைகை நதி அணைக்கட்டும், மஞ்சளாறு அணைக்கட்டும், உல்லாசப் பயணிகள் காண்பதற்குரியவை. இப்பொருள் பற்றி அரசு எதும் அங்கீகாரம் அளிக்கவில்லை.

வேதாரண்யத்திலுள்ள நினைவுச் சின்னத்துக்குச் செல்ல சாலைகள்

* 807 வினா—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் நடந்த இடத்திலுள்ள நினைவுச் சின்னத்தை மக்கள் சென்று காண சாலைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Storm at Rameswaram.

*808 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether a storm hit Rameswaram on 20—7—1971 ; and

(*b*) if so, the details of damage and dislocation caused ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : 20—7—71-ஆக இல்லாமல் இருக்கலாம். அந்த மாதத்தில் அம்மாதிரி ஒரு புயல் அடித்து சேதங்களெல்லாம் ஏற்பட்டதே. அந்த மாதிரி ஏதாவது புயல் அடித்து சேதங்கள் ஏற்பட்டதா ? 1964-ம் வருஷம் புயல் அடித்து பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறதே. அடிக்கடி புயலினால் பாதிக்கப் பட்டு சேதம் ஏற்படுகின்ற ஒரு தீவாக இராமேஸ்வரம் இருப்பதினால் என்ன பாதுகாப்பு நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 20—7—71 புயல் அடித்த தாக பத்திரிகையிலே செய்தி வெளிவந்தது. ஆனால் புயல் அடித்தது என்பது உண்மை அல்ல. பத்திரிகையில் அப்படி ஒரு செய்தி வந்தது என்பது உண்மை. பத்திரிகையில் மட்டும் புயல் அடித்ததே தவிர உண்மையாக புயல் அடிக்கவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் அறிய விரும்புவதெல்லாம் 1964-ம் வருடம் புயல் அடித்தது என்பது உண்மை. அம்மாதிரியாக இந்தத் தீவில் புயலினால் பாதகங்கள் ஏற்பட்டால் அதைத் தடுப் பதற்கு மக்களுக்கு பாதுகாப்பான நடவடிக்கை ஏதாவது அரசு எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, புயல் வருகிறது என்று தெரிந்தால். புயல் சின்னம் என்ற ஒரு கொடியை துறைமுகத்தில் நாட்டுகிறார்கள், உயர்த்துகிறார்கள். அதிலிருந்து புயல் சீக்கிரம் வர முடியும் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்டோரா போடுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பத்திரிகையில் மாத்திரம் புயல் அடித்தது என்று சொன்னார்கள். தினத்தந்தி பத்திரிகையிலா அல்லது வேறு ஏதாவது பத்திரிகையில் புயல் அடித்ததா ?

1972 மார்ச் 30]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சொன்னால் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: புயல் அடிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். புயல்போன்று ஏதாவது அடித்து, அதனால் ஏதாவது சீர்குலைவு ஏற்பட்டதா? சீர்குலைவை சீரமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: புயலினால் சீர்குலைவு ஏற்படவில்லை. காற்று என்பது, காற்று, பெருங் காற்று, புயல், கடும் புயல், என்று நான்கு வகையாகப் பிரிக்கப்படும் அன்று கொஞ்சம் வேகமாக காற்று அடித்தது. எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை.

கைக்குத்தல் அரிசி தயாரிப்புத் தொழிற்சாலை

*809 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நமது மாநிலத்தில் கைக்குத்தல் அரிசி தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஏதேனும் தற்போது உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கைக்குத்தல் அரிசி தயாரிக்கும் கூட்டுறவுக் கழகங்கள் 129 உள்ளன.

திருமதி த. ந. அனந்தநாயகி: கூட்டுறவுக் கழகங்களெல்லாம் லாபத்தில் நடைபெறுகின்றனவா? கைக்குத்தல் அரிசிக்கு மக்களிடையே அதிக தேவை இருக்கிறது என்று ஏதாவது இந்த அரசாங்கத்திற்கு தெரியவந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இதில் உள்ள 81 கூட்டுறவுக் கழகங்கள் நஷ்டத்தில் நடைபெறுகின்றன. 25 லாபத்தில் நடைபெறுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the fact that handpounded rice is supposed to be healthier, is there any proposal with the Government to encourage hand-pounding by co-operative societies and arranging marketing organisations so that people will know where to buy and how to get it?

The Hon. THIRU SI. PA. ADITANAR: Sir, most of the handpounded rice is now not sold to the public; it is sold to the jails, hospitals and hostels; at the moment, the requirements of jails, hospitals and hostels are being met by the hand-pounding of paddy societies.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கைக்குத்தல் அரிசி மிகவும் சத்துள்ள அரிசி. ஆகவே அது ஆஸ்பத்திரிகளுக்கும், ஜெயில்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்று கூறினார்கள். பொது மக்களும் அதை விரும்பி சாப்பிடுகிறார்கள். ஆகவே, கைக்குத்தல் அரிசி நல்ல சத்துள்ள உணவு என்று கூட்டுறவுத் துறை நல்ல பிரசாரம் செய்ய முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பொதுமக்களுக்கு எது நல்லது, எது நல்லது அல்ல என்று தெரியும் என்று கருதுகிறேன். அதற்காக தனியாக பிரசாரம் எதுவும் தேவையில்லை. பொது மக்கள் கைக்குத்தல் அரிசி சாப்பிடுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : கைக்குத்தல் அரிசியை ஆஸ்பத்திரிகளுக்கும், ஜெயில்களுக்கும் அனுப்புவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி அனுப்பியும்கூட, அவர்களுக்கு விற்பனை செய்தும்கூட, இதில் நஷ்டம் வருவதற்குக் காரணம் என்ன ? ஒரு வேளை இந்த அரிசிக்கும், மற்ற இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்படுகிற அரிசிக்கும் விலைகளில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ? விலைகளில் ஏதாவது வித்தியாசம் இருந்தால், விலையை சீர்படுத்திக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது சப்ஸிடி தருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூட்டுறவுத் துறையின் மூலம் தயாரிக்கப்படுகின்ற அரிசி மொத்தத்தில் ஐந்து சதவிகிதம் அதிக விலையில் தான் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள்கூட குறிப்பிடுகிற பொழுது அநேக நோய்கள் வைடமின் சத்துக்கள் இல்லாமையினால் ஏற்படுகின்றன என்று கூறினார்கள். அப்படி இருக்கும்பொழுது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், கைக்குத்தல் அரிசியில் சத்து வண்மைகளெல்லாம் இருப்பதனால் மக்களிடையே பிரசாரப்படுத்த வேண்டும் என்று அவசியத்தை அறிந்திருக்கிறார்களா ? மக்களே புரிந்து கொள்வார்கள் என்று சொன்னார்கள். நல்ல பல திட்டங்கள் இருந்தாலும் மக்கள் அவைகளுடைய பலனை அறியாமல் இருக்கிறார்கள். ஆகவே, பிரசாரம் மிகவும் அவசியம் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கைக்குத்தல் அரிசியினால் ஏற்படுகிற நன்மை மக்களுக்கு ஏற்கெனவே, தெரியும். தனியாக பிரசாரம் தேவையில்லை இந்தத் துறையிலே. இன்பர்மேஷன் அண்டு பப்ளிஸிடி டிபார்ட்மெண்டில் ஏதாவது, பிரசாரம் செய்வதாக இருந்தால் அதுபற்றி அந்தத் துறையில் நன்றாக ஆய்வார்கள் என்று கருதுகிறேன்.

1972 மார்ச் 30]

திரு. தி. பொன்னுமலே : கைக்குத்தல் அரிசி என்று சொல்லி சில கூட்டுறவுத் துறை கடைகளில் மெஷினில் அறைத்த அரிசியை வாங்கி பல ஜெயில்களுக்கும் விநியோகம் செய்கிருர்கள். அதுபற்றி என்னுடைய தொகுதியிலே கூட அமைச்சரிடத்தில் ஒரு புகார் எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதுபற்றி இன்னும் நடவடிக்கை இல்லே. இதைப் போல பல இடங்களில் நடைபெறுவது பற்றி அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ? அப்படியிருந்தால் எத்தனே பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இம்மாதிரியான புகார் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், வேறு பலரும் கொடுத்திருக் கிருர்கள். அந்தப் புகார்களெல்லாம் அவ்வப்போது ஆராயப்பட்டு, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். முத்தையா : கைக்குத்தல் அரிசி மிகவும் சத்துள்ளது என்ற காரணத்தினுல் கைக்குத்தல் அரிசியை அமைச்சர் அவர்கள் தினம் ஒரு தடவையாவது சாப்பிடுகிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர் : தலேவர் அவர்களே அவர்களுக்கு ஒருவேளே தெரிந்திருக்காது. நான் அரிசியே சாப்பிட்டு வதில்லே (சிரிப்பு).

திரு. கோவை செழியன் : பேரவைத் தலேவர் அவர்களே, 1972-வது ஆண்டிலே இன்னும் கையினுலே அரிசியைக் குத்தி சாப்பிடுவது என்பது நகைப்புக்குரிய ஒன்ருகும். காலப்போக்கில், காலம் போகிற போக்கில் பழைய நிலேயிலேயே நிற்காமல், அரிசியின் சத்துப் போகாமல் அரிசி அறைக்கின்ற மெஷினில் இரும்பு ராடுக்குப் பதிலாக, ரப்பர் போட்டு அறைத்தால் சத்து குறையாது. குவாலிடி ஹல்லர் என்று கையினுலே சுற்றக்கூடிய சிறிய மோட்டார் வைத்து சுற்றக்கூடிய ஒரு மெஷின் வந்திருக்கிறது. கைக்குத்தல் அரிசி சத்து பூராவும் அதில் அறைத்த அரிசியில் இருக்கிறது. ஆகவே, அதுபற்றி விளம்பரப் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கைக்குத்தலுக்குக்கூட ஓரளவுக்கு இயந்திரத்தை புகுத்தலாம் என்று எண்ணி, அதற்கு ஒரு சிறிய இயந்திரத்தைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்தோம். அதைத் திருமிழிசை என்ற ஊரில் நடைமுறையில் ஓட்டிவருவது என்று முடிவு செய்திருக்கிறேம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Hon. Minister aware that it is not only useful in meeting the health requirements, it also solves unemployment problem, because many ladies use it as their main occupation ? Will the Hon. Minister consider giving small mills for individual cottage families, so that they can use it, produce rice without destroying the protein contents, small mills electrically operated and equipped with machinery for preserving vitamins ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, the small technological improvement that has been devised has been introduced. It is electrically operated; there is a small size sheller with some rubber part. The unemployment problem is also very much in the mind of the Government. I may assure the Hon. Member that even though in several of the village industries technological improvements have been introduced, care has also been taken that no person is thrown out of employment.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, கைக்குத்தல் அரிசி சத்துள்ள உணவு என்று பிரச்சாரம் செய்யவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் மில்லில் தீட்டப்படும் அரிசி சத்துள்ள உணவு இல்லை என்று அமைச்சரவர்கள் பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, சத்துள்ள அரிசியாக கைக்குத்தல் அரிசி இருக்கும் என்று இந்தத் துறையிலே—கதர் கிராமத் தொழில் துறையிலே—பிரச்சாரம் செய்யவில்லை என்று சொன்னேன். அதைப்பற்றி பிரச்சாரம் செய்வதென்றால் அதற்கு வேறு துறை இருக்கிறது; அதன் மூலம் செய்யலாம்.

திரு. எஸ். நல்லசாமி: தலைவரவர்களே, கைக்குத்தல் அரிசி எத்தனை கல்லூரி ஆஸ்டல்களில் வாங்கப்படுகிறது? மற்ற கல்லூரி ஆஸ்டல்களிலும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ராமகிருஷ்ண கல்லூரி ஆஸ்டலில் கைக்குத்தல் அரிசியில் உணவு தயாரிப்பதால், அங்குள்ள மாணவர்கள் கொழு கொழு என்று இருக்கிறார்கள். எனவே, எல்லா ஆஸ்டல்களிலும் கைக்குத்தல் அரிசி வாங்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆஸ்டலில் கைக்குத்தல் அரிசியில் உணவு தயாரிப்பதால், அங்குள்ள மாணவர்கள் கொழு கொழு என்று இருக்கலாம். ஆஸ்டல்களில் கைக் குத்தல் அரிசி வாங்குகிறார்கள். ஆனால் எத்தனை ஆஸ்டல்களில் என்பதற்கு விபரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விசாரித்து தெரிவிக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கைக் குத்தல் அரிசிக்கு ஒரு சிறு கருவி தயாரித்து பரீட்சித்துப் பார்க்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படித் தயாரிக்கின்ற அந்தக் கருவிக்கு உத்தேச மதிப்பு விலை என்ன ஆகும்? அது சாத்தியமாக இருக்குமா என்ற விபரங்களை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, அந்த இயந்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒரு பகுதி 7,000 ரூபாய்; இன்னொரு பகுதி 5,000 ரூபாய் விலை ஆகும்.

1972 மார்ச் 30]

Varieties of banana

* 810 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether any Hybrid Banana Plant has been evolved in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) ஆம்.

(இ) ஆடுதுறை மத்திய வாழை ஆராய்ச்சிப் பண்ணையில் கீழ்க்கண்ட ஒட்டின வாழைகள் உண்டாக்கப்பட்டன :—

பெண் இன வாழை.	ஆண் இனமாக உபயோகித்த காட்டு வாழைகள்.
1. பூவன்	மூசா பல்பிசியானு (வகை—நீர் வாழை).
2. பூவன்	மூசா காக்சினியா.
3. மொந்தன்	மூசா காக்சினியா.
4. ரஸ்தாளி	மூசா பல்பிசியானு.
5. ராஜவாழை	மூசா பல்பிசியானு (வகை—இலைவாழை).
6. பேயன்	மூசா பல்பிசியானு (வகை—இலைவாழை).
7. பேய்குன்னன்	மூசா பல்பிசியானு (வகை—இலைவாழை).
8. பேய்குன்னன்	மூசா பல்பிசியானு.
9. பேய்குன்னன்	மூசா சிலியோகார்பா.
10. தோட்டி	மூசா சிலியோகார்பா.
11. தோட்டி	மூசா பல்பிசியானு (வகை—காட்டுவாழை).
12. கோவாகர்	மூசா பல்பிசியானு.
13. வெண்ணீட்டின் மன்னன்	மூசா பல்பிசியானு.
14. நெய்வன்னன்	மூசா பல்பிசியானு (வகை—சவாய்).

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, இப்பொழுது அமைச்சரவர்கள் சொன்ன பெயர்களைப் பார்த்தால் சைனு பாஷை மாதிரி இருக்கிறது. இந்த வாழைகள் எல்லாம் நம் நாட்டு வாழைகளாகத் தெரியவில்லையே. எல்லாமே வெளிநாட்டு வாழைகளா? இல்லை யென்றால் அவைகளுக்கு எல்லாம் புரியும்படியாக பெயர் வைக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இந்த பெண் இன வாழைகள் எல்லாம் தமிழ்நாட்டு வாழைகள் தான். ஆண் இனமாகச் சொல்லப்பட்ட வாழைகள், நமது வாழையின் தரத்தை உயர்த்துவதற்காக வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவை.

திரு. என். கணபதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது பெண் இனம், ஆண் இனம் என்று சொன்னார்கள். அவைகளுக்குத் திருமணம் நடத்திவைத்து, இனவிருத்திச் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் தலைமை வகிப்பதானால் நாம் திருமணம் நடத்தி வைக்க முயற்சி செய்வோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், அமைச்சரவர்கள் வாழைகளின் பெயர்களைக் குறிப்பிட்டார்கள். ஒட்டு வாழைகளுக்கு என்று அந்தப் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்களா? அப்படி இருந்தால் சாதாரண விவசாயிகளுக்குப் புரியும்படியாக எளிய தமிழ் பெயர்கள் சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, முதலில் சொன்னதுதான் வாழைகளின் பெயர்கள். பூவன், மொந்தன், பேயன், ரஸ்தாளி இவைகள் எல்லாம் தமிழ் பெயர்கள்தான். ஒட்டு இனத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வாழைகள் இரண்டாவதாகச் சொல்லப் பட்டவை.

திரு. த. சோணையா: தலைவரவர்களே, இங்கே சொல்லப்பட்ட வாழை இனங்களில் தமிழ்நாட்டு ஏழை எளிய மக்கள் பயிர் செய்யும் நாட்டு வாழைகள் இடம் பெறவில்லை. எனவே, அதன் அவசியத்தை உணர்ந்து, உடனடியாக நாட்டு வாழைகளையும் இடம்பெறச் செய்து, அவைகளின் முன்னேற்றத்திற்கு தமிழ்நாடு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, சமீபத்தில் காஞ்சிகேலா என்று சொல்லக்கூடிய மொந்தன் வகை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் இருந்து அதிகமாக கன்றுகளை உற்பத்தி செய்து, இப்போது விவசாயிகளுக்கு தந்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. கணேசன்: தலைவரவர்களே, இந்த ஆண் பெண் வாழை இனங்களில் எந்தெந்த வாழையின் பழங்களுக்கு மார்க்கெட் அதிகம் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இது அவரவர் தன்மைக்கு ஏற்றது. சிலருக்கு பேயன் பழம் ருசியாக இருக்கும். சிலருக்கு மொந்தன் ருசியாக இருக்கும். சிலருக்கு ரஸ்தாளி ருசியாக இருக்கும். எனவே, அவரவர் ருசியின் தன்மையைப் பொறுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நான் 810, 811 இந்த இரண்டு எண்கள் உள்ள கேள்விகளுக்கும் சேர்த்தே அத்துணைக் கேள்வியை கேட்டுவிடுகிறேன். தமிழ்நாட்டில் இப்போது மோரிஸ் என்ற

ஒருவகை வாழை நல்லமுறையில் பயிரிடப்பட்டு வருகிறது ஆனால் அந்த வாழை காய்த்து பழமான மூன்றாவது நாளிலேயே புழு ஏறிவிடுகிறது. எனவே, ஒரு பழ கார்ப்பரேஷன் அமைத்து உடனடியாக, அவைகளை மேல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யும் உத்தேசம் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக தென்மண்டலக் குழு ஒன்று ஏற்படுத்தப்படுகிறது. அந்தக் குழுவின் மூலம் இந்தத் திட்டம் ஆராயப் படும். வெளிநாடுகளுக்கு கப்பல்களில் அனுப்பினால், எத்தனை நாட் களுக்குப் பழங்கள் அழுகாமல் இருக்கும் என்பது ஆராயப்பட வேண்டும். அதற்குரிய திட்டத்தைத் தயாரிப்பதற்கு இப்போது இரண்டு லட்சம் ரூபாய் செலவில் வாழைகள் பயிரிடுவதற்கான ஒரு திட்டம் ஏற்பாடு செய்யப் படுகிறது. அதை எப்படி ஏற்றுமதி செய்வது என்பதற்கு நான்கு மாநிலங்கள் அடங்கிய தென்மண்டலக் குழு ஒரு அமைப்பை ஏற்படுத்தி ஆராய்ச்சி நடத்துகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயே ஒரு சிறந்த இனமாகிய "மட்டி" வாழை நாகர்கோவிலில் இருக்கிறது. அதற்கு இப்போது நோய் ஏற்பட்டு, அந்த இனமே இல்லாமல் அழிந்துபோகின்ற நிலையில் இருக்கிறது. அந்த இனத்தைப் பாதுகாக்க அரசாங்கம் நட வடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கனம் உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார் கள். அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, புதிதாகப் பயிரிடப்படும் வாழைகளுக்கு ஊசிமூலம் உரம் ஏற்றப்படுமா? ஜி. டி. நாயுடு அவர்கள் ஊசி மூலம் உரம் ஏற்றி, சிறந்த முறையில் அதிகமான பலனைப் பெற்றதாக அறிகிறோம். எனவே, அரசாங்கம் இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, ஊசி மூலம் ஏற்றப்படும் உரம் அதிக விலையுள்ளதாக இருக்கிறது. அப்படி உற்பத்தி செய்யப்படும் பழங்களை தகுந்த விலை கொடுத்து மக்கள் வாங்க மாட்டார்கள். மக்கள் அந்த நிலையில் இல்லை. இங்கே நாட்டு உரங்கள் போட்டு பயிரிடுகின்ற வாழைப்பழங்களைக் கூட மைசூரில் கொண்டுபோய் விற்கவேண்டியிருக்கிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற பழங்களைக் கொடுக்கின்ற வாழைகளுக்கு வேண்டுமானால் உறுப்பினர் அவர்களின் யோசனைப்படி ஊசி மூலம் உரங்கள் ஏற்றலாம். அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. க. பழனிவேலன்: நமது தமிழ்நாட்டில் ரஸ்தாளி உயர்ந்த வாழையாக உள்ளது. எல்லா விசேஷ காலங்களிலும் ரஸ்தாளியை உபயோகப்படுத்துகிறோம். அது இன்றையதினம் அழியும் நிலையில் இருப்பதனால் அதைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சிலசில பகுதிகளில் ரஸ்தாளியை விசேஷ காலங்களில் உபயோகப்படுத்துகிறார்கள். சில இடங்களில் மலைப்பழத்தைப் பயன்படுத்துகிறார்கள். சில இடங்களில் பூவன் பழத்தைக்கூடப் பயன்படுத்துகிறார்கள். ரஸ்தாளி வாழைக்கு வருகிற நோயைத் தடுத்து அதற்கு நல்ல பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Hon. Minister gave a long list of banana varieties. In Hosur taluk hundred cultivators have come forward to take up this cultivation and they are also writing letter that they want to send the fruits to foreign countries For this they want the best variety, as seed i.e,, best in colour, taste fruit-bearing quality and also capacity to withst and climatic conditions when sent to foreign countries. Will the Hon. Minister say whether he will be able to suggest the good variety for foreign export and also whether some subsidy is given to cultivators ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இரண்டு லட்சம் ரூபாய் அளவில் திட்டமிட்டு, இந்தப் புதுவகையான வாழையைப் பயிரிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு ஆயிரம் ஏக்கரா அடுத்தது ஆயிரம் ஏக்கரா. என்பதால் 3 ஆயிரம் ஏக்கரா வரை இந்தப் புது ரக வாழை பயிரிட வகை செய்யப்பட்டிருக்கிறது. 72-ல் மட்டும் 86 லட்சம் ரூபாய் உதவி செய்வதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

* 811 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இந்த ஆண்டு (1971–72) வாழைப்பழ ஏற்றுமதியை அதிகரிக்க. அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, ஏற்றுமதிக்கேற்ற வாழை வகைகளைத் தீவிரமாகப் பயிரிடும் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

திரு. ஏ. எம். இராஜா: கோவை மாவட்டத்தில் மோரீஸ் வாழையைத் தீவிரப்படுத்தும் திட்டம் செயல்படுகிறது. அதற்கு மார்கெட் கிடையாது, அரசே அதை வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்ப ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை, ப. நாராயணசாமி: அதற்கு முன்னமேயே பதில் சொன்னேன். மைசூர் பகுதிக்கு அனுப்பி வருகிறோம். அதற்கான திட்டம் இப்போது செயல்பட்டு வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: கோவைப்பகுதியில் பூவன் வாழை அதிகமாக உற்பத்தியாகிறது. அதை ஒட்டு மூலம் அதிகப் பலன் தரக் கூடியதாகச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். இதற்காகப் பணம் ஒதுக்கி காஞ்சீபுரம், செங்கல் பட்டு ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் உற்பத்தி செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பிவைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. சொ. காவேரிமணியம் : வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டாலும் உள்நாட்டிலேயே பயன்படுத்தப்பட்டாலும், வாழையை உற்பத்தி செய்கிறவர்களுக்கு புயலினுலும், வெள்ளத்தினுலும் வாழை பாதிக்கப் படுகிறபோது எந்த வகையில் உதவி செய்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

சென்னை—மாமல்லபுரம் உல்லாசக் கப்பல்

* 635 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பிற்படுத்தப்பட்ட வகுப் பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா :

சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையே உல்லாசக் கப்பல் போக்கு வரத்து ஒன்றை நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆம்.

திரு கா. வேழவேந்தன் : அப்படி கப்பல் விடும் திட்டம் எப்போது துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மகாபலிபுரத்திற் ஒரு கப்பல் போக்குவரத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் சுற்றுலா வாரி யத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கான ஆராய்ச்சியை நடத்தி ஒரு அறிக்கை தயாரித்தளித்திருக்கிருர்கள். அந்த அறிக்கை இப்போது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அந்தக் கப்பல் எங்கேயிருந்து புறப்படும்? எவ்வளவு கட்டணம் நிர்ணயிக்கப்படும் என்று தெரிவிப் பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மைலாப்பூரிலிருந்து கிளம்புமா அல்லது துறைமுகத்தில் இருந்து கிளம்புமா என்பதுதானே கவலை? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது புதுவகையான கப்பல் ஹோவர்காப்ட் என்பது லண்டன், மாஸ்கோவைக் கவர்ந்திருக்கிறது. அந்தக் கப்பலைப் பற்றி இவர்கள் ஆராய்ந்துகொண்டிருக்கிருர்கள். அது தீர்மானமானவுடன் எங்கிருந்து புறப்படும், என்ன கட்டணம் நிர்ணயிக்கப்படும் என்பது தீர்மானிக்கப்படும்.

திரு. கோவை செழியன் : சென்ற ஆண்டு ஆளுநர் தலைமையில் சென்னையில் இருந்து மகாபலிபுரத்திற்கு ஒரு கப்பலில் நாங்கள் எல்லாம் அழைத்துச் செல்லப்பட்டோம். நிறைய அறைகளும், டான்சிங் ஹால் எல்லாம் இருந்தன. அதைப் பார்த்தால் நடமாடும் ஹோட்டலைப் போல

இருந்தது. ஆகவே சென்னையில் இருந்து மகாபலிபுரத்திற்கு மிதக்கும் ஹோட்டல் ஒன்றையே ஆரம்பித்தால் லாபம் வரும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மிதக்கும் ஹோட்டல் என்பது சைகோன் என்ற ஒரே ஒரு இடத்தில் தான் இருக்கிறது. அதுவும் ஓடிக்கொண்டிருக்கவில்லை. ஒரே இடத்தில் தான் மிதக்கிறது. இந்தக் கப்பலைப் பற்றி முடிவு தெரிந்த பிறகு நாம் நடமாடும் ஹோட்டலாகவே ஏற்படுத்த முடியுமா என்பதை யோசிக்கலாம்.

திரு. எம். தேவராசன் : மகாபலிபுரத்திற்குப் புறப்படும் கப்பலின் வெள்ளோட்டத்தில் முதல் நாள் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கப்பல் வந்த பிறகு அதுபற்றி யோசிக்கப்படும்.

Government Rubber Plantations at Nagercoil

* 812 Q.—Thiru J. JAMES : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether it is a fact that the Conservator of Government Rubber Plantations, Nagercoil and few of his subordinates such as Superintendents and Range Officers were made accused in a criminal case pending before the District Magistrate, Nagercoil ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 7-2-1972-ம் தேதி நாகர் கோயில் மாவட்ட குற்றவியல் நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு வழங்கினார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த வழக்கில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் எந்த எந்த ஷரத்தின்படி இந்த அலுவலர்கள் மீது வழக்குப் போடப்பட்டது? எந்த எந்தக் குற்றங்கள் சாட்டப்பட்டன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஐ.பி.ஸி. 427, 448 செக்ஷன்கள் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு விவரம் இல்லை. இதில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு—

I hold without the least hesitation that the accused have not committed any offence and that they are innocent என்பதாகும்.

Thiru R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any State defence was arranged for these officers and what is the expenditure incurred for defence in this case ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : எவ்வளவு செலவு என்ற விவரம் இல்லை அரசாங்க அதிகாரிகளுக்கு என்ன என்ன உதவிகள் அளிக்கப்பட வேண்டுமோ அவை வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த வழக்கில் சாட்சியம் அளித்த தொழிலாளர்கள் மீது இப்போது அதிகாரிகள் பழி வாங்குகிறார்கள் என்கிற புகார்கள் வந்துள்ளனவே. அவற்றின்மீது என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : என்னுடைய கவனத்திற்கு எந்த விதமான புகாரும் வரவில்லை. வந்தால் கவனிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

சுதந்திரா, பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகளின் பெயர் மாற்றம் குறித்து.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்ட மன்றத்தில் இடம் பெற்றிருக்கிற சுதந்திராக் கட்சியின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான திரு. ராஜாஜி அவர்கள் அந்தக் கட்சியின் பெயரை மாற்றப் போவதாக அறிவித்திருக்கிறாரே, அதுபற்றி நமது சட்டமன்றத் தலைவருக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதை அறிவிப்பார்களா என்று கேட்கிறேன்.

Dr. H. V. HANDE : I am very grateful to the hon. Member for giving some publicity to the point of view expressed by my revered Leader, Rajaji. He has not mentioned anything new. We have been repeatedly saying that we are for social justice. It is not being understood properly and because of some frustration constantly whatever he says is not understood correctly. What he has said is only just what he always says in his own usual way. That has nothing to do with our Party anew.

Mr. SPEAKER : 'Justice Party' என்று சொல்லலாமா ?

Dr. H. V. HANDE : 'Social' must also come, for, now-a-days, only that has a market value and every party wants to call itself by that name and all the parties are calling themselves as socialist parties or something like that. Perhaps because of that he has been saying that as we are also for social justice, we should add that also. Though we do not call ourselves socialist party, we are primarily for social justice. I am very grateful to the hon. Member, Thiru Veerasamy for having brought this to the notice of the House.

Thirumathi T. N. ANANDANAYAKI : Sir, the Hon. Member Dr. Hande has expressed that for the sake of market value, they want to add the word 'socialist' to the name of his party. Would that mean that they do not really believe in Socialism, but that it is only for the purpose of market value....

DR. H. V. HANDE : I did not say 'market value'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்கு மார்க்கெட் இல்லை என்று சொன்னார்களே, உங்களுக்கு அது மாதிரி போயிருக்கிறதா?

திரு. கே. எம். சுப்பிரமணியம் : அந்த மார்க்கெட்டுக்குள் வரப் போகிறாரா என்ன?

DR. H.V. HANDE : I did not say market value. I only stated that that expression is very popular. The hon. Members might imagine that it might be due to market value. I do not think there can be any market value at all in politics. We have to be understood by the people and there is no question of market value or not............

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, இந்த மன்றத்தில் இருக்கின்ற சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் 4 பேர் அன்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரில் வந்தார்கள். பின்னால் சோஷலிஸ்ட் கட்சி என்று மாற்றிக் கொண்டார்கள். போன வாரம் கோயம்புத்தூரில் கூடி அவர்கள் அந்தக் கட்சியிலிருந்து விலகி விட்டதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன பெயரில் சட்ட மன்றத்தில் அழைக்கப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் யாரும் இங்கே இல்லை, நீங்கள்தான் அவர்களுக்காகப் பேச வேண்டும் என்று தோன்றுகிறது. பெயர் மாற்றம் சுதந்திரமான ஒன்று தான். டாக்டர் ஹாண்டே அவர்களும் பெயரை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் தகவல் இருந்தால்தான் கொடுக்க முடியும். பத்திரிகையில் பார்ப்பதையோ வெளியில் சலனங்கள் ஒவ்வொரு நாளும் ஏற்படுகிறது என்பதற்கோ சட்ட மன்றம் பொறுப்பாளியல்ல. இப்போது சுதந்திரா பார்ட்டி என்றுதான் இருக்கிறது. புதிய பெயரில் வந்தால் அதைப் பரிசீலிப்போம்.

(3) அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது வி.தியின் கீழ் பின் வரும் சட்டப்பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் (Business Advisory Committee) உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.—

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (மாண்புமிகு முதலமைச்சர்).

2. மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் (மாண்புமிகு பேரவை முன்னவர்).

3. மாண்மிகு திரு. செ. மாதவன் (மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்).
4. திரு. பெ. சீனிவாசன் (பேரவைத் துணைத் தலைவர்).
5. திரு. து.ப. அழகமுத்து (அரசு தலைமைக் கொறடா).
6. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
7. திரு. கே.டி.கே. தங்கமணி.
8. திரு. ஏ.ஆர். பெருமாள்.
9. திருப்பூர் திரு. ஏ.எம். மொய்தீன்.
10. டாக்டர் எச்.வி. ஹாண்டே.
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
12. திரு. இ.எஸ். தியாகராசன்.
13. திரு. நா. காசிராமன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(ஆ) நடைமுறை விதிக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப்பேரவையின் 229 (1)-வது விதியின் கீழ் 1972–73-ம் ஆண்டுக்கு பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவில் (Rules Committe) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.
2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.
3. மாண்புமிகு திரு. செ. மாதவன்.
4. திரு. பெ. சீனிவாசன்.
5. திரு. து.ப. அழகமுத்து.
6. திரு. எல். கணேசன்.
7. திரு. வி. ஆலடி அருணா.
8. திரு. கு. திருப்பதி.
9. திரு. க. உரோ. எட்மண்ட்.
10. திரு. ச. சங்குமுத்து தேவர்.
11. திரு. ஓ. என்.சுந்தரம்.
12. திரு. கே.டி.கே. தங்கமணி.
13. திரு. தி.சி.ஆ. சிவப்பிரகாசம்.
14. திரு. கே. கந்தசாமி.
15. திரு. கே.என். குமாரசாமி
16. திரு. எம். ஏ. அபுசாலி.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.

(4) அவையுரிமைப் பிரச்சினே.

'நாத்திகம்' நாளிதழ் மீது எழுப்பப்பட்ட பிரச்னே யில் உரிமைக்குழுவின் இடைக்கால அறிக்கை.

Thiru P. SEENIVASAN: Mr. Speaker, Sir, I move—" That under Rule 191 (*b*) of the Assembly Rules, the Interim Report of the Committee of Privileges on the case raised against the Tamil Daily 'Nathigam' in respect of certain comments published in its issue dated 10th March 1972 presented to the House on 28th March 1972 be taken into consideration."

The motion was put and carried and the report was taken into consideration.

Thiru P. SEENIVASAN: Mr. Speaker, Sir, I move—' That under Rule 191(*d*) of the Assembly Rules, this Assembly agrees with the recommendations contained in the Report.'

The motion was put and carried.

(5) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 21 (3)ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் 3-ம் வரிசை எண் உள்ள (3)-வது தலைப்பின் கீழ் உள்ள தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/72) மசோதாவை (2)-வது தலைப்பின்கீழ் உள்ள தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/72) என்பதற்கு முன்னதாக எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நீர் வழங்கு-வடிகால் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நீர் வழங்கு-வடிகால் வாரிய (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச் சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/72)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2, and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/72) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு 1972–ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 11/1972).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1972–ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்களோடு 15 உறுப்பினர்கள் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே உறுப்பினர்கள் கூடுமான வரையில் சுருக்கமாக பேச வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டுக் கான நிதி ஒதுக்கீடு மசோதா மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1972–73-ம் ஆண்டுக்கு 387 கோடி ரூபாய்க்கு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதற்காக பொது விவாதம் 7 நாட்கள், மானியக் கோரிக்கைகளின் மீது 14 நாட்கள் இங்கு நடைபெற்றது. சாதாரணமாக இப்போது இருக்கின்ற 50 மானியக் கோரிக்கைகளுக்காக நாம் ஒதுக்கி விவாதித்த நாட்கள் 14. விவாதித்த கோரிக்கை ரூ. 397 கோடி. இந்தக் குறுகிய காலத்தில் நாம் இந்த மானியங்களைப் பற்றி இந்த மன்றத்தில் விவாதித்திருக்கிறோம். நமது கடமையை சரியாக நிறைவேற்றி இருக்கி ரோமா என்பது ஐயப்பாட்டிற்குரிய ஒன்றாகத் தான் இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1967-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக் கையின் பேரில் 48 மானியக் கோரிக்கைகளுக்கு 17 நாட்கள் ஒதுக்கப்பட்டு விவாதம் நடைபெற்றது. அப்போதிருந்த விதி முறைகளின்படி விவாதம் 20 நாள் வரையில்தான் மானியக் கோரிக்கைகளுக்காக ஒதுக்கப்படமுடியும். ஆனால் இன்று இருக்கின்ற விதி முறைகளின் படி 25 நாட்கள் வரையிலும் மானியக் கோரிக்கைகளுக்காக நாம் விவாதிக்கலாம், நாள் ஒதுக்கலாம்.

ஆனால் இன்றையதினம் நாம் செய்திருக்கின்றது என்னவென்றால் கழிந்த ஆண்டுகளைவிட 25 நாட்களுக்கு பதிலாக நாம் நாட்களைக் குறை வாக ஒதுக்கியிருக்கிறோம். 1967–68-ல் வரவு செலவு திட்டத்தின் கீழ் ஒதுக்கிய தொகையைவிட ஒரு மடங்கு அதிகமாக தொகை இருந்த போதிலும் மானியங்களுக்காக ஒதுக்கப்பட்ட நாட்கள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இப்பொழுது முன்னைவிட ஒன்றிரண்டு மானியங்கள் கூடி யிருந்த போதிலும், 1966–67-ம் ஆண்டைவிட மூன்று நாட்கள் குறை வாகத்தான் ஒதுக்கி விவாதித்திருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய விதிமுறைகளின் படி நாம் போதுமான நாட்களை ஒதுக்க வேண்டும் என்று 153 (2)-வது விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நாம் நாட்களை ஒதுக்கி, மானியங்களைபற்றி விவாதித்திருக்கிறோமா என்றால் இல்லை. 13–3–1972-ம் நாள் விவாதத்தில் 10 மானியங்களை ஒன்றாகத் திரட்டி, 98 கோடி ரூபாய்க்கான மானியக் கோரிக்கைகளை நாம் விவாதித்திருக்கிறோம். அதே போன்று பல மானியக் கோரிக்கைகளை ஒன்றாக எடுத்துக் கொண்டு விவாதித்திருக்கிறோம். ஆக, இந்த நிலைமையில் விதிமுறைகளுக்குட் பட்ட வகையில் "பட்ஜெட் மான்யுவலில்" இருக்கின்ற ஒழுங்குகளுக்கு

1972 மார்ச் 30] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இணைந்த வகையில் செயல்படவில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சியாக இயங்குகின்ற எங்களுக்குப் போதுமான வாய்ப்பு அளிக்கவில்லையென்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 30 அங்கத்தினர்கள் விவாதத்தில் கலந்து கொண்ட நாட்களில்கூட எங்களில் ஒருவர் இரண்டு பேர்களுக்குத்தான் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி குறைவான வாய்ப்பு அளிக்கப்படும் நிலையில் ஜனநாயக முறையில் நாங்கள் எப்படிச் செயலாற்ற முடியும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். பாராளுமன்ற நடைமுறைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை.)

நாம் இன்றையதினம் 397 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால், அந்தப் பணம் ஏழைகளின் வரிப்பணத்திலிருந்து தான் வந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். இந்தப் பணத்தைக் கொண்டுதான் நாட்டில் சோஷலிச சமதர்ம சமுதாயத்தை அமைப் பதற்கும், நாட்டுமக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை வகுக்க வேண்டு மென்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும், ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்று சொன்னால் நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும், தொழிலாளர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும், விலைவாசியேற்றம் தடுக்கப்பட வேண் டும்—இவை அத்தனையையும் செய்தாலொழிய நாட்டில் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த முடியாது. இந்த வேலைகளுக்காக இந்த 397 கோடி ரூபாய் செலவழிக்கவில்லையானால் நாம் கடமையிலிருந்து தவறியவர்களாக ஆவோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

கடந்த சில மாதங்களாக தொழில் அமைதி கெட்டிருந்ததை நாம் அனைவரும் அறிவோம். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் உடனுக் குடன், அவ்வப்போது தீர்க்கப்பட்டாக வேண்டும். தொழில் வளர்ச்சி பாதிக்காதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர் பிரச்சினைகளில் உடனுக்குடன் தீர்வு காணவேண்டும். தொழிலாளர் நல இலாகாவானது சிறப்பாகச் செயல்படுவதற்கு வேண்டிய வழிவகை கள் செய்யப்பட வேண்டும். இப்போது அந்த இலாகா ஒழுங்காகச் செயல்படவில்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழி லாளர்களின் பிரச்சினைகளை அவ்வப்போது தீர்க்காததன் காரணமாக, நமக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த இலாகாவானது, அரசாங்கத்திற்குக் கடன் வசூலிப்பதற்கும், சிறுசேமிப்பு வசூலிப்பதற் கும், பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக நிதி வசூலிப்பதற்கும், பாதுகாப்பு நிதி வசூலிப்பதற்கும்தான் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் காரியங்களுக்கான நிதியைத் தொழிலாளர் நல இலாகா வசூ லித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது, அந்த இலாகா அதி காரிகள் இந்த நிதியை வசூலிப்பதற்கு வசதி படைத்த பெரு முத லாளிகளிடம் சென்றுதான் இம்மாதிரியான நிதிகளை வசூலிக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அம்மாதிரியான நிலையில் இருக்

கின்ற அதிகாரிகளின் வாயிலாக தொழிலாளர்களுக்கு எப்படி நீதி கிடைக்க முடியும்? பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்படாத நிலையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள்.

கடந்த சில மாதங்களாக பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள். அந்த வேலை நிறுத்தத்தை ஒருவாறு நாம் சமாளித்திருக்கிறோம். அதில் ஒப்பந்தமும் செய்திருக்கிறோம். ஆனால் முதலாளிகள் அதை ஏற்றுக்கொள்வதாக இல்லை (மணியடிக்கப்பட்டது).

THIRU J. JAMES : Please give me some more time, Sir.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : If the hon. Member's party is going to put 3 or 4 names in the list of speakers for the day, it is very difficult to regulate when every one wants more time.

THIRU J. JAMES : Our time is reduced and that is one of my grievances.

மொத்தம் 30 அங்கத்தினர்கள் பேசுகிறார்கள் என்றால், எங்களுக்கு இரண்டு பேர் என்று கொடுத்து, ஆளுக்கு ஐந்து நிமிடங்கள் என்று சொன்னால், முதல் எதிர்க்கட்சியாக இருக்கின்ற நாங்கள் ஜனநாயக முறையில் எப்படிச் செயலாற்ற முடியும்? அரசாங்கத்தின் மீதுள்ள குற்றங்குறைகளை எப்படி நாங்கள் எடுத்துச்சொல்ல முடியும்?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : ஏறக்குறைய 183–184 அங்கத்தினர்களையுடைய ஆளும் கட்சித் தரப்பில் 5 உறுப்பினர்கள் பேசுகிறார்கள் என்று சொல்லும்போது, 14 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சித் தரப்பில் 3–4 உறுப்பினர்கள் பேசுகிறார்கள். இது எந்த விகிதாசாரத்தில் குறைவாக இருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் இங்கே குறிப்பிட்டிருக்கிற காலத்திற்கு ஏற்ப இரண்டு பேர் அல்லது மூன்று பேர் என்று பெயர் கொடுத்தால், அதற்கேற்ற வகையில் அவர்களுக்குச் சற்று கூடுதலாக நேரத்தை உயர்த்தித் தர முடியும். பேசுகின்றவர்களின் கணக்கை எடுத்துப் பார்த்தால் உங்கள் கட்சியில்தான் பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் அதிகமான நேரத்தைத் தருவதற்கு இயலாது என்பதைச் சொல்லிக்கொள்றேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, please give him some more time. Unless we are given more time, we may not be in a position to express some of the grievances which we were not able to ventilate at the time when Demands were taken for consideration. We can only elicit information now. Therefore, please give some more time.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : Time has already been given to him and there is no ground for any grievance. Actually, yesterday, the Leader of the Congress Party took more than the Hon. Chief Minister himself. That should be borne in mind.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, ஆளும் கட்சியில் 184 பேர்கள் இருக்கிறார்கள், 5 பேர்களும் பேசுகிறார்கள். எங்கள் கட்சியில் 14 பேர்கள் இருக்கிறார்கள், இரண்டு மூன்று பேர்கள் பேச அனுமதிக்கிறோம் என்று ஸ்பீக்கர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆளும் கட்சித் தரப்பில் அமைச்சர்கள் இருப்பதால், எந்த பாயின்ட் பற்றிப் பேசும்போதும் அமைச்சர்கள் எழுந்து பதில் சொல்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அந்த நிலைமை எங்களுக்கு இல்லை. ஆகவே, ஆளும் கட்சிகு 5 பேர், எங்கள் கட்சிக்கு ஒருவர், இருவர் என்று சொல்வது எப்படிப் பொருந்தும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வேண்டுமானால், நீங்கள் அத்தனை பேரும் பேசுங்கள். காங்கிரஸ் கட்சிக்குத் தரப்படுகின்ற நேரத்தைக் கணக்கிட்டுக்கொண்டு, நீங்கள் எத்தனை பேர்கள் வேண்டுமானாலும் பேசுவதற்குப் பெயர் கொடுக்கலாம். அப்படித் தர தயாராக இருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், தலைவர் அவர்களே, டெல்லி நாடாளு மன்றத்தில் அங்கத்தினர்கள் கணக்கை வைத்துத்தான் நேரத்தை அந்தந்தக் கட்சிகளுக்கு ஒதுக்குகிறார்கள். அதேபோல் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையை வைத்து நேரத்தை ஒதுக்கினால் எங்களுக்கும் நீதி கிடைக்கும், நாங்கள் பேசுவதற்கும் போதுமான நேரம் எங்களுக்கும் கிடைக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு செ. கந்தப்பன்) : பேரவைத் தலைவர் இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் எதிர்க்கட்சிகளுக்கு நேரத்தைப் பங்கிட்டு அளிக்கிறார். இன்னும் அதிக நேரம் தர வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் கேட்கிறார். எதிர்க்கட்சி என்று சொல்லும்போது, காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் நேரம் பிரித்துக்கொடுக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் எந்த ஒரு கோரிக்கையின் மீதும் எதிர்க்கட்சித் தரப்பில் பேசுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது. ஆளும் கட்சித் தரப்பில் பேசுபவர்களின் எண்ணிக்கை குறைவுதான்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நல்ல நோக்கத்தோடு கொஞ்சம் நேரத்தைத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : இரண்டு நிமிடங்களில் உங்களுடைய பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : என்னுடைய தொகுதியில் அரசாங்க ரப்பர் தோட்டத்தில் 1,500 தொழிலாளர்கள் கடந்த 10 நாட்களாக குறைந்த கோரிக்கைகளை வைத்து வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். அரசாங்கம் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவு உச்ச நிலைக்கு ஏறியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

இரண்டாயிரம் குமாஸ்தாக்களுக்கு எலெக்ட்ரிசிடி பார்டில் இரண்டு லட்சத்து பதிமூன்று ஆயிரம் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலைமையில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும் போது இந்த நாட்டில் புரட்சி ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் அரசாங்கம் இந்த விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும் என் பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கல்வி இலாகாவைப் பொறுத்தவரையில் ஆரம்ப ஆசிரியர்கள் போராட்ட அறைகூவல் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்க்க வேண்டும். ஆசிரியர்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கடந்த சில நாட்களாக அளித்திருக்கிறோம். அதையும் நிறைவேற்றித் தர வேண்டும். கல்வி அமைச்சர் அவர்கள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்காக ஒரு சட்டம் கொண்டு வருவதாகக் கூறினார்கள். இந்த மன்றத் தொடரிலேயே அந்தச் சட்டம் வரும் என்று எதிர்பார்க்கிறேன். காலம் கடத்தாமல் அந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இத்த நாட்டிலே மகளிர் கல்வியை அதிகப்படுத்த வேண்டும். அதற்காக இந்த அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

எங்கள் ஜில்லாவிலே ஆரம்பப் பள்ளிகள் அரசாங்க நேரடி நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. அவற்றைப் பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாக அறிகிறோம். அது வரவேற்கத்தக்கது அல்ல. அது பிரச்னைக்குரியதா என்பதை வேண்டுமானால் கல்வியமைச்சர் அவர்களே எங்கள் மாவட்டத்திற்கு வந்து அங்கேயுள்ள ஆசிரியர்கள், பொதுமக்கள், சட்ட மன்ற உறுப்பினர்களைக் கேட்டு அவர்களுடைய அபிப்பிராயங்களை அறிந்து முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களில் நிதி நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அவற்றிற்கு மேட்சிங் கிராண்ட் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திற்கு திட்ட கமிஷன் இருப்பதைப்போல் மாவட்டங்களுக்கும் திட்ட கமிஷன் ஏற்படுத்த வேண்டும். மாநிலத்திலேயுள்ள நிதியை மாவட்டங்களுக்கு அந்தந்த மாவட்டங்களின் ஜனத்தொகையின் அடிப்படையிலே ஒதுக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

இன்றைய தினம் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறவிரும்புகிறேன்.

ஊழல் ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு ஊழல்களை ஆய்வதாகத் தெரிகிறது. அந்த ஊழல் ஆய்வுக் குழுவின் அறிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் அதைப் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 30] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வன இலாகா மானியத்திலே பேசும்பொழுது நான் வன இலாகாவிலுள்ள பல ஊழல்களைப்பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னேன். அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி பரிசிலனை செய்யவேண்டும்.

தேனி நிகழ்ச்சி சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் சில கருத்துக்களை இந்த மன்றத்திலே தெரிவித்தார்கள். அதற்கு மாறாக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அது சம்பந்தமாக பைல்களையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்திலே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில சுயாட்சி சம்பந்தமாக டெல்லி அமைச்சர்கள் கூறு கிறார்கள், மாநில சுயாட்சி கேட்கும்பொழுது இந்த மாநிலத்திலே தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும் என்று எச்சரித்திருக்கிறார்கள். ராஜமன்னார் குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டு ஏழைகளின் வரிப்பணம் அதற்காகச் செலவுசெய்யப்பட்டு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு இன்றைக்கு அந்த அறிக்கை கோல்ட் ஸ்டோரேஜ்இல் இருப்பதுபோல் இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி இந்தக் கூட்டத் தொடரில் விவாதிக்கப்படும் என்று சொன்னார்கள். மாநில சுயாட்சி சம்பந்தமாக பிரதமர் கூட இந்த அரசாங்கத்தின் கருத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கூட்டத் தொடரிலே நாம் அதை விவாதித்து நம்முடைய நிலைமையைத் தெளிவாக்கி, உண்மையிலேயே மாநில சுயாட்சி கேட்கிறோமா, அல்லது மாநிலத் திற்கு அதிக அதிகாரங்களைத்தான் கேட்கிறோமா, அல்லது தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கவேண்டு மென்பதற்குத்தான் மாநில சுய ஆட்சி என்ற கோரிக்கையை எழுப்பி மக்களை ஏமாற்றுகிறீர்களா என்பதையெல்லாம் தெளிவாக்கிவிட்டால் பல்வேறு பிரச்னைகள் தீரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு ஏ. எம். இராஜா: இந்த மாமன்றத்திலே ஒரு மாத காலமாக மிகச்சிறந்த ஆர்வத்தோடு பல்வேறு விவாதங்கள் நடத்தப்பட்டு இன்று ஒப்படைத்தல் என்ற பெரிய சடங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒரு பெரிய தொகையை அமைச்சரவையிடம் நாம் ஒப்படைக்கிறோம். தமிழ் நாட்டு மக்களின் பெரு நம்பிக்கையைப் பெற்றிருக்கிற அமைச்சரவை டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே புரட்சிகரமான சோஷலிச திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மேலும் பல திட்டங்களை நிறைவேற்ற படிப்படியாக ஆனால் உறுதியாக நிறைவேற்றிவருகிறது. அந்த முறையிலே இந்த அமைச்சரவை தமிழ்மக்களால் பாராட்டப்படுகிறது.

நாட்டுப் பாதுகாப்புக்காக கடந்த நான்கு மாத காலத்தில் சுமார் நான்கு கோடி ரூபாயை அரசு திரட்டியிருக்கிறது. இப்படி நாட்டுப் பாதுகாப்புக்காக நிதி திரட்டப்படுவது மாற்றுக்கட்சிக் காரர்களால் குறை கூறப்படுகிறது. நிதி திரட்டுவது கட்டாயப் படுத்தப்படுகிறது, நிர்பந்தப்படுத்தப்படுகிறது, என்று குறை

சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள் தொழிலாளர் நல அமைச்சர் தொழிலாளர் நல இலாகாவை இந்த நிதி வசூல் செய்வதற்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள்.

எனக்குப் பழைய நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது இந்திய விடுதலைப் போராட்டம் 1942 முதல் 1945 வரை நடைபெற்றபோது எல்லா நாடுகளிலிருந்தும் இந்திய தேசியப் படையை நிறுவப் பாடுபட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசியப் படை சம்பந்தமாக மலேயாவிலிருந்து ஒரு செய்தியைக் குறிப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் கூறிய வாசகத்தை நான் இங்கே குறிப்பிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

"When the I.N.A. is getting trained either to march to victory or spill its last drop of blood on the way, the rich people are asking me whether total mobilisation means 10 per cent or 5 per cent of their riches would be asked ; I ask these people if our soldiers can be asked to spill only 5 per cent and 10 per cent of their blood and save the rest ?"

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வாசகம் நம்முடைய மாற்றுக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கவனத்தில் கொண்டிருப்பார்களானால் குறிப்பாக இந்த நாட்டு விடுதலைக்காகப் போராடியவர்கள் என்று கூறிக்கொள்கிற மாற்றுக்கட்சிக்காரர்கள் உணர்ந்துகொள்வார்கள். நாட்டுப் பாதுகாப்பு நிதிக்காக எந்த முறையைக் கையாண்டாலும் கட்டாயப்படுத்தினாலும் நிர்பந்தப்படுத்தினாலும் தவறில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியைப் பற்றியும் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். தடப்பள்ளி, அரக்கன் கோட்டை என்ற வாய்க்கால்கள் இருக்கின்றன. ஏறக்குறைய 300 ஆண்டுகள் ஆகின்றன அவை ஏற்படுத்தப்பட்டு. அவை அதற்கு பிறகு பழுது பார்க்கப்படவில்லை. பழுது பார்க்கப்படாத நிலையிலேயே 25 ஆயிரம் எக்கர் பாசனம் பெற்றுவருகிறது. அந்த நிலையிலே அதைப் பழுதுபார்த்து ரீமாடல் செய்தால் 25 ஆயிரம் எக்கர் என்பது 40 ஆயிரம் எக்கர் வரை பாசனம் செய்வதற்கு வசதிகள் ஏற்படும். எனவே முதல் அமைச்சர் அவர்கள் இதை பழுதுபார்க்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல பஞ்சாயத்துக்களிலே குடிநீர் வசதி இல்லாத வறண்ட நிலைமை இருக்கின்றது. எனவே குடிநீர்ப் பிரச்னையைக் கவனித்து விரைவாகத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆப்பக்கூடல் முதல் மயிலம்பாடி வரையிலும் உள்ள பஞ்சாயத்துக்களைத் சேர்த்து ஒரு திட்டம் தீட்டி அங்கேயுள்ள ஒன்றியம் அனுப்பியிருக்கிறது. அதை முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 30] [திரு. ஏ. எம். இராஜா]

விவசாயிகளுக்கு மின்சாரரம் எங்கள் பகுதியிலே அதிகமாகக் கொடுக்கவேண்டும். என்னுடைய பகுதியிலே ஈரோடு திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சுமார் ஒரு லட்சம் கிணறுகள் இருக்கின்றன. அவற்றிலே சுமார் 25 ஆயிரம் கிணறுகளுக்குத்தான் இதுவரை மின்சாரம் கிடைத்திருக்கிறது. ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் கிணறுகள் வீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே போனால் எங்களுடைய பகுதி பிற்பட்ட பகுதியாக இருப்பதால் நிறைவேற்றுவதற்கு நீண்டகாலம் ஆகும். எனவே அதிகமாக மின்சாரம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். சிலர் முன்பே பணம் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். மின் இணைப்புக் கொடுப்பதற்கு 3,000 ரூபாய் ஆகும் என்று சொல்கிறார்கள் மின்பொறியாளர்கள். அந்த மூவாயிரம் ரூபாயையும் முன்னாலே கொடுக்கிறவர்களுக்காவது உடனடியாக மின் இணைப்புக் கொடுப்பற்கு ஒரு திட்டத்தைப் போட்டு நிறைவேற்றித்தரவேண்டும்.

நம்முடைய அரசு விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கின்றபொழுது இந்தியப் பேரரசு எல்லாவிதமான வகைகளிலும் மோட்டார் பம்புசெட்டுகள் மேலும், உரத்தின் மேலும், மண்ணெண்ணெய் மேலும் வரியை அதிக அளவுக்கு உயர்த்திக்கொண்டிருக்கிறது. இதன்மூலமாக இந்த அரசு விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபடும்பொழுது விலைவாசியை உயர்த்துவதற்கு இந்திய பேரரசு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். கிணறுவெட்டுவதற்கு வெடிமருந்து மோட்டார்களுக்கு தோட்டாக்கள் வாங்வேண்டுமென்றால் விவசாயிகள்தான் கலெக்டரிடமிருந்து லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படியில்லாமல் ஊராட்சி ஒன்றியங்களே அவற்றை வாங்கிக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது பத்திரிகையிலே சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றியும் அமைச்சர்களைப்பற்றியும், மிக இழிவாகவும், தரக்குறைவாகவும் குற்றச்சாட்டுகள் வந்துகொண்டேயிருக்கின்றன. அப்படிப்பட்ட பத்திரிகைமீது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்திரிகைகளிலே வருகின்ற இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நம்முடைய முதல் அமைச்சர் அவாகள் கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு சட்டமன்றம் நடக்கின்றபொழுது இந்த மன்றத்திலே அறிக்கை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது அவசியம் கவனிக்கப்படவேண்டிய ஒன்று. இதனால் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்ற பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1972 மார்ச் 30] [திரு. எ. எம். இராஜா]

ப. மற்றொரு மிக முக்கியமான விஷயத்தைக் கூறிக்கொள்ள
00 விரும்புகிறேன். காவிரி நதி நீர்ப் பங்கிடு பிரச்னையை எடுத்துக் கொண்டால், மேட்டூர் அணையிலிருந்து இந்த ஆண்டு தண்ணீர் சரியாக விட முடியாமல் குறைந்துவிட்டது. அதற்குக் காரணம் மேலே அணை கட்டுகிறார்கள். தண்ணீரை அவர்கள் திருப்பி கொள்கிறார்கள். நம்முடைய அரசு ஹேமாவதி கபினி போன்ற நதிகளிலே அணைகட்டக் கூடாது என்று எவ்வளவோ சொல்லியும்கூட இந்தியப் பேரரசு மறுத்துவிட்டது. அப்பொழுது வீரேந்திரப் பாட்டீல் முதலமைச்சராக இருந்த காரணத்தினால் திட்டத்தை தீவிரமாக நடத்தினார்கள். அந்தக் காலத்தில்தான் தலையிட முடியவில்லை என்று சொன்னாலும், ஆளுநர் பொறுப்பிலே மைசூர் மாநிலம் இருந்தபொழுது, இந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டுமென்று இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொண்டபொழுது இந்தியப் பேரரசு அதைத் தட்டிக் கழித்தே வந்தது.

ஆளுநர் என்பவர் இந்தியப் பேரரசின் நேரடிப் பிரதிநிதி. அந்த ஆளுநர் அவர்கள் ஆளும் பொறுப்பிலிருந்த நேரத்தில் இந்த ஹேமாவதி நதித் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்தியப் பேரரசு முன் வரவில்லை என்றால் நேரடியாகவே தமிழகத்திற்குத் தீங்கிழைப்பது, பாதகம் செய்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டது என்ற பொருளே தவிர வேறு பொருள் இல்லை. இந்த நிலையிலே இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நம்முடைய தமிழகத்திற்கு வேண்டிய நியாயமான உரிமைகளைக்கூட நியாயமாகச் செய்ய மறுத்துவிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் மைசூர் மாநிலம் ஆளுநர் அவர்களின் பொறுப்பிலே ஆளப்பட்ட காலத்திலே அந்த அணைக்கட்டுவது தீவிரமாக்கப்பட்டது. அதற்குப் பிறகு அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை இந்தியப் பேரரசால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி நம்முடைய தமிழகத்திற்கு எல்லாவிதமான முனைகளிலிருந்தும் இந்தியப் பேரரசு எந்தெந்த விதங்களில் சங்கடங்களைக் கொடுக்க முடியுமோ அப்படிக் கொடுக்கிறார்கள். சிலை வைப்பதற்கு உரிமை இல்லை. அதேபோல் நேஷனல் ஹைவேஸிலுள்ள அந்தச் சாலைகளில் மிக அத்தியாவசியமாக நமக்கு வேண்டிய குடிநீருக்கான குழாய்களைப் போடுவதற்காக வெட்டுவதற்கு நாம் இந்தியப் பேரரசிடமிருந்துதான் உரிமை வாங்க வேண்டும், தெழி சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, எடுத்து நடத்த வேண்டுமென்று சொன்னால் அவர்களிடமிருந்து உரிமையைப் பெற வேண்டும், வாய்க்கால்களைப் புதுப்பிக்க வேண்டுமென்றால் நாம் உரிமை பெற வடக்கே போக வேண்டியிருக்கிறது. ஆகவே, எங்களுக்கு உரிமைகளை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் உடனே பிரிவினை என்று சொல்கிறார்கள். இந்த நேரத்தில் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

1972 மார்ச் 30] [திரு. ஏ. எம். இராஜா]

" பிரிவினைவாதிகளுக்குக் கடுமையாக எச்சரிக்கை. இதுவரையில் நீண்ட காலமாக இவர்களைச் சகித்துக்கொண்டிருந்தோம், இனி மேலும் பொறுக்க முடியாது. நான் யாரையும் அச்சுறுத்த வில்லை, இருந்தாலும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், ஏதாவது நடவடிக்கை எடுக்க முடிவெடுத்தால் உலகில் எந்தச் சக்தியும் என்னைத் தடுக்க முடியாது."

ஜனநாயகத்தில், பிரதமராக இருக்கக்கூடிய ஒருவரிடமிருந்து வரும் வார்த்தையா இது ? எவ்வளவு ஆணவமான முறையில், நான் ஒரு நடவடிக்கை எடுக்க முயற்சித்தால் அதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்று ஆணவப் போக்கில், சர்வாதிகாரியைப்போல் ஆணவமாகக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இருந்த நிலைகளையெல்லாம் வரலாறு நமக்கு காட்டுகிறது. இப்படி பேசுவதன்மூலம் இந்திய உபகண்டத்தில் இருக்கும் ஒற்றுமை உணர்ச்சியை, ஒருமைப்பாட்டை இந்த அம்மையார் அவர்கள் தகர்க்கிறார்கள்.

மற்றொரு எடுத்துக்காட்டு, அவர்கள் கட்சியைச் சேர்ந்த கேரளாவின் நிதியமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

" If Kerala's problems were not viewed with sympa thy and under standing and if a ban on overdraft was imposed, it may lead the State to financial crises and strike at the roots of national solidarity "

என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக இன்றைக்கு இந்த அம்மையார் போகும் போக்கு, இந்தியப் பேரரசு போகும் போக்கு இந்திய உபகண்டத்தில் ஒருமைப்பாடு இருக்கக்கூடாது, ஒற்றுமையாக இருக்கக்கூடாது என்ற அளவிற்குச் செய்வதாக இருக்கிறது. ஒரு தணிக்கைக் குழு என்று எடுத்துக்கொண்டால், நம் நாட்டின் பண்பாடு வேறு, கலாச்சாரம் வேறு என்று குறிப்பிடுகிறோம். ஆனால் அவர்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை. இந்தியா முழுவதும் ஒரே பண்பாடு, ஒரே கலாச்சாரம், ஒரே மதம் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நம் இந்திய உபகண்டம் முழுவதும் ஒரே விதமான தணிக்கைக் கட்டுப்பாட்டை வைக்க மறுக்கிறார்கள் இப்படிப் பேசும் நேரத்தில் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியப் பேரரசு நமக்குரிய குறைகளை, நியாயமான வேண்டுகோள்களை உடனுக்குடன் தீர்த்து வைக்கவில்லை யென்றால் இந்த நாட்டின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் சிதறும். இதை நான் மட்டும் கூறவில்லை, அவர் கட்சியைச் சேர்ந்தவர்களே, பெரும் பொறுப் புகளில் இருப்பவர்களே கூறுகிறார்கள். அந்த நிலை ஏற்படுமானால் அதற்குப் பொறுப்பு இந்திரா காந்தி அம்மையாராகத் தான் இருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் அப்படிப்பட்ட எண்ணத்திற்குத் தள்ளப் பட்டால் அதற்கு இந்திராகாந்தி அம்மையார்தான் பொறுப்பாளி என்று கூறிக்கொண்டு அமர்கிறேன் வணக்கம்.

திரு. கே. என். குமாரசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதாவின்போல எனனுடைய சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை மாவட்டத்திலே பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதிகளில் இருக்கும் விவசாயிகள் அரசாங்கத்திலே பட்ட கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாமல், அந்தப் பகுதி விவசாயிகள் மீது ஜப்தி முதலிய நடவடிக்கைகள் இன்றைக்கு எடுக்கப்பட்டு அரசாங்கத்தால் பாதிக்கும் அளவில் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அரசாங்கம் ஏற்கெனவே வறட்சிப் பகுதிகளாக இருக்கும் அந்தப் பிரதேசத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு இந்தக் கடன்களைத் தள்ளி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் முதன் முதலில் கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம், அந்தப் பகுதிகளினுடைய வறட்சித் தன்மையைப் போக்கவேண்டுமென்றால் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தை அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டும்கூட அதற்கான முயற்சிகளை இன்னும் எடுக்கவில்லை என்ற நிலையில் அங்கேயிருக்கும் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படும் சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

அது சம்பந்தமாக அரசாங்கத்தை அணுகிக் கேட்கும்பொழுது கேரளாவில் இருக்கும் தண்ணீரை தமிழ்நாட்டிற்கு எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு வாய்ப்பை அரசாங்கம் உருவாக்கும் என்றும் சொன்னார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பாண்டியாறு, புன்னம்புழா பற்றி கேரள அரசோடு பேசி முடிவு காண முடியும். அந்தத் திட்டம் தமிழகத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அது சம்பந்தமான திட்டங்கள் என்னவாயிற்று என்றுகூடத் தெரியவில்லை. அறிக்கையிலே குறிப்பிட முடியகூல்லை. காரணம்,

கேரள அரசாங்கத்தோடு இருக்கும் நமது சிக்கல்கள் எப்பொழுது தீர்க்கப்படும் என்று அரசாங்கத்தின் சார்பில் உறுதி கொடுத்தாக வேண்டும். அதை நம்பியிருக்கும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் கிணறுகளை ஆழமாகத் தோண்டியும்கூட இன்றைக்கு அதிலேயிருந்து விவசாயிகள் நீர் பாய்ச்ச முடியாத ஒரு சூழ்நிலையிலும் துன்பப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நெல்லித்துறை குடிநீர்த் திட்டம் பற்றி அறிவித்திருக்கிறார்கள். சிங்காநல்லூர் பஞ்சாயத்திலும், பல்லடம், சூலூர் பஞ்சாயத்து யூனியன்களிலும் குடிநீருக்காக மிகுந்த தொல்லைப் படுகிறார்கள். எனவே இதை உடனடியாக அரசாங்கம் அமுலாக்கப் போகிறதா என்பது ஏதோ அப்படியே தூங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் உடனடியாகத் தீவிரமாகச் செயல்பட்டால் 20 லட்சம் மக்களுக்கு வாய்ப்பு ஏற்படும். அதைத் துரிதப்படுத்துமாறு இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 30] [திரு. கே. என். குமாரசாமி]

அடுத்து, இன்னொரு பிரச்னே. தேயிலேத்தோட்டத் தொழிலாளர் பல்வேறு பகுதிகளில், நீண்டகாலமாகத் தங்களுடைய கோரிக்கைகளை தனித்தனியாக வைத்தும் தோட்ட முதலாளிகளே வைத்தும் கூறியும் அவர்களது குறைகள் தீர்க்கப்படவில்லே. பல வருஷங்களாக சம்பள உயர்வு போன்ற பல்வேறு பிரச்னேகளே, 23 அம்சக் கோரிக்கைகளே அரசாங்கத்திற்கு அனுப்பி சகல தொழிற் சங்கங்களும் ஒன்று சேர்ந்து இதன் பேரிலே அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, உண்ணுவிரதம் போன்ற போராட்டங்கள் நடைபெறும் சூழ்நிலேயில் அப்படிப்பட்ட தொழிலாளர்கள் பிரச்னேயில் அரசாங்கம் தலேயிட்டு அவர்களது நீண்ட நெடுநாளேய கோரிக்கைகளான சம்பள உயர்வு போன்ற பிரச்னேகளுக்கு முடிவுகாண வேண்டுமென்று முடிவெடுப்பது நல்லது. அப்படிச் செய்து தமிழ் நாட்டில் தொழில் அமைதியை உண்டாக்க வேண்டுமென்பதை இன்றைய அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் சரியான முயற்சியாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ஒரு சமுதாயத்தின் தொழில் உற்பத்தி பாதிக்கப்பட்டால் அவர்களோடு சேர்ந்து வாழும் மக்களும் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள் என்பதை உணர்ந்து அதற்கான காரியங்களேச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி பீடித் தொழிலாளர்களே எடுத்துக் கொண்டால் அரசாங்கம் தீர்மானித்த சம்பளம் முதலியவைகளே பல முதலாளிகள் கொடுக்க மறுப்பதால் போராட்டம் இருக்கிறது. இந்தப் பிரச்னேயில் எந்த முடிவை மேற்கொண்டாலும் அந்த முடிவுகளே அமுலாக்குவதற்கு எந்த முதலாளி மறுத்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளே எடுக்கவேண்டும். அப்படி முன்வராமல் இருப்பதன் மூலம் முதலாளிகள் தொழிலாளர்களே ஏமாற்றும் சூழ்நிலேகளேப் பார்க்கிறோம். அந்த நிலேமையைப் போக்கவேண்டும். சட்டங்கள் தொழில் உறவுகளே ஏற்படுத்தும் முறையில் சரியாக அமல் ஆக்கப்பட வேண்டும் என்று சொல்லும்பொழுது அதை மீறும் யாரும் எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீட்டுமனே ஒதுக்குவதற்காக மாவட்டத்திற்கு ஒரு லட்சம், ஒன்றேகால் லட்சம் என்ற அளவில் ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதாது. தற்போது வீட்டுமனே வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. என்னுடைய பகுதியில் பல்லடம், சூலூர்பேட்டை போன்ற பகுதிகளிலிருந்து வீட்டு மனே கேட்டு மகஜர்கள் அனுப்பி ஏழெட்டு ஆண்டு காலமாகியும் இன்னும் இடம் கிடைக்காமல் இருந்து வருகிறது. சூலூர் பகுதியில் வெள்ள பாளேயம் என்ற கிராமத்திலிருந்து மனே கேட்டு எட்டு ஆண்டு காலமாகியும் கூட இன்னும் கிடைக்கப் பெறுமல் இருக்கிறது. சூலூர், இருகூர் பகுதியில் சர்வே செய்யப்பட்டு முடிந்தும் அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. அரிசனங்களுக்கு வீட்டுமனே ஒதுக்குவதில் அரசாங்கம் கொஞ்சம் சீக்கிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் கிணறு வெட்டுவதற்காக தோட்டா வாங்க வேண்டுமென்ருல் அந்தத் தோட்டா லைசென்சை தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுப்பதன் மூலமாக தோட்டாவை விவசாயிகளுக்கு நியாயமான விலைக்கு விற்காமல் திருட்டுத்தனமாக விற்பதாகப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இப்படி தனி நபர்களுக்கு லைசென்ஸ் கொடுக்காமல் பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக இதை விற்பனை செய்யும் நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய அபிவிருத்திக்குக் குட்டைகளை அதிகமாக வெட்டவேண்டும். சின்னவேடம்பட்டி என்ற கிராமத்தில் பல வருஷங்களாக காங்கிரஸ் அரசு இருந்தபோதே கூட 100 ஏக்கரில் குட்டை அமைக்கும் ப்ரபோசல் போடப்பட்டு அது சம்பந்தமாக முடிவு ஏற்படாமலேயே இருந்து வருகிறது. இந்த அரசாங்கம் வந்தபிறகு பல்வேறு முயற்சிகளை எடுத்து பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று அந்த குட்டை கட்ட வேண்டிய இடத்தைக்காட்டி, அமைச்சர் அவர்களும் அதை கட்டிக் கொடுப்பதாக விவசாயிகளுக்கு உறுதிமொழி கொடுத்தார்கள். அது என்னவாயிற்று என்றே தெரியவில்லை. இதனால் அந்தப்பகுதி விவசாயப் பெருமக்கள் பெருத்த ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிருர்கள். சூலூருக்குப் பக்கத்தில் ராமச்சந்திரன்குளம் என்பதை 100 ஏக்கரில் அமைத்துக் கொடுத்தால் நூற்றுக் கணக்கான விவசாயிகள் நன்மை அடைய முடியும். இந்த இரண்டு குளங்களை அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமேன்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மிகவும் மோசமாகப் போய்விட்டன. அந்தச் சாலைகளில் போக்குவரத்து போக முடியாமல் திண்டாடுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் அந்தச் சாலைகளை ரிப்பேர் செய்வதற்குப் பணமில்லாத நிலைமையில் அந்தச் சாலைகள் பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றன. அந்தச் சாலைகளைப் பழுதுபார்க்க அரசாங்கம் அந்த ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் பண உதவி செய்து உதவ வேண்டும். பஸ் போக்குவரத்து ரோடுகளை அரசாங்கமே ஏற்று சீரமைத்துக்கொடுக்கவேண்டும்.

அப்படி என்னுடைய தொகுதியில் இரண்டு ஹைவேஸ் ரோடுகள் இருக்கின்றன. ஒன்று கொச்சின்-சென்னை ரோடு, இன்னொன்று கோவையிலிருந்து ஊட்டி-திருச்சி ரோடு. இந்த ரோட்டின் இடையில் பெரிய பள்ளங்கள் இருக்கின்றன. இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. அங்கு அந்த ரோட்டைச் செப்பனிட்டு ஆங்காங்கு பாலங்களைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொதுவாக அரசாங்கத்தின் துரித நடவடிக்கை தேவை என்று கூறி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் முதல்வர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்க ஒப்படைவை வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இப்போது தமிழ்நாட்டில் இருக்கும் தொழிலாளர்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற அடிப்படை

யில் பேசினார். அவர்கள் தொழிலாளர்கள் நல மானியக் கோரிக்கையின் போது இதே கருத்தைச் சொன்னார்கள். அதற்குப் பின்னால் நான் பேசுகின்ற சந்தர்ப்பத்தில் தமிழ்நாட்டு அரசாங்கம் தொழிலாளர் துறையில் எடுத்திருக்கும் நல்ல நடவடிக்கைகளை எடுத்துக்காட்டி இதைவிடச் சிறந்த முறையில் தொழிலாளர்களுக்கு நன்மை செய்கிற அரசாங்கம் இருக்குமானால் எனக்குப் பின்னால் பேசக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப்பற்றி குறிப்பிடவேண்டுமென்ற அடிப்படையில் நான் கருத்தைத் தெரிவித்தேன். அதற்குப் பின்னால் பலபேர் பேசியிருந்தாலும்கூட இந்த அரசாங்கத்தை வேறு மாநில அரசாங்கங்களோடு ஒப்பிட்டு நம்முடைய அரசு தொழிலாளர் நலனில் உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை யாராலும் சுமத்த முடியவில்லை என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் ஒன்றை கவனப்படுத்த விரும்புகிறேன். அண்மையில் நடைபெற்ற பல்வேறு தொழிலாளர் போராட்டங்களைப் பொறுத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை அத்தனைபேரும் தெளிவாக அறிவோம். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1964-ம் ஆண்டு கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் வேண்டுமென்ற கோரிக்கைக்காகப் போராடினார்கள். போராட்டம் என்றால் எல்லோரும் வேலையைச் செய்துவிட்டு வேலை முடிந்த பிறகு அமைதியாக காம்பவுண்டுக்குள் உட்கார்ந்துகொண்டார்கள், தங்களுடைய கோரிக்கையைக் கவனப்படுத்துவதற்காக. அந்தச் சந்தர்ப்பத்தில் அன்று இருந்த காங்கிரஸ் அரசாங்கம் கூடியிருந்த தொழிலாளர் மத்தியில் தடியடிப்பிரயோகம் நடத்தி அவர்களை அப்புறப்படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கோவை வந்திருந்தார்கள். அவர்களைச் சந்திப்பதற்காக தொழிற்சங்கத் தலைவர்கள் சர்க்யூட் ஹவுசுக்குச் சென்று முதலமைச்சரைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னோம். கிடைத்த பதில் எல்லாம் "நீங்கள் போராட்டம் நடத்த ஆரம்பித்த பிறகு என்னை வந்து பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறீர்கள், உங்களைப் பார்க்க முடியாது, போ" என்று எங்களை அனுப்பி வைத்தவர்கள்தான் இன்றைக்கு இந்த அரசாங்கத்தைப்பற்றி குறை கூறுகிறார்கள் என்பதை நினைக்கும்போது உள்ளபடியே வியப்பாக இருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை முழுக்க முழுக்க வரவேற்கிறேன்.

பொதுவாக இன்னொரு கருத்தையும் அவர்கள் சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். "திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து கடந்த நான்கு ஆண்டுகளாக பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில் அரசாங்க நிர்வாகத்துறையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள், மற்றவர்கள் குறுக்கிடுகிறார்கள். கட்சிக்காரர்கள் குறுக்கிடுகிறார்கள்" என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தை உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகின்றேன். பொதுமக்கள் பிரதிநிதிகள்

எந்தக் கட்சி அமைப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பொது மக்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையில் நான் உதாரணத்திற்கு ஒன்று கூற விரும்புகிறேன்.

எங்கள் பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் இரண்டு தரப்பாருக்கு இடையே தகராறு ஏற்பட்டு விடுகிறது. தகராறு ஏற்பட்ட பிறகு ஒரு தரப்பார் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுக்கிறார். அந்தத் தகவல் கொடுத்தவுடன் காவல் நிலையத்திலிருந்து விசாரிக்க ஒருவர் போகிறார். இதற்கு முன்பெல்லாம் இப்படி தகராறு ஏற்பட்டால் கிராமத்திலுள்ள செல்வாக்கு மிகுந்தவர்கள், வசதி படைத்தவர்கள், கர்ணம், முன்சீப், பஞ்சாயத்துத் தலைவர் போன்றவர்கள் போலீஸ் அதிகாரியிடம் அவர்கள் நடவடிக்கை எடுப்பதிலேயே தங்களுடைய எண்ணத்தைக் கூறுவார்கள். அப்படி அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி சொல்லுவதன் காரணமாக உடன்பாடு வராமல் போய்விட முடியும்.

அதிகாரிகளை அணுகும்போது பொதுமக்களின் பிரதிநிதி என்ற முறையில்தான் செல்கிறார்கள். ஒருவர் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, அல்லது கிளைக் கழக செயலாளராக இருந்தாலும் சரி, அல்லது எந்தக் கட்சியின் செயலாளராக இருந்தாலும் சரி, பொதுமக்களின் கோரிக்கைகள் மீதுதான் அதிகாரிகளைச் சந்திக்கச் செல்கிறார்கள். ஆகவே அப்படிச் செல்வதில் எந்தத் தவறும் இல்லை. அல்லது ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால் ஆதாரங்களோடு சுட்டிக் காட்டி இன்னார் தப்பு செய்தார் என்று சொன்னால் ஒத்துக்கொள்ளலாம்.

பொதுமக்களின் பிரதிநிதிகள் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது அவர்கள் வசதி படைத்தவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லவேண்டிய அவசியம் கிடையாது. தொலைபேசி மூலம் பேசி அதிகாரிகளுக்கு உத்தரவு போட முடியும் அவர்களுக்கு. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகப் பிரதிநிதிகள் ஏழைக் குடும்பங்களிலிருந்து வந்திருப்பதால் அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் நேரடியாகச் சென்று காரியங்களை எடுத்துச் சொல்கிறார்கள். இப்படிச் செல்வதால் மட்டும் குறை கூறுவது என்பது நியாயம் அல்ல.

அடுத்து, என் தொகுதி பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்று திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் குடிநீர் பஞ்சம் இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்தில் 23 ஊராட்சி மன்றங்கள் உள்ளன. அவற்றில் நான்கு ஊராட்சி மன்றங்களைத் தவிர மீதமுள்ள ஊராட்சிமன்றங்களில் குடிநீர் பஞ்சம் கடந்த ஒரு மாத காலமாக ஆரம்பித்துவிட்டது. வெயில் ஏற ஏற எந்தஅளவில் அது முடியும் என்று தெரியாது. ஆகவே முதல்வர் அவர்கள் அவர்களது நிதியிலிருந்து கோவை மாவட்டத்தில், குறிப்பாக பல்லடம், அவிநாசி வட்டங்களிலும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் குடிதண்ணீர் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 30] [திரு. சு. துரைசாமி]

பல்லடம், அவிநாசி வட்டாரங்களைப் பொறுத்தவரையில் அங்குள்ள விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க—பரம்பிக்குளம் ஆளியாறு திட்டமாகயிருந்தாலும் சரி—அங்குள்ள கிணறுகளுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு வாய்க்கால் பாசனம் இல்லாவிட்டாலும்கூட அங்குள்ள கிணறுகள், குட்டைகளுக்கு தண்ணீர் வரக்கூடிய விதத்தில் தக்க ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும். அப்போதுதான் அங்குள்ள விவசாயிகளுக்கு ஓரளவிற்கு உதவி செய்ததாக அமையும். அதோடு குடிநீர் பஞ்சமும் ஓரளவிற்கு நீங்கும்.

திருப்பூர் நகரத்தில் 125,000 மக்கள் வாழ்கிறார்கள். அவ்வளவு பெரிய மக்கள் தொகை கொண்ட ஒரு நகரத்திற்கு முன்பு கட்டப் பட்ட ஆஸ்பத்திரி தான் இருக்கிறது. அங்கு 56 படுக்கைகள்தான் உள்ளது. அதற்கு வைர விழா கூட கொண்டாடிவிட்டார்கள். அங்கு ஒரு பெரிய மருத்துவமனை கட்ட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. மருத்துவத் துறையும், பொதுப் பணித்துறையும் 200 படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரியை கட்டுவதற்கு செயற்குறிப்பு ஒன்றினைத் தயாரித்துள்ளது. அரசாங்கமே அதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டாலும் கூட பொது மக்களிடமிருந்து ஐந்து லட்சம் ரூபாய் திரட்டிக் கொடுக்கக்கூடிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். இரண்டு லட்சம் ரூபாய் வரை பணம் சேர்த்திருக்கிறோம். மீதி உள்ளதை விரைவில் சேர்த்துக்கொடுக்கிறோம். எனவே முதல்வர் அவர்கள் அந்த நகரத்திற்கு அந்த 200 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையை விரைவில் அமைத்துக் கொடுக்கும் ஏற்பாட்டினைச் செய்துகொடுக்கவேண்டும் என்று வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன். அதற்கு வேண்டிய நாற்பது ஏக்கர் நிலத்தை நன் கொடையாகக் கொடுக்கிறோம். அங்கு வேண்டிய தண்ணீர் வசதியும் இருக்கிறது. முன்னால் கூட மருத்துவத் துறையினரும், பொதுப் பணித் துறையினரும் அந்த இடத்தைப் பார்வையிட்டு அது ஏற்ற இடம் என்று அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கான நடவடிக்கைகளை முதல்வர் அவர்கள் விரைவில் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அங்கு தொழிலாளர்களுக்கான இரண்டு ஈ.எஸ்.ஐ. மருந்தகங்கள் உள்ளன. அந்த இரண்டு மருந்தகங்களும் வடக்குப் புறத்தில் இருக்கின்றன. பனியன் பாக்டரியைச் சேர்ந்தவர்கள் அநேக மாக தெற்குப்புறத்தில் இருந்துதான் வந்து கொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலிருந்து நாலைந்து மைல் கடந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே தெற்குப்புறத்தில் ஒரு மருந்தகம் அமைக்கப்படவேண்டும். அதுவும் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அதையும் விரை வாகச் செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து, வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் வருவாய்த் துறை வாரியம் என்பது விரைவாக எடுத்துவிட வேண்டிய ஒன்றாகும். உதாரணமாக, திருப்பூர் நகரத்தில் சூசைபுரம் என்ற இடத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் சப்-கலெக்டர் அவர்கள்

எக்ஸ்-சர்வீஸ்மென்-க்கு சில பேர்களுக்கு நிலம் பட்டா செய்து கொடுத்திருந்தார்கள். பின்னுல் டி.ஆர்.ஓ. அதை ரத்து செய்து விட்டார்கள். ரெவின்யூ போர்டு அதுபற்றி பரிசீலனை செய்து முடிவு செய்கிறோம் என்று அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாகிவிட்டன. அப்படி அறிவிக்கப்பட்டதற்குப் பின்னர் பலர் அவ்விடங்களை ஆக்கிரமித்துக்கொண்டு வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். என்னைப் போன்றவர்களிடம் வந்து வீடுகள் கட்டிக் கொள்ளலாமா என்று கேட்டால் எங்களால் உத்தரவாதம் கொடுக்க முடியவில்லை. வீடுகள் கட்ட முடியாது என்று சொன்னாலும் அதையும் மீறி வீடுகள் கட்டிக்கொள்கிறார்கள். ஆகவே அதுகுறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது.) நிலம் ஒப்படை செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தான் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட காரியங்களில் மிகுந்த அக்கறை கொண்டு செயல்படும் அரசை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. நா. கிருட்டிணன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை ஒதுக்கீட்டு மசோதாமீது பேசும்போது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு எனது கருத்துக்கள் சிலவற்றை இங்கு சமர்ப்பிக்கிறேன்.

எனது தொகுதியாகிய பேரணம்பட்டு தொகுதி உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் தஞ்சையை அடுத்து இரண்டாம் நிலையில் உள்ளது. அப்படி உணவு உற்பத்தி செய்யக்கூடிய இடத்தில் நீர் பற்றுக்குறை காரணமாக அங்கு விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அங்குள்ள விவசாயிகளின் நலனுக்காக பத்திரபள்ளி, மோர்தானு அணைகளை கட்டித் தருவது என்பது பல ஆண்டுகளாக பரிசீலனையில் இருந்து வருகிறது. அதை வெகு விரைவில் செயல்படுத்தித் தர ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என் தொகுதியில் வாணியம்பாடி, உதேந்திரத்தை இணைக்கும் பாலாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டித்தர வேண்டு மென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஆம்பூர் குடியேற்றத்திற்கிடையே நரியம்பட்டு அருகில் கோட்டாற்றில் ஒரு தரைப்பாலம் அமைத்துத்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தரைப்பாலத்தை அமைத்துத் தருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆனால் அப்படி அவர்கள் வாக்களித்தும்கூட இன்றுவரை அது செயல் படாமல் இருந்துவருகிறது. ஆகவே அதையும் உடனடியாகச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஏழை எளிய மக்களுக்கு காட்டு நிலங்களை கொடுப் போம் என்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். என் தொகுதி காரப்பட்டு, எருக்கம்பட்டு, அரங்கல்துர்க்கம் காடுகளில் 5,000 ஏக்கர் வரை காட்டு நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அந்த நிலங்களில் எந்த விதமான மரங்களோ அல்லது செடிகளோ இல்லை. இருபது ஆண்டுகளாக

அப்படித்தான் இருக்கிறது. எனவே அந்த நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்கு பட்டா செய்து கொடுத்தால் அந்நிலங்கள் விவசாயத்திற்கும் பயன்படும். ஆகவே அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதி சுற்றுவட்டாரத்தில் வேலூர், வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற இடங்களில் பீடித் தொழில் செய்யும் முஸ்லீம் பெருங் குடிமக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். ஆனால், அந்தப் பீடித் தொழில் நடத்துகிற முதலாளிகள் இந்தத் தொழிலாளர்களுக்கு ஆண்டு பூராவும் வேலை கொடுக்காமல் ஆண்டுக்கு ஆறு மாதகாலம்தான் வேலை கொடுக்கிறார்கள். அதன் காரணமாக அந்த முஸ்லீம் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதுபற்றி அரசுக்கு மனு செய்தும் கூட அது கவனிக்கப்படவில்லை. அந்தத் தொழிலாளர் மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். ஆகவே அரசு இதைத் தடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த நல்ல வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறிக்கொண்டு முடிக் கிறேன். வணக்கம்.

Dr. H. V. HANDE : Sir, I wish to offer a few remarks with regard to the Appropriation Bill.

Now I would like to refer to certain statistics re-tax revenue given in the Detailed Budget Memorandum for the year 1972–73. The Appropriation Bill has been so framed that the common man is hit at several points both by the Central taxes and the State taxes. In other words, we have mainly taken up measures with regard to the direct tax and we have increased the direct tax. So far as the share of Central taxes is concerned, it has been increased to Rs. 5·97 crores. As regards the State taxes, we have increased it to Rs. 16·96 crores. In other words, the total increase in the share is Rs. 22·93 crores. What is the method by which we have increased it ?

As regards the Central taxes, we have increased the share of Union Excise and additional Excise Duties to Rs. 4·09 crores. In other words, the Union Excise duty directly affects the common man and it is an indirect taxation. Then we have increased the Sales Tax by Rs. 9·4 crores, excise duties by Rs. 10·37 crores and Union Excise by Rs. 4·09 crores. Thus there is a total increase of Rs. 23·86 crores and that is mainly due to indirect taxation and not due to direct taxation.

My main grievance against the Government which are crying from the house tops that they are for the poor man and the common masses is that they have indulged in indirect taxation. We have increased the State Excise duty by Rs. 10·37 crores. During 1971–72 it was Rs. 25·12 crores and during 1972–1973 it is Rs. 35·49 crores. Thus there is an increase to the tune of Rs. 10·37 crores. Whereas the tax on luxuries has not appreciably increased. The total taxes on luxurie

amounted to Rs. 10·94 crores in 1971–72 and Rs. 10·59 crores in 1972–73. In other words, there is a fall in the estimate to the tune of Rs. 35 crores. So also with regard to the Entertainment Tax, in 1971–72 it was Rs. 9·00 crores and in 1972–73 Rs. 8·68 crores. In other words, there is a reduction to the tune of Rs. 32 crores. This shows that the Government are making great provision for greater evasion of tax and that is the important point.

Then I come to electricity. Last year the budget estimate was Rs. 8·7 crores and Rs. 3·86 crores this year. There is a reduction to the tune of nearly Rs. 5 crores. On what basis this has happened, we do not know. Then I come to taxes and duties and other receipts. Last year it was Rs. 8·63 crores and only Rs. 3·75 crores this year . There is a fall of about Rs. 4·88 crores. I request the Hon. Chief Minister to give clarifications with regard to the above points when he replies to the debate.

Then I come to the most important problem relating to the veterinary college students. I know that this matter has been engaging the attention of the Hon. Chief Minister and the Hon. Minister for Health for the past three or four days. Their problem has become worse. They have exhibited their anxiety by courting arrest yesterday and of course they were fortunately let off subsequently. To-day also they have gone on hunger-strike. If the Hon. Chief Minister gives some sort of assurance, it would be possible for the students to withdraw their strike. Sir, yesterday the Hon. Minister for Health had stated that the period of 7 or 8 months training during vacations was not taken into account by the University and the actual period of training was only 5¼ months. In other words it is not compulsory......

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். நேற்றைய தினம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிக்கை அளிக்கிற நேரத்தில் 5¼ ஆண்டு படிக்கிறார்கள், ஒரு ஆறு மாத காலம் பிராக்டிகல் பயிற்சி பெறுகிறார்கள், ஆக 5¾ ஆண்டு பயிற்சி பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். அதை நீங்கள் 5¼ ஆண்டு என்று ஊகித்து எடுத்துக் கொண்டு, அதுவும் தவறான தகவலாக மாணவர்கள் மத்தியில் பரவக் கூடாது. மாணவர்கள் பிரச்னை பற்றி பேசுகிறார்கள். நேற்றைய தினம் வாக்குறுதி கொடுத்ததற்குப் பிறகு, டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. சுப்பு அவர்களும் போய் சமாதானம் செய்ததாகவும், அதைக்கூட மாணவர்கள் கேட்கவில்லை. அத்துமீறி சில செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.

1972 மார்ச் 30]

Dr. H. V. HANDE : Sir, my point is that so far as the Regulation and Syllabus for the B.V.Sc. Degree Examination prescribed by th University are concerned, it is stated there in—

" At the end of the fourth year course of study the students shall undergo a course of practical training in a farm for 1½ months during the vacation ".

So that is compulsory and that must be taken into account. I request that the whole matter should be reviewed and I hope and trust that the Government will do something about it.

Then I come to the strike of lorry owners which is to commence from 1st April..............

(Mr. Chairman sounded the gong.)

Sir, I want five more minutes.

So far as the strike of the lorry owners is concerned, I request the Hon. Chief Minister to take some anticipatory measures and convene a meeting to discuss the problem. I hope he will do something about it.

Then I want to refer to the number of persons who are unemployed on account of the surrender of routes by private operators in Madurai. They are not given jobs in the Pandiyan Transport Corporation. Some of them met me about 15 minutes ago and represented their case. I request the Government to do the needful in the matter.

Then I come to the cost of living index. I request the Hon. Chief Minister to find out why exactly there has been a steep fall in the cost of living index. The argument of the Statistics Department would be that the wholesale price has come down. Our argument is that the wholesale price has not come down. There must be something wrong either at the stage of price calculations in Madras or at the stage of constructing the index number by the Labour Bureau in Simla. The State Government must take the earliest opportunity to locate the error, if any, and rectify the same with retrospective effect, as it affects 3 lakhs of workers and the Trade Union leaders also have given a statement in that regard. I hope and trust that the Hon. Chief Minister will do something and find out why exactly this has happened.

Lastly, Sir, I have got to talk about an unpleasant matter. I have to bring to the attention of the Hon. Chief Minister a serious irregularity which had taken place somewhere near Tiruchirappalli, in the Coleroon tollgate checkpost. I would particularly express about the action taken against one A. Jagannathan, Assistant Commercial Tax Officer. He was first transferred to Madurai under orders of the Board of Revenue (C.T.) Ref. Cl. 8902/70, dated 17th November 1970 and the Commissioner

for Land Revenue, Food Production and Commercial Taxes was the late Mr. T. A. S. Balakrishnan, I.A.S. This order has been signed by C. Sundaramurthy, Secretary (C.T.). This A.Jagannathan, Assistant Commercial Tax Officer was transferred on 17th November 1970. Then again on 19th November 1970, that is two days later, he was re-transferred from Madurai division to Kanyakumari district vice a vacancy and now I understand Jagannathan has been suspended. For what reasons he has been suspended is not known. My information is that he acted in a very bold and clearcut manner, the manner in which any Officer should act and for which any officer should get praise and compliment.

All that he did was on 8th November 1970 at about 11.55 hours, in the Coleroon tollgate Checkpost, Tiruchirappalli district, he caught hold of a lorry, MDY 3670, named AK and NP. The Hon. Chief Minister will recall that on 16th March 1972, in connection with a fake notes case, some persons were caught. One Veerappan, A. Karuppiah and Poornathammal were also involved in this particular case. When this lorry was passing through that tollgate, this officer stopped that lorry. The owners of the goods were as per trip sheet record and the consignee was one Durairaj Chetty of Tiruvannamalai. One Mr. B. Jayaraman an employee in a rice mill wanted to talk over the phone from the checkpost and he agreed to pay for the phone charges. He talked to phone No. 145 Tiruvannamalai with one Mr. Kannan. These are all on record. He wanted the whole thing to be released immediately. Then the matter was referred to the superior officer, the C.T.O. at Tiruchirappalli Town. Then it was ordered by him that it should be left off...

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது சரியாகப் புரியவில்லை. இரண்டையும் சொல்லிவிட்டு விட்டுவிட்டார்கள். திருவண்ணாமலையில் கள்ள நோட் பிடிபட்ட லாரியும், திருச்சியில் நடைபெற்றதாகச் சொல்லுகிறாரே அந்த லாரியும் ஒன்று என்று வாதாடுகிறார்களா ?

DR. H. V. HANDE : My contention is that this lorry is owned by A. K. & N. P. As far as the fake notes were concerned, I have come to know that A. Karuppiah and N. Poornathammal were supposed to be involved in it and along with them one Veerappan has been arrested. I do not say anything more than what I know.

மாண்புமிகு திரு. செ.மாதவன் : தயவு செய்து—இப்படி வெளியே பேசலாம் —சட்டமன்றத்தில் சொல்வது சரியல்ல. திருச்சி ஏ.ஸி.டி.ஓ. லாரி, அதை அத்தோடு விட்டுவிட்டார்கள். திருவண்ணாமலை, கள்ள நோட்டு பூரணத்தம்மாள், அம்மாள் புருஷன்—அதோடு விட்டுவிட்டார்கள். அந்த லாரிதான் இந்த பூர்ணத்தம்மாளுக்குச் சொந்தம் என்று நீங்கள் சொல்கிறீர்களா? அந்தத் தவறைச் செய்யக்கூடாது. அந்த

லாரிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அந்த லாரி சொந்தக்காரர் யார், அவர் எந்த ஊர் என்ற விவரங்களெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். அந்த லாரி நெம்பர் எம்.டி.ஒய். 3670. அந்த லாரிக்கு ஓனர் யார் என்பதும் விசாரித்திருக்க வேண்டும். பூரணத்தம்மாளுக்கும், அதற்கும் சம்பந்தமே இல்லை. அந்த நபர்களுக்கும் இந்த லாரிக்கும் சம்பந்தம் இல்லை. இது திருச்சியில் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட லாரி. அதனுடைய சொந்தக்காரர் வேறு ஒருவர், எ. கன்னையா நாயுடு, என். பழநிச்சாமி. அதை ஓட்டி வந்த பாண்டியன் கள்ளநோட்டு வழக்குக்கும், அதற்கும் சம்பந்தம் உண்டா என்பதைத் தெளிவாக ஆதாரத்தோடு சொன்னால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். எங்களுக்குக் கிடைத்த தகவல்படி, நாங்கள் விசாரித்ததில்—ஆதாரம் காட்டுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்—அந்த லாரிக்கும் பூரணத் தம்மாளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. "கே" என்றால் கருப்பையா, "பி" என்றால் பூரணத்தம்மாள் என்று வெளியிலே வேண்டுமானால் சொல்லிக்கொண்டிருக்கலாம். சட்டமன்றத்தில் சொல்வது சரியல்ல. எம்.டி.ஒய். 3670 ரிஜிஸ்டர் செய்யப்பட்ட லாரி. எங்கே ரிஜிஸ்டர் செய்யப்பட்டது என்பதை அங்கத்தினர் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அதில் ஒன்றும் சங்கடம் இல்லை. எங்களைக் கேட்டால் கூட நாங்கள் சொல்லியிருப்போம்.

பூரணத்தம்மாளுக்கு இந்த லாரி சொந்தமல்ல என்பதைத் தெரிந்து கொள்ளாமல் பேசுவது பொருத்தமல்ல, அது அபவாதத்திற்கு இடம் அளிக்கும். (ஆரவாரம்).

Dr. H. V. HANDE : Of course people might. ஆரவாரம் செய்து கை தட்டலாம். அதைப்பற்றி குறை இல்லை.

My point is this Why was this lorry let off? This is where suspicion starts.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உங்கள் குற்றச்சாட்டைச் சொல்லுங்கள். குற்றச்சாட்டு எது என்று சொன்னால் பதில் சொல்லலாம். எ.ஸி.டி.ஓ. இந்த லாரியை நிறுத்தியது சரி என்று கனம் அங்கத்தினர் வாதாடுகிறார்களா? விட்டது சரியில்லை என்று வாதாடுகிறார்களா? காரணம் என்ன என்று சொன்னால், அதற்குப் பதில் சொல்ல முடியும்.

Dr. H. V. HANDE : I will explain it. There was a telephone conversation.... லாரியை விடக்கூடாது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத் தான் கேட்கிறார். ஏன் விடக்கூடாது ? என்ன சாமான் இருந்தது ? ஏன் விடக்கூடாது ?

Dr. H. V. HANDE : Because at that time he had no records for the goods transported ; he did not have the connected records.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தவறான தகவல் தருவது அதில் தான் ஆபத்து வருவது. ஜகன்னாதன் என்று யாருக்காக வாதாடுகிறாரோ அவர் கையால் எழுதப்பட்ட ரிகார்டு இருக்கிறது. அந்த லாரியில் எந்த சாமான்களை எடுத்துக்கொண்டு சென்றார்கள் ? கள்ள நோட்டு

வழக்கு என்று சொல்லிவிட்டு, அதில் வந்தது கள்ள நோட்டு என்று சந்தேகம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. லாரியில் வந்தவர்கள் காண்பித்த ரசீது :

பெரிய தெரு,
திருவண்ணாமலை.

எனக்குச்சொந்தமான சினிமா செட்டை எம்.டி.ஒய். 3670-ஏ. கே. அண்டு என். பி.-யின் லாரியில் எனது சொந்த ஊருக்கு, குழித்தலை தாலூகா, தரகம்பட்டி, டூரிங் கேம்ப் முடிந்து சினிமா சம்பந்தப்பட்ட சாமான்களை லாரியில் அனுப்பி உள்ளேன் என்று எழுதியுள்ளார். அதைப்பார்த்த பின்னும் லாரியை தடுத்து நிறுத்தியது டாக்டர் ஹாண்டே சரி என்று ஒத்துக் கொள்கிறார்களா ?

Dr. H. V. HANDE : That is the statement of the person who was in the lorry. My contention is that he did not have the necessary documents and he had no records for the goods transported. He did not have the permit.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டூரிங் டாக்கீஸில் உள்ள பழைய சாமான்களுக்கு பெர்மிட் வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்று எங்கே யாவது சட்டம் இருக்கிறதா ?

Dr. H. V. HANDE : Then why did he talk over the telephone ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதையும் விசாரித்து இருப்பார் களேயானால் உண்மை தெரியும். ஏதோ தொலைபேசி நம்பர் சொல்லி, யாரோ பேசி சிபார்சு செய்து விட்டிருக்கிறார்கள் என்று யாரோ சொல்லி, அந்த ஊகத்தில் பேசுவது என்பது கூடாது. எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் அவர்கள் சொல்லியிருப்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் பேஸ் வால்யூ ஆக எடுத்துக் கொண்டிருக்கக்கூடாது. வெளியில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். அதை ஆராய்ச்சி செய்து தவறான தகவல்களாக இருந்தால், அதைத் தரமாட்டார்கள் டாக்டர் ஹாண்டே அவர்கள் என்ற நம்பிக்கை உண்டு. சாமானுக்குச் சொந்தக்காரர் தான் அங்கிருந்து தொலைபேசியில் சொல்லி, எனது சொந்தக்காரர் சாமான், அந்த சாமானுக்கு ரசீது அங்கே இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார். வேறு ரசீது வேண்டுமானாலும் மறுநாள் தந்துவிடுகிறேன் என்றும் அவர்கள் தொலைபேசியில் சொன்னார்கள். தொலைபேசியில் பேசினதில் என்ன தவறு ? சொந்தக்காரர் சொன்னதில் என்ன தவறு என்பதை விளக்க வேண்டும். அது மாத்திரம் அல்ல. லாரி டிரைவர் இரண்டு மணி நேரம் காலம் கொடுப்பீர்களேயானால்—இந்த ரெகார்டு தவிர வேறு ரெகார்டு தேவையில்லை என்று சொல்லப்பட்டு—அப்படித் தேவை என்றாலும் கொண்டு வந்து தருகிறேன் என்று ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார். அதற்குப் பின்னாலே—டாக்டர் ஹாண்டே வாதாடு கிறார்களே அந்த ஏ.வி.டி.ஓ. அதற்குப் பின்னாலே, நிறுத்தி வைத்த

தற்குக் காரணம் என்ன ? தனிப்பட்ட நபராக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் சரி, ஒரு அதிகாரி அப்படி நிறுத்தி வைத்ததற்குக் காரணம் என்ன ? அது சரி என்று டாக்டர் ஹாண்டே வாதாடுகிறார்களா ?—

Dr. H. V. HANDE : The officer was not at all satisfied about the statement given by the person ; the officer had every right to question it. Instead of appreciating the officer for his stand, he has been punished.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுவும் தவருகச் சொல்கிருர்கள். ஏ.ஸி.டி.ஓ. ஸ்டேட்மெண்டில் ஸாடிஸ்ஃபை ஆகி, அவர் உத்தரவு போட்டு, கொண்டு போகலாம் என்று எழுதியுள்ளார்கள்.

Dr. H. V. HANDE : My whole contention is the lorry came there with goods. It was stopped by the particular officer. Then the officer says, 'I am not going to allow this ; I want to see the trip sheet and the records for transport of the goods'. And then the person telephones a certain number in Thiruvannamalai. Then comes the higher officer from Tiruchirappalli, the Deputy Commissioner from Tiruchirappalli at 14–30 hours and after a lot of persuasion, the lorry is let off These things require clarification.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தவருன தகவல் சொன்னால் விடமாட்டோம். இன்னொரு தகவல் சொல்லுகிருர். அவர் கைப்பட எழுதியது இங்கே இருக்கிறது. யாருக்காக டாக்டர் ஹாண்டே வாதாடுகிருரோ அவர் அந்தப் பொருள்களை லாரியில் அனுப்பிய பிறகு மாலை 4-25 மணிக்கு வெகுநேரம் கழித்து சி.டி.ஓ. அங்கே போயிருக்கிருர். அவர் போய்தான் விடப்பட்டது என்று சொன்னது முற்றிலும் தவறு.

Dr. H. V. HANDE : Why there was interference from the higher officers ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தச் சட்டத்தில் அந்த ஏ.சி.டி.ஓ பண்ணினுர்? சாமான்கள் என்ன என்ன என்று அவரே எழுதியிருக்கிருர். வெளியே யாராவது சொல்லியிருக்கலாம். சாமான்களைக் கூட டாக்டர் ஹாண்டே அவர்கள் தெரிந்து கொண்டால் நல்லது. பிறகு அவர்கள் வெளியே சொல்வதை நம்ப மாட்டார்கள்.

The lorry is stated to contain the following Rectifier (old one) அவரே கைப்பட எழுதியிருக்கிருர்.

Amplifier—(old one) அவரே கைப்பட எழுதியிருக்கிருர் School boxes and furniture.

அதை எந்தச் சட்டத்தின் கீழ் அவர் நிறுத்தினுர் ? அந்த ஏ.சி.டி.ஓ. தவறு செய்தார். சாமான் யாருக்காக இருந்தாலும், நாளைக்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் வீட்டுக்கு ஒரு டூரிங் டாக்கீஸ் சாமான்கள் வாங்கி வந்து, அதை

நிறுத்தினாலும் அது தவறு தான். 2, 3 மணி நேரம் நிறுத்தி இடையூறு விளைவித்தார். அது எப்படி தவறு இல்லை என்று ஹாண்டே வாதாடுகிறார் ?

DR. H. V. HANDE : My contention is that whenever goods are transported, it is the duty of the concerned person to have proper records of the goods that he has taken. Also my contention is that there has been pressure by the higher officer..........

THE HON. THIRU S. MADHAVAN : What is the pressure ? ஏதாவது தவறு நடந்திருந்தால்........

DR. H. V. HANDE : The higher officer had asked him to sign like that

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு தவறிலிருந்து இன்னொரு தவறுக்குப் போகிறார். ஆதாரத்துடன் வாதாட வேண்டும். நான் கேட்பது, அவர் என்ன செய்தார் என்பதை மறந்து விடுவோம். டாக்டர் ஹாண்டே சொல்லட்டும், அதிலே சட்ட விரோதமான சாமான்கள் ஏற்றிச் செல்லப்பட்டு, வரி கொடுக்காமல் ஏற்றிச் செல்லப்பட்டு, இந்த காரணங்களைக் கொண்டு நிறுத்தி இருக்கிறார் என்று வாதாடுகிறாரா என்று எனக்குப் புரியவில்லை. நான் சாமான்களைச் சொன்னேன். அது எப்படித் தவறு என்று சொல்லுகிறார் எனக்குப் புரியவில்லை.

DR. H. V. HANDE : I do not doubt the *bone fides* of the lower Officer but the Hon. Minister does not doubt the *bona fides* of the higher officer. Also the Hon. Minister has stated that he has signed it. My contention is that he had signed it under duress. The higher officer brought pressure on the lower officer. Then that particular officer was transferred and he is now under suspension. Therefore I request the Hon. Chief Minister that the whole matter may be properly investi gated and let a clean chit be given as there ia s lot of propaganda made outside................

மாண்புமிகு திரு. செ. மாதவன் :. வெளியே செய்யப்படுகின் "ப்ராபகேன்டா"வை வெளியே சந்திப்போம். அது தனி விவகார அதுபற்றி சில நாட்களில் தெரிந்து கொள்ளலாம். நான் டாக்டர் ஹாண்டே அவர்களைக் கேட்பதெல்லாம், "சட்ட விரோதமாக என்ன நடை பெற்றது?" அதை அவர் சொல்லவேண்டும், அந்த ஜகன்னாதன் அவர் களே பதில் சொல்லியிருக்கிறார். சார்ஜஸ் கொடுத்தது, லாரியை நிறுத்தி யதற்காக என்றால் ஹாண்டே நம்பியிருக்கக்கூடாது. அவர் 6 மாத விடுமுறையில் இருந்தார். விடுமுறைக்குப் பின்னர் விடுமுறை எடுக்காமல் பாட்ட இடத்துக்கு போக மறுத்தார். அதற்கு சில காரணங்கள் சொன்னார். அவர் விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். எல்லாவற்றையும் டாக்டர் ஹாண்டே அவர்கள் நம்பாவிட்டால் நாங்கள் என்ன செய்வது ?

மெமோ ஆஃப் சார்ஜஸ் கொடுத்து அதற்கு விளக்கத்தில் சொல்லுகிறார்: "இந்த டிரான்ஸ்பர் மந்திரிக்கே தெரியாமல் நடைபெற்றிருக்கிறது" "பிரெஷர், பிரெஷர்" என்று யாரோ சொன்னதை நம்பிவிடக்கூடாது. மந்திரிக்கே தெரியாமல் இது நடைபெற்றிருக்கிறது என்று அவரே சொல்லியிருக்கிறார்.

DR. H. V.HANDE : I would like to know the contents of the Memo?

மாண்புமிகு திரு. செ. மாதவன் மேமோ ஆஃப் சார்ஜஸில் 2 சார்ஜஸ்; (1) மாற்றப்பட்ட இடத்திற்கு போகா வில்லை. (2) லீவே எடுக்காமல் டியூட்டிக்கும் போகாமல் அவர் இருந்தார். இந்த2 சார்ஜஸ் சரியா ? தவறா ? மேலதிகாரி டி.சி.டி.ஓ. நடவடிக்கை எடுத் துள்ளார். அவர் லீவ் எடுக்காமல் இருந்தது சரி என்று சுதந்திரமாக இருக்கும் சுதந்திராக் கட்சித் தலைவர் கூட சொல்லமாட்டார். டி.சி.டி.ஓ. அதிகாரி ஆர்டர் போட்டிருக்கிறார். அதற்குப் பின்னால் அப்பீல் இருக்கிறது. போர்டு அப்பீல் இருக்கிறது.

DR. H. V. HANDE : Why was he transferred after the incident

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கத்தில் மாற்றுவதற்கு பல காரணங்கள். 'ருடீன் டிரான்ஸ்பர்ஸ்' போடலாம் அங்கே உள்ளவர்கள் யாராவது "கம்ப்ளெயின்ட்" செய்து போடலாம். வேறு இடத்திற்கு ஆள் தேவை இருந்தாலும் டிரான்ஸ்பர் போடலாம். அது தவறான காரணத்திற்காக என்பது டாக்டர் ஹாண்டே அவர்களின் வாதமா ?

DR. H. V. HANDE : How could I know the contents?..My point is that why he was transferred three days after the incident.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "ஆர்டர் ஆஃப் டிரான்ஸ்பர்" -க்கு காரணம் என்ன என்ற வாதத்துக்கு நான் போகவில்லை. அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். பெரிய அதிகாரியால்—போர்ட் ஆஃப் ரெவின்யூ அதிகாரி மாற்றி இருக்கிறார். நாங்கள் கேட்பது மாற்றுவது என்பது சாதாரண நடைமுறை. டாக்டர் ஹாண்டே குற்றச்சாட்டாக சொல்ல வேண்டுமானால் அவர் தான் சொல்ல வேண்டும். இன்ன தவறுக்காக மாற்றப்பட்டார் அல்லது சட்டப்படி நடந்திருந்தாலும் அரசாங்கம் தவறாக மாற்றியது என்று டாக்டர் ஹாண்டே சொல்கிறாரா ?

DR. H. V. HANDE : My contention is that he was transferred because he stopped the lorry for nearly two hours and that is the punishment that the Government are giving for such things. My contention is that he was justified in stopping the lorry but the contention of the Hon Minister is that he was not justified in stopping it...............

மாண்புமிதிருரு.செ.மாதவன் :சொல்லுங்கள். சொன்னால்தான் புரியும்.

எப்படி லாரியை நிறுத்தியது சரி என்பது உங்களுடைய வாதம் ?

DR. H. V. HANDE: The most important thing is that wheneve the A.C.T.O. stops the lorry, he immediately checks the sheets. In thi case when the lorry was stopped, immediately a call was booked and influence was brought to bear......................

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மறுபடியும் "இன்புளுயென்ஸ் என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிருர். தொலைபேசியில் பேசினுர். யாருக்கோ சொந்தக்காரர். அது யாராக வேண்டுமானுலும் இருக்கலாம். அவர் சார்பில் அது "எங்களுடைய சாமான், பழைய சாமான்கள் கொண்டு வருகிருர்கள். அதற்குக் கூட வவுச்சர்கள் இருக்கின்றன அதுாடி.ஓ. விடத்தி என்ருல் இன்னும் வவுச்சர் தருகிறோம்" என்று ஏ.சி.டி ஓ விடத்தில் சொல்லியிருக்கிருர்.

இது எப்படி தவறு என்று சொல்லுகிறீர்கள்?

DR. H. V. HANDE: Even after the first......

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): The Hon. member may leave this point and go to the next point. There is limitation of time. I request responsible members like Dr. Hande to verify facts before they bring them on the floor of the House.

DR. H. V. HANDE: Originally one telephone call was booked.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) Let the Hon. member go to the next point. The Hon. Member is unable to prove that there is any pressure and so he need not harp upon the same point

DR. H. V. HANDE: You are unable to prove this. I mean the Government is unable to prove this. I am guided by the record

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாங்கள் தயர்,வ்வளவு வேண்டுமானுலும் வாதாடுவதற்கு. திருப்பித் திருப்பிக் கேட்கிறேன் பழைய சாமான்கள். அவருடையது பழைய சாமான்கள் என்று அவரே எழுதியதை....[டாக்டர் ஹாண்டே. (அமர்ந்து கொண்டே "அண்டர் டியூரெஸ்"] மேலதிகாரி சொல்லி எழுதப்பட்டது. டியூலெ். என்று இவர் வாதாடும்போது, அவர் மெமோ ஆப் சார்ஜ்ஸுக்கு பதில் அளித்திருக்கிருர். அதுவும் டியூரெஸ் தானே? அந்த பதிலிஇ ஒரு வார்த்தை கூட டியூரெஸ் பற்றி இல்லையே.

திரு. துரைமுருகன்: சார், ஆன் எ பாயிண்ட ஆப் ஆர்டர். தலைவரவர்களே, பேரவைத் தலைவரைப் பார்த்து, "மாண்புமிகு தலைவ ரவர்களே, தலைவரவர்களே" என்றுதான் அழைக்க வேண்டும்.

ஆனால் இந்த மன்றத்திலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் "யு, யு" என்று விளிக்கின்றார்கள். இது இந்த மன்றத்தில் ஏற்புடையதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. முனு ஆதி: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். பேரவைத் தலைவரவர்களே ஒரு ரூலிங் கொடுத்துவிட்ட பிறகு அதைப்பற்றி மேலும் விவாதிப்பது என்பது தலைவரவர்களை அவமதிப்பது என்பது மட்டுமல்ல காலத்தைக் கடத்துவதும் ஆகும். பேரவைத்தலைவர் ரூலிங் கொடுத்த பிறகும், தங்களைப் பார்த்து "யு ஆர், யு ஆர்" என்று பேசுவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இங்கே ஒரு உறுப்பினரும் ஒரு அமைச்சரும் விவாதம் செய்து கொண்டிருப்பதால் சபையின் காலம் வீணாகிக் கொண்டிருக்கிறது. உறுப்பினர்கள் ஒரு பிரச்சனையை எழுப்புகின்றபோது அமைச்சர்கள் பதில் சொல்லுகிறார்கள். ஆனால் ஒரே பிரச்சனையைப் பற்றி ஒரு உறுப்பினரும் ஒரு அமைச்சரும் திருப்பித் திருப்பி விவாதித்துக் கொண்டிருப்பது ஒரு முறையாகத் தெரியவில்லை. உறுப்பினர் அவர்கள் ஒரு வினாவை எழுப்பினார்கள். அதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். மேலும் அதைப் பற்றி விவாதிப்பதால் சபையின் நேரம் வீணாகும். அது சரியானது அல்ல என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்): டாக்டர் ஹாண்டே அவர்கள் 11·23 மணிக்கு பேச ஆரம்பித்தார்கள். இப்போது மணி 12·00. இடையிலே இந்தப் பிரச்சனையில் மட்டும் 15 நிமிடங்களுக்கு மேலாக உறுப்பினர் அவர்கள் பேசி இருக்கிறார்கள். இதிலே குறிப்பாக நான் கவனித்துக் கொண்டிருப்பது, உறுப்பினர்கள் யாராவது ஒரு வினாவை எழுப்பினால், அரசு தரப்பிலே அமைச்சர்கள் அதற்கு ஆதாரங்களோடு பதில் அளிக்கின்றார்கள். அதை அவர்கள் மன்றத்திலே ஏற்றுக்கொள்ளவேண்டும். அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் அவர்களுடைய தனிப்பட்ட கருத்து. ஆனால் மன்றத்திலே அரசு தரப்பிலே தரப்படுகின்ற குறிப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே நான் குறிப்பிட்டது போல இந்தப் பிரச்சனையை இதோடு தீர்த்துக் கொள்ளவேண்டும். லாரி உரிமையாளர் பெயரைக்கூட தவறாகத் தந்திருக்கிறீர்கள். இதையெல்லாம் பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் யோசித்து, தகுந்த ஆதாரங்களோடு குறிப்பிடவேண்டும். இல்லையென்றால் அதனால் ஏற்படுகின்ற விவாதங்களினால் மன்றத்தின் நேரம்தான் வீணாகும். இன்னும் பல உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. அதற்குப் பின்னால் முதலமைச்சர் அவர்கள் பேசவேண்டியிருக்கிறது. எனவே மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் இந்தச் பிரச்சனையை இதோடு விட்டுவிட்டு, வேறு பிரச்சனைகளைப் பற்றி சீக்கிரமாக பேசி முடித்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : When the Hon. Chief Minister replies, I shall be happy if he could give a clearer statement explaining all the points connected with this case. I am not at all satisfied with the answers given by the Hon. Industries Minister; I want more facts and figures.

I desire only one or two questions to be answered specifically by the Hon. Chief Minister-who was the proprietor of this Cinema Theatre? From where did he get these goods ? I want all such details and if the Hon. Chief Minister could give these it will dispel the suspicion around this case, outside and I will be the first man to express my satisfaction at that. I am not at all blackmailing. I am very cautious. If the Hon. Cheif Minister is able to dispel the doubts around this case, I will be the happiest man and I can swear that. For, there will be an end of such cases, for such cases are going on. There is ill-feeling among the people and I have brought to the attention of the Hon. Chief Minister and the Cabinet. The Hon. Chief Minister should try to tell the persons who are involved and even if any Ministers are connected with this, that also should be clarified so that the whole thing may be cleared out. Thank you, Sir.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்த மன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற நிதிஒதுக்க மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறமுற்படுகிறேன்.

இந்த மாமன்றத்திலே, இந்த நிதி ஒதுக்க மசோதாவின் மீது இந்த அரசு எடுத்துக் கொண்ட நல்ல காரியங்களுக்காக ஒதுக்கி இருக்கின்ற நிதியைப் பற்றி இந்தத் தொடர் கூட்டத்திலே பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற பாட்டாளி மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, விவசாய மக்களுக்கு அவர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் இந்த அரசு நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

மக்களை மட்டும் இந்த அரசு காப்பாற்றவில்லை. இன்றைக்கு ஆண்டவனையே கூட இந்த அரசு காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் சாமி சிலைகள் திருட்டுப் போய்க்கொண்டே இருக்கின்றன. அந்தத் திருட்டுக்களை எல்லாம் தடுத்து, அவற்றைக் காத்து நிறுத்தி வருகிறது இன்றைய தி.மு.க. அரசு. இப்படிப்பட்ட ஒரு அரசை நாத்திகர்கள் என்று பேசுகிறார்கள்: பத்திரிகையிலே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நாங்கள் நாத்திகர்களா, ஆஸ்திகர்களா என்பதை இந்த நாட்டிலே இருக்கின்ற நல்ல இதயம் கொண்ட மக்களுகுத் தெரியும்.

அடுத்து, பீடித் தொழிலாளர்கள் பிரச்சனைகளைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தப் பிரச்சனைக் குறித்து ஒரு நிரந்தர முடிவு காணவேண்டும். அதற்கு தேவையான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து உடனடியாக இந்த சிக்கல்களுக்கு தீர்வு காண்பதில் அரசு வேகமாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 30] [திரு. துரை முருகன்]

வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களின் பிரச்சனை ஒரு பெரும் பிரச்சனையாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுதது வட ஆர்க்காடு மாவட்டம் மட்டுமல்லாமல், பல்வேறு மாவட்டங் களைப் பொறுத்த வரையில், கலெக்டர் ஆபீஸ் ஒரு பக்கத்தில் இருக்கிறது. எஸ். பி. ஆபீஸ் ஒரு பக்கம் இருக்கிறது. அதைப் போன்று ஒவ்வொரு ஆபீசும் வெவ்வேறு இடங்களில் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் கலெக்டர் ஆபீசும், மற்ற பெரிய ஆபீசுகளும் பாழடைந்த கட்டடங்களில் இருக்கின்றன. அவற்றை எல்லாம் செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்தில் இருப்பது போல் ஒரே இடத்தில் புது கட்டடங்களாகக் கட்டித் தருவதற்கு அரசு ஆவனச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேலூரிலே இடம் இல்லை என்று சொன்னால், காட்பாடியிலே எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் நாங்கள் தருகிறோம் என்பதை அங்குள்ள மக்களின் சார்பாக நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு அங்கே இருக்கின்ற போலீஸ் கல்லூரியில் எஸ். ஐ. தங்கி இருக்கிற இடம் ஏறத்தாழ ஒரு ஜெயில் மாதிரி இருக்கிறது. அதையும் புதிதாக, நல்ல வசதியாக கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நாம் எந்த திட்டம் போட்டாலும், எந்தச் சட்டத்தை தீட்டினாலும் அவை உடனடியாக லா டிப்பார்ட்டுமெண்டுக்குத் தான் போகின்றன. அந்த லா டிப்பார்ட்டுமெண்டுக்கு போதுமான இட வசதி இல்லாமல் சிதறிக் கிடக்கின்றது. பல்வேறு இடங்களில் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. போகின்ற இடம் எல்லாம் லா டிப்பார்ட்மெண்ட் பைல்கள் காணப்படுகின்றன அதிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் இங்கொருவரும், அங்கொருவரும், மூலைக்கு ஒருவராக இருக்கின்றார்கள். அதையெல்லாம் பார்க்கின்றபோது சூரைத் தேங்காய் போடப்பட்டிருப்பது போல் இருக்கிறது. ஆகவே, சட்டத் துறை அமைச்ச ரவர்கள் சட்டத்தை தயாரித்தளிக்கின்ற இந்த லா டிப்பார்ட்மெண்டை தனியாக ஒரே இடத்தில் அமைக்கவேண்டியதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே முறையில்தான் ஹைகோர்ட் லாயர்ஸ் சேம்பரும்இருக்கின்றது. ஒரு சின்ன அறையில் 7 பேர், 8 பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட கேஸை பார்த்துக்கொண்டிருப்பார்கள். கோர்ட்டுக்குப் போக நேரமாகிவிட்டது என்றவுடன் கேஸ் கட்டுகளை வாரிப் போட்டுக்கொண்டு ஓடுகிறார்கள். அப்போது சில சமயங்களில் ஒருவருடைய கேஸ் கட்டு இன்னொருவரிடம் மாட்டிக் கொள்கிறது. கேஸுக்கு ஆஜராகக் கூடிய நேரத்தில் தான் அது தெரிகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் கேஸ் கொடுத்தவர்கள் படக்கூடிய கஷ்டம் சொல்ல முடியாது. இப்படிப் பட்ட தவறுகள் நடப்பதற்குக் காரணம் ஒரு சின்ன அறையில் ஒரு டேபிளில் 7 பேர், 8 பேர் சேர்ந்து உட்கார்ந்து கேஸ் கட்டுகளை வைத்து

பார்க்கக்கூடிய சூழ்நிலையில் இருப்பதுதான். எனவே, நல்ல வசதியாக லா சேம்பர்களை அதிகமாக கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாங்கள் தொகுதியிலே சுற்றுப்பயணம் செய்கின்றபோது மக்கள் எங்களிடத்திலே மனுக்களைக் கொடுக்கிறார்கள். அந்த மனுக்களை நாங்கள் பிரித்து, அரிஜன் வெல்ஃபேர், பேக்வேர்டு கிளாஸ், ரெவின்யூ துறைபோன்ற சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்புகிறோம். அப்படிப் போகின்ற மனுக்கள் போனவைகளாகவே இருக்கின்றன. அவைகளை என்ன செய்தார்கள் என்று எங்களுக்கு தெரிவிப்பதில்லை. அந்த மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, எங்களுக்குத் தெரிவித்தால், எங்கள் வீட்டு வாசலிலே இருக்கின்ற மக்களுக்கு நாங்கள் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காட்பாடியைப் பற்றி சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். காட்பாடி மிகவும் பிற்பட்டப் பகுதியாக இருக்கிறது. அதை இந்த மன்றத்திலே பலமுறை படம் பிடித்துக் காட்டுவது போல் பல்வேறு நேரங்களில் பேசியிருக்கிறேன். இன்றைக்கு நாட்டின் பல பகுதிகளிலும் நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் பலவித வசதிகளும், சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலவள வங்கி காட்பாடியிலும் இல்லை; சோளிங்கரிலும் இல்லை. அங்கே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைந்துள்ள இந்த இரண்டு யூனியன்களிலும் நிலவள வங்கி கிடையாது. ஆகவே, உடனடியாக கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இந்த இரு பகுதிகளிலும் நிலவள வங்கி ஏற்படுத்தித் தருவதற்கு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மன்றத்திலே நான் இதுவரை குறிப்பிடாமல் இருந்த ஒன்றை இன்று இங்கே குறிப்பிட விழைகின்றேன். என்னுடையப் பகுதியாக காட்பாடியில் இது வரை ஒரு சின்ன தொழிற்சாலை கூட கிடையாது. இப்போது அங்கே தனியார் ஒருவர்—உம்மிடியார் கம்பெனி—ஒரு ஸ்டீல் பாக்டரி ஆரம்பிப்பதற்கு ஏறத்தாழ 300 எக்கர் நிலம் வாங்கிப் போட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அந்த 350 எக்கரா நிலங்களும் தரிசாகக் கிடக்கின்றன. யாருக்கும் பிரயோஜனம் இல்லாமல் இருக்கிறது. உடனடியாக ஒன்று சர்க்கார் அந்தத் தனியாரிடம் தொழிற்சாலை கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தி தொழிற்சாலையைத் துவங்க ஏற்பாடு செய்ய வேண்டும், அல்லது அரசாங்கமே அந்த இடத்தில் தொழிற்சாலையைத் துவக்க வேண்டும். இல்லாத நிலையில் வெறும் தரிசாக அந்த நிலத்தைப்போட்டு வைக்காது எங்கள் விவசாயிகளிடம் கொடுத்தால் அதைப் பச்சை வயலாக மாற்றிக் காட்ட சித்தமாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்த நேரத்தில் பல்வேறு மானியங்களின் மீது பேச நேரம் கிடைப்பதல்லை. ஆகவே, இவற்றையாவது செய்து தரவேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே இந்த நிதி ஒதுக்க மசோதாவின மீது எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியில் பெரும்பாலும் விவசாயிகள் உள்ளனர். முக்கியமாக உணவு உற்பத்தியைப் பெருக்க தண்ணீர் மிகவும் அவசியம். பாபநாசம் நீர்த் தேக்கத்தின் மூலம் பயன்படக்கூடிய இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக வடக்குக் கோடைமேல் அழகியன்கால், தெற்குக் கோடை மேல் அழகியன்கால், நதியுன்னிகால் ஆகிய பகுதிகளில் மணிமுத்தாறு நீர்த்தேக்க அபிவிருத்தித் தீர்வை வசூல் செய்யப்படுகிறது. இதை ரத்து செய்ய வேண்டுமென்று பல தடவை இங்கு நான் வற்புறுத்தியிருக்கிறேன். இந்தக் கால்வாய் பாசனத்தைச் சேர்ந்த ஒரு சில வசதி படைத்தவர்கள் கோர்ட்டுக்குச் சென்று மணிமுத்தாறு அபிவிருத்தித் தீர்வையைக் கட்ட வேண்டாமென்று தீர்ப்பு வாங்கியிருக்கிறார்கள்.

ஆனால் மற்ற பகுதியாகிய நதியுன்னிக்கால், தெற்குக் கோடைமேல், வடக்குக் கோடைமேல் அழகியன்கால் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த வசதி கிடைக்கும் வகையில் இந்தப் பகுதிகளில் வசூலிக்கப்படுகிற மணிமுத்தாறு அபிவிருத்தி வரியை ரத்து செய்து விட வேண்டுமென்றும் இது வரை வசூல் செய்த பணத்தை ரீபண்டு செய்ய மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

வடக்குக் கோடைமேல் அழகியன் கால் முறை சிஸ்டம் வைத்தே தண்ணீர் விடப்படுகிறது. ஒரு முறைக்கு 50 ரூபாய் 60 ரூபாய் செலவு செய்தே தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. அப்படியிருந்தும்கூட கீழ் பாசனத்திற்கு போதியளவில் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே வடக்குக் கோடைமேல் அழகியன் கால்வாயில் லைனிங் வேலை செய்வது மிகவும் அவசியம். அதை உடனடியாக செய்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் தனியார் குளங்கள் இருக்கின்றன. குளங்கள் ஒருவருக்குச் சொந்தமாக இருக்கும். ஆனால் குளத்தின் பாசன நிலங்கள் பல பேர்களுக்குப் பகிர்ந்து இருக்கிறது. அந்தக் குளத்திற்கு தண்ணீர் பெருக்குவது யார் பொறுப்பு என்கிற நிலையில் இன்றைய தினம் அவை சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை. ஆகவே, தனியார் குளங்களை எல்லாம் சர்க்காரே ஏற்று சர்க்கார் குளங்களாக மாற்றி, நல்ல முறையில் பாசன வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரோடு சம்பந்தப்பட்ட வரையில் ஜமீன் சிங்கப்பட்டி சாலை இருக்கிறது. அந்தச் சாலையை நீண்டகாலமாக ஹைவேஸில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. சாலை சரியான முறையில் பராமரிப்பு இல்லாத காரணத்தினால் சில சமயங்களில் பஸ்கள் போவதில்லை.

கடையம் யூனியன் பகுதியில் ரவணசமுத்திரத்திலிருந்து கோவிந்த பேரி போகும் சாலையில் ஒரு சிறு ஆறு செல்லுகிறது. அதில் ஒரு தாம்போதி பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாலம் விஷயமாக கடையம் யூனியனிலும் இதர பஞ்சாயத்துக்களிலும் தீர்மானம் போட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி பல வருட காலமாக கேட்கப்பட்டு வருகின்றன.

அது போல ஆழ்வார்குறிச்சியிலிருந்து பாப்பான்குளம் போகிற சாலையின் இடையே ஒரு ஆறு செல்லுகிறது. அதிலும் ஒரு தாம்போதி பாலம் கட்டுவது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் கோடாரங்குளம், சிவந்திபுரம், விக்கிரமசிங்கபுரம், பொட்டல்புதூர் போன்ற இனும் கிராமங்கள் இருக்கின்றன. அவை இனும் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் அரசினரால் செய்யக்கூடிய அபிவிருத்தி வேலைகள் எதுவும் சரியாக செய்ய முடியவில்லை. கோடாரங்குளம் பஞ்சாயத்து பகுதியில் யூனியன் மூலமாக ஒரு ரோடு போட்டார்கள். அந்த ரோடுக்குகூட திருவாவடுதுறை ஆதீனம் கோர்ட்டுக்குச் சென்று நஷ்ட ஈடு வாங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு அங்கே பல சிரமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி அபிவிருத்தி அடைய அரசு ஆவன செய்து தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அம்பாசமுத்திரம், தென்காசி, செங்கோட்டை ஆகிய பகுதிகளில் செக் போஸ்ட் போட்டு ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு ஒரு வண்டி நெல் கூட கொண்டு செல்ல முடியாது செய்திருக்கிறார்கள். இந்த 3 தாலுக்காக்களில் இருக்கக் கூடிய உணவு தானிய வியாபாரிகள் மட்டும் 15 சதவீதம் அரசுக்கு லெவி தர வேண்டும். ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மற்ற தாலுக்காக்களுக்கு இது மாதிரி நிபந்தனை விதிக்கப்படவில்லை. செக் போஸ்ட் இருப்பதன் காரணமாக பல தவறுகள் நடைபெற ஏதுவாகும். ஆகையால் இந்த மூன்று தாலுக்காக்களில் உள்ள .செக் போஸ்டுகளை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

மற்றும் மாஞ்சோலைப் பகுதியில் ஏழைத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். செக்போஸ்ட் இருப்பதனால் இன்றைய தினம் அவர்கள் எல்லாம் உணவுப் பொருள் கொண்டு செல்வதற்கு மிகவும் அவதிப்படுகிறார்கள். அதுவும் பத்து தினங்களாக அவர்கள் படும் கஷ்டங்களை எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நமது அமைச்சர் அவர்களுக்கு மனுவும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் உணவுப் பொருள் கொண்டு செல்ல வசதி செய்து தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். பரமசிவம்: சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1972 மார்ச் 30] [திரு. எம் பரமசிவம்]

இந்த நிதி ஒதுக்கீடு தமிழக எதிர்கால மக்களுக்கு நல்வாழ்வினை நல்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை என்பதைக் கூறிக் கொண்டு, என் தொகுதி தாரமங்கலம் பகுதியில் மிகவும் வறட்சி நிலைமை ஏற்பட்டு மழையில்லாத காரணத்தினால் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் அரசு சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை நல்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அந்தப் பகுதியில் உள்ள மேச்சேரி செம்மறி ஆடு புகழ் வாய்ந்தது; பெருமைபெற்றது. நம் நாட்டு மக்கள் எல்லாம் மேச்சேரி என்றால் ஆடு ஆடு என்று துள்ளியாடுகின்ற நிலையில் அவற்றின்மேல் பற்று வைத்திருக்கிறார்கள். அத்தகைய உயர்ந்த ஆடுகள் இருக்கின்ற இடத்திலே செம்மறி ஆடுகள் வளர்ப்புப் பண்ணை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு இதில் அதிக அக்கறை காட்டி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியான தாரமங்கலத்தின் பகுதியில் சின்னப்பன்பட்டி பாலம் என்ற ஒன்று இருந்துகொண் டிருக்கிறது. அந்தப் பாலத்தின் வழியாக நூற்றுக்கணக்கான பேருந்து கள் சென்று கொண்டிருக்கின்றன. அந்தப் பாலத்தின் முன்புறத் தில் "அபாயம்—மெதுவாகச் செல்ல வேண்டும்" என்ற போர்டு இருக் கிறது. அந்தப் பாலம் பழுதடைந்து இருப்பதால், அப்படி போர்டு மாட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் நேரில் வந்து இதைப் பார்வையிட்டார்கள். விரைவிலே அந்தப் பாலத்தைச் செப்பனிட்டுத்தரவேண்டும். அதற்கு அரசு உடனடியாக ஆவன செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேச்சேரி பகுதி வறட்சிப் பகுதியாக இருக்கிறது. எந்தக் கிணற்றைப் பார்த்தாலும் நீர் இல்லாமல் வறண்டிருக்கிறது. அந்தப் பகுதிகளை பழைய கிணறுகளை ஆழப்படுத்தியும், புதுக் கிணறுகளை வெட்டியும் அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்திட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கொடுத்த கடனைத் திருப்பக் கட்ட முடியாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதிகாரிகள் விவசாயிகளை கடன் பாக்கிக்காக மிகவும் துன்புறுத்துகிறார்கள். ஆகவே, விவசாயி கள் உரத்திற்காக, மற்றக் காரியங்களுக்காக வாங்கிய கடன் தொகையை தவணையாகக் கொடுக்கும்வகையில் அந்தக் கடனை ஒற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இவ்வளவு நேரம் பேச வாய்ப் பளித்த தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து, பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

பொதுவாக, இந்த வருட தமிழக அரசின் பட்ஜெட்டானது உண்மையான, நேர்மையான சோஷலிச சமுதாயத்தை நிறுவிடும் வகையிலே தீட்டப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்வதிலே மிகவும்பெருமைப்படுகிறேன், அதை நான் பாராட்டுகிறேன்.

யாருமே தொடாத வகையிலே ஒதுக்கப்பட்டிருந்த பிச்சைக்காரர்களின் மறுவாழ்விலிருந்து ஆரம்பித்து, லட்சக்கணக்கான கோடீஸ்வரர்களின் உல்லாசத்துக்காக செலவு செய்யக்கூடிய குதிரைப் பந்தயங்களுக்கு அதிக வரி போடப்பட்டது வரையில் பற்பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது இந்தத் தமிழக அரசு. எந்த அளவிற்கு இந்தச் சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும், புறக்கணிக்கப்பட்டவர்களின் வாழ்விலே மறுமலர்ச்சி அடைய வேண்டுமென்பதை மையமாக வைத்து இந்த நிதி ஒதுக்கீடு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு பாராட்டுகிறேன்.

நாட்டிலே இன்றையதினம் இருக்கக்கூடிய முதலாளிகளின் நிலை மாற்றப்பட வேண்டும், ஏழைகளுக்கு உழைப்பின் பலன் போக வேண்டுமென்பதற்காக நில உச்ச வரம்பு சட்டம், பஸ்களை தேசிய உடைமையாக்கியது போன்ற செயல்களில் தமிழக அரசு முன்னணியில் இருக்கின்றது. விவசாயத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவில் பெரும்பான்மையானவர்களால் நடத்தப்படுகின்ற தொழிலாக இருக்கிறது. 100-க்கு 80 பேர் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டுமென்று சொன்னால், பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி போன்ற புரட்சிகள் நடந்தாக வேண்டும். நாட்டில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்த பருத்தி பற்றுக்குறையாக இருக்கின்ற நிலைமையை விவசாயிகளுக்கு எடுத்துச்சொல்லி, பருத்தி விளைச்சலைப் பெருக்குவதற்காக, பருத்தி பயிர் செய்கிறவர்களுக்காக நல்ல கடன் வசதிகளையும், நல்ல ரக வித்துக்கள், உர வசதிகளையும் செய்து கொடுத்து வருவதைப் பாராட்டுகிறேன்.

இன்றையதினம் ஒருசில மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தில் மின்சாரக் கட்டணம் குறைவாக இருக்கிறது. இருந்தாலும், நானும் ஒரு விவசாயி, நானும் விவசாயிகளின் பிரதிநிதி என்கிற வகையில் பார்க்கும்போது, விவசாயிகள் படும் கஷ்டத்தை நான் உணருகிறேன். இப்பொழுது மின் கட்டணம் 1·8 பைசா கூட்டப்பட்டிருக்கிறது. இது விவசாயிகளுக்கு அதிக கஷ்டத்தை உண்டாக்குகிறது. ஆகவே, அதையும் குறைத்து, அதை அரசு மானியமாக ஏற்றுக்கொண்டால் உதவியாக இருக்கும் என்ற ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். முடிந்தால் மத்திய அரசிடம் இதை மானியமாகப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையில் பலவிதமான நன்மைகள் திருமதி இந்திரா காந்தி அவர்களின் முயற்சியால் கிடைக்கின்றன. சாதாரண சாமான்யர்கள், சொத்துக்கள் எதுவும் இல்லாத மனிதர்கள் பாங்குகளை அணுகி கடன் பெறக்கூடிய வசதி இன்றையதினம் ஏற்

பட்டிருக்கிறது. இதனுல் பலர் கடன்வசதிகள் பெற்று பல தொழில் களில் ஈடுபட்டு, தங்களுடைய வாழ்க்கையை சீராக அமைத்துக்கொள்ள வழி ஏற்படுகிறது.

என்னுடைய பகுதியில் விவசாயத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையில் இரண்டுவிதமான நிலைமை இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உசிலம்பட்டி யூனியன், செல்லம்பட்டி யூனியன் என்கிற இரண்டு யூனி யன்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு கிணறு வெட்டவும், மற்ற விவசாய காரியங்களுக்கும் கடன் ஆரம்பத்தில் கொடுத்துக்கொண்டு வந் தார்கள். பிறகு விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதில் கஷ்டம் ஏற் பட்டது. செல்லம்பட்டி பகுதியில் இருக்கக்கூடிய பழைய கிணறு களைப் புதுப்பிப்பதற்குத்தான் கடன் தொகை வழங்குகிருர்கள், புதிதாகக் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுப்பதில்லை.

அதேசமயத்தில் உசிலம்பட்டி பகுதியில் புதிய கிணறு வெட்டுவதற் காகத்தான் கடன் கொடுக்கிருர்கள், பழைய கிணறுகளைப் புதுப்பிப் பதற்குக் கடன் கொடுப்பதில்லை. இதைப்பற்றிக் கேட்டால், நில ஆராய்ச்சியாளர்கள் பூமிக்கு அடியில் தண்ணீர் வசதி இல்லையென்று சொன்னதாகவும், அதனுல் அப்படிச் செய்வதாகவும் கூறப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் இதுபற்றி விளக்கம் கேட்டபோது இதைத்தான் கூறினர்கள். ஆகவே, இந்தக் குறையை நீக்குவதற்காக விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய வகையில், இப்பொழுது இருக் கும் உத்தரவுகளை மாற்றி எல்லோருக்கும் கடன் கிடைக்க வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழைய கிணறுகளுக்குக் கடன் கிடைப்பதில்லை. ஆனுல் அதே நேரத் தில் பக்கத்திலே வெட்டக்கூடிய புதிய கிணறுகளுக்குக் கடன் கிடைக்கிறது என்று சொன்னுல் என்னவென்று சொல்வது? பழைய கிணறுகளை ஒரு கெஜம், இரண்டு கெஜம் என்று வெட்டினுல் சீக்கிரத் தில் தண்ணீர் வந்துவிடும், செலவும் குறைவு. தண்ணீர் வராது தண்ணீர் கிடைக்காது என்று எந்த யூகத்தை வைத்துக்கொண்டு அப் படி சொல்கிருர்கள் என்று தெரியவில்லை. புதிய கிணறுகளுக்கு அதிகமாக ரூபாய் கடனுக கொடுக்க வேண்டியிருக்கிறது. புதிதாக வெட்டப்படும் கிணறுக்குத் தரப்படுகின்ற தொகையையே பழைய கிணறு கள் பலவற்றிற்குப் பிரித்து கொடுத்தால், குறைந்த செலவில் தண்ணீர் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, தகுந்த வழிவகைகள் செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் அறுவடைக் காலத்தில்தான் தாங்கள் வாங்கிய கடனை அடைக்க வேண்டியவர்களாக இருக்கிருர்கள். விளைச்சல் ஏற்படுவதற்கு முன்னுலேயே கடன் வாங்கி செலவு செய்து விட்டு, அறுவடைக் காலத்தில் கடனைத் திருப்பித் தருகிறேன் என்று சொல்வதால், கடன் கொடுத்தவர்கள் அறுவடையின்போதே விளைச்சலை

எடுத்துக்கொண்டு போய்விடக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தவர்கள் எல்லோருமாக ஒன்று சேர்ந்துகொண்டு, விவசாயிகளின் விளைச்சலை, தானியங்களை வேண்டுமென்றே விலையைக் குறைத்துத்தான் கேட்கிறார்கள். விவசாயிகளுக்கோ தானியங்களைச் சேமித்து வைக்க கிடங்கு வசதி இல்லாத காரணத்தினாலும், கடன் கொடுத்தவர்களின் கிடுக்கித் தாக்குதலாலும், கடன் கொடுத்தவர்கள்—இடைத் தரகர்கள்—கேட்கின்ற விலைக்கே தானியத்தை அளந்து விடுகின்ற நிலைமை இருந்து வருகிறது. இந்த இடைத்தரகர்கள் மார்க்கெட் விலைக்கும் குறைவாகவே கேட்டு அதைப் பெற்றுக்கொண்டு போய் விடுகிறார்கள். ஆகவே, விவசாயிகள் தங்கள் விளை பொருள்களைச் சேமித்து வைக்கக்கூடிய வகையில் தானியக் கிடங்குகளை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களுடைய தானியங்களை சேமித்து வைத்து, மார்க்கெட்டில் நல்ல விலைபோகின்ற நேரத்தில் விற்று, விவசாயிகளுக்கு நல்ல லாபத்தை உண்டாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக் கிடங்குகளை கட்டிக்கொடுத்தால், விவசாயிகள் பாதுகாப்பாக தானியங்களை வைத்துக்கொள்ள முடியும். அந்த தானியங்களை செக்யூரிட்டியாக வைத்துக்கொண்டு, விவசாயிகளுக்குத் தேவையான கடன்களைக் கொடுத்தால் விவசாயிகள், கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரிகள், இடைத்தரகர்கள் ஆகியோருடைய வலையில் சிக்காமல், நல்வாழ்வு பெற முடியும். சில மாதங்கள் கழித்து விலை ஏறுகிற சமயத்தில் அந்த தானியங்களை எடுத்துக்கொண்டுபோய் மார்க்கெட்டில் நல்ல விலையில் விற்று விவசாயிகளுக்கு நல்ல வகையில் லாபத்தை பெற்றுத் தர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உசிலம்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில், அது ஒரு வறண்ட பகுதியாக இருக்கிறது. அங்கே எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. அது மிகவும் பிற்பட்ட பகுதி. ஆகவே, ஒரு தொழிற்சாலையை அந்தப் பகுதியில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது டாக்டர் அவர்கள் தொழிலாளர்கள் பிரச்சினை, மில் தொழிலாளர்கள் பிரச்சினை, ஆசிரியர்கள் பிரச்சினை, பொறியியல் வல்லுநர்கள் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை ஆகிய எல்லா பிரச்சினைகளையும் மிக நல்ல முறையில் தாயுள்ளத்தோடு அணுகி, தீர்த்ததைப் பாராட்டுகிறேன். இங்கே பேசுகிறவர்களில் ஒருசிலரும், வெளியே பேசுகிறவர்களும் அரசியல் மேடைகளில் அரசியல் காரணங்களுக்காக எப்போதும் எந்தக் காரணத்தையாவது வைத்துக்கொண்டு, குழப்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்ற நோக்கத்தோடு, அமைதியைக் கெடுக்கின்ற வகையில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். அப்படி அவதூறுகளைப் கிளப்பி, குழப்பத்தை உண்டுபண்ணக்கூடியவர்களையும், "புறப்படுங்கள் போருக்கு போர், போர்" என்று மற்றவர்களைத் தூண்டக்கூடியவர்களையும் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் ஏதாவது மார்க்கம் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களைத் தண்டிக்க வேண்டும்

பொதுவாக குற்றம் செய்கிறவன் தண்டனையடைந்தாலும், குற்றம் செய்வதற்கு உடந்தையாக, குற்ற உணர்ச்சியை தூண்டக்கூடியவனுக்கும் தண்டனை அளிப்பதுபோல, சமுதாய விரோதச் செயல்களை, அரசியல் மேடை என்ற முகமூடியாக வைத்துக்கொண்டு இருப்பவர்களைப் பிடித்து தண்டிக்க வேண்டும். அம்மாதிரியான சமூக விரோதிகளை, சமூக துரோகிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பலருக்கு நியாயமான குறைகள், குறைபாடுகள் இருந்தாலும் அவைகளைத் தக்க சமயத்தில் மாண்புமிகு டாக்டர் அவர்களும், மற்றைய மாண்புமிகு அமைச்சர்களும் தலையிட்டு, சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளின் குழப்பங்களுக்கு இடமளிக்காதவண்ணம், தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கா. மு. கதிரவன் : மாண்புமிகு மாற்று தலைவர் அவர்களே, 1972–73 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து இந்தச் சபையிலே பேசுவதற்காக நான் முன்வருகிறேன். பி. ப 12-00

இந்த அரசைப் பொறுத்த அளவிலே இந்த ஆண்டிலே செய்திருக்கிற சேவைகள் உன்னிப்பாக கவனிக்கும்பொழுது இந்த அரசு விவசாயிகளுடைய அரசு, இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. ஆனால், ஆங்காங்கு காணப்படுகின்ற தொழிற்சாலை வேலைத் நிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் பார்த்து மற்றவர்கள் தொழில் அமைதி கெட்டுவிட்டது என்று கூறுகிறார்கள். ஒரு தாய் இருக்கிறாள் என்றால் அந்த வீட்டிலே சென்று பார்த்தால், 7, 8 குழந்தைகள் அந்தத் தாயின் தலையிலேயும், தோளிலேயும், இடுப்பிலேயும் ஆடிக்கொண்டிருக்கும், கூச்சலாக இருக்கும். ஆனால் அதே நேரத்திலே எதிர்வீட்டிலே ஒரு சிற்றன்னை இருப்பாள். அங்கே பத்து குழந்தைகள் இருக்கும். பத்துக் குழந்தைகள் இருந்தாலும் அந்தக் குழந்தைகள் வாய்விட்டுப் பேசாது, குரலை எழுப்பாது, காரணம் சிற்றன்னையின் கரத்திலேயிருக்கிற அகப்பை அந்தக் குழந்தைகளின் தலையிலே விளையாடத் தவறாது என்பதை ஊகித்துக் கொள்ளும். சிற்றன்னையின் வீட்டில் அமைதி இருக்கிறது; ஆனால் அந்தத் தாயின் வீட்டிலே குரல் எழும்பிக்கொண்டேயிருக்கும். அந்தத் தாயினுடைய வீட்டிலே அமைதியில்லை என்று யாராவது கூறமுடியுமா ? அந்த நிலைதான் இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கின்றது.

இங்குள்ள தொழிலாளர்களுக்கு இந்த அரசை டாக்டர் கலைஞர் அவர்கள் தாயாக இருக்கிறார்கள். இது நம்முடைய அரசு என்பதால் நம்முடைய உரிமைகளைப் பெற முடியும் என்றும் டாக்டர் கலைஞர் அவர்களிடம்தான் நம்முடைய உரிமைகளைக் கேட்டுப் பெறமுடியும் என்று எண்ணித்தான் அவர்கள் சில வேண்டுகோள்களை விடுகிறார்கள். அந்த வேண்டுகோள்கள் ஊர்வலமாக இருக்கலாம், ஆர்ப்பாட்டமாக இருக்கலாம். எனவே அந்த அளவிலே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் தொழிலாளிகளுக்கு தாயாக இருக்கிறார்கள் என்பதைப் பணிவன்போடு கூறிக்கொண்டு என்னுடைய தொகுதிப்பற்றிய சில பிரச்சினைகளைக் குறிப்பிட்டு என்னுடைய உரையை முடிக்கலாம் எனக் கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே கண்ணுப்புளி அணைக்கட்டு, அடைவிநயினார் அணைக்கட்டு என்ற இரண்டு அணைத்திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்கள் கடந்த இரண்டு ஆண்டுக்காலமாகவே ஆய்வில் இருக்கிறது. சீக்கிரமாக அதனை கட்டிக்கொடுப்பதற்கு அரசு முயற்சிக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்திலே கேரள அரசிலிருந்து ஓய்வுப் பெற்ற சீப் எஞ்சினீயர் ஒருவர் பத்திரிகையிலே ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். அந்த அறிவிப்பு என்னவென்றால் கங்கை-காவிரி இணைப்பை விட, கேரளாவிலே ஓடிக்கொண்டிருக்கின்ற ஆற்றைத் திசைத் திருப்பிவிட்டுத் தமிழகத்திற்குப் பயன்படுத்தினால் இலாபகரமாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அந்த அறிக்கையை முன்வைத்து இந்த அரசாங்கம் கங்கை-காவிரி திட்டம் வேண்டாமென்று சொல்லிவிடாமல் ஆனால் அதே சமயத்திலே கேரளத்திலே ஓடி அரபிக் கடலிலே கலக்கின்ற ஆறுகளை திசைத் திருப்பி தமிழகத்திற்குப் பயன்படுத்த திட்டம் தீட்டவேண்டும். அப்படிச் செய்தால் நெல்லை மாவட்டத்தினுடைய மேற்குக் கோடியிலே இருக்கின்ற கல்லாறு என்ற ஆறு கேரளாவிலே ஓடி வீணாகக் கடலிலே கலக்கின்றது. அதைத் திசை திருப்பினால் நெல்லை மாவட்டத்திலே உள்ள வடக்குப் பகுதிகளுக்கு தாமிரவருணிபோன்ற செழிப்பான நிலைமை ஏற்படும் என்பதால் அதைச் செயல்படுத்த முன்வரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தென்காசித் தாலூகாவிலே மூன்று தொகுதிகள் இருக்கின்றன, ஆலங்குளம், தென்காசி, கடையநல்லூர் இந்த மூன்று தொகுதிகளிலும் ஒரு தொழிற்சாலைகூடக் கிடையாது. அந்தத் தொகுதியிலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அங்கே ஒரு தொழிற்சாலை வைக்கக்கூடிய அளவில் அந்தப் பகுதியை ஒரு தொழிற்சலுகை பகுதியாக அறிவித்து அங்கே தென்காசியிலே ஒரு மினி தொழிற்பேட்டை ஏற்படுத்தவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

செங்கோட்டையிலே பலராமவர்மா டெக்ஸ்டைல் மில் மூன்று ஆண்டுகளாக அடைப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுகளிலே இடையிலே ஒரு ஆண்டுதான் நடைபெற்றது, மூன்று ஆண்டுகளாக தொல்லைக்காளாகியிருக்கிற தொழிலாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே மத்திய அரசிடமிருந்து அந்தத் தொழிற்சாலையை இந்த அரசே ஏற்று நடத்துவதற்கான அனுமதியைப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கோட்டையிலே உள்ள மருத்துவ மனை சிறப்பான மருத்துவ மனையாக இருந்தாலும் இட வசதிகள் இல்லாமல் அந்த மருத்துவ மனை தேங்கிக்கொண்டிருக்கின்றது என்ற காரணத்தினாலே 32 படுக்கைகள் அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றாலத்தைப் பொறுத்த அளவிலே தமிழகம் முழுதும் அறிந்த இடமாகையால் பயணிகள் வந்து போகிறார்கள். ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களிலே தமிழகத்திலேயுள்ள நடுத்தர மக்களும் ஏழை மக்களும் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் அந்த இடத்திலே டவுன்ஷிப் கமிட்டி

உதவியோடு ஒரு மருத்துவ மனை நடந்து கொண்டிருக்கிறது. நடந்து கொண்டிருக்கிறது என்று நான் சொல்வதைவிட பெயரளவிலே இருந்து கொண்டிருக்கிறது என்ற முறையிலே தமிழகத்தின் சிறந்த சுக வாசஸ் தலம் ஆக அது இருப்பதால் அந்தமருத்துவ மனையைசிறப்பாக நடத்தக் கூடிய முறையிலே அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புளியரை என்ற கிராமத்திலே ஒரு முழு நேர மருத்துவ மனை ஏற்படுத் தித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பைன்பொழில் என்ற இடத்திலே ஒரு சப்ரிஜிஸ்திரார் ஆபீஸ் ஏற் படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கோட்டையிலே உள்ள அரசுப் பள்ளிகளை யூனியன்கள் நிர்வாகத் திலே ஒப்படைக்கப் போவதாகச் சொல்லப்படுவதால் அது வரவேற்கத் தக்கதல்ல என்பதைத் தெரிவித்துக் கொண்டு அப்படிச் செய்தால் ஆசிரியர் களின் நிலைமை, பள்ளிகளின் நிர்வாகம் சீர்கெட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு தொடர்ந்து அரசே நடத்திவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமைகிறேன். வணக்கம்.

*THIRU M. A. LATHEEF : Hon. Chairman, Sir, I propose to deal with only such issues which are appropriate to the Appropriation Bill. Normally it so happens that even in an Appropriation Bill, issues are brought which are not exclusively appropriate to the Appropriation Bill. That is what has happened now. In fact some of the speeches made in this House, I submit, spell a very sad commentary upon the value and ethics of parliamentry democracy. Even responsible Members bring forward such matters which are not authenticated and which are not proved to be correct. Sir, when a matter is presented before the House, we must see that the facts which are authentic and correct should be presented. But here what happens is that we bring such facts which are not authenticated and which are not brought from proper sources ; merely on the basis of some information given by some irresponsible blue papers.

It is rather very unfortunate that in Tamil Nadu we have been seeing the development of such a tendency in the field of journalism. It is unfortunate that there are so many journals which are corrupting the morale and morality of the people in the name of protecting the democratic rights of the people. I would even charge this Government that they are not taking proper steps against these newspapers. On the basis of the newspaper reports, even a responsible Member like Dr. Hande should have spoken about the details already given by some of these blue papers. He has referred to the name 'AK & NP' and the lorry

No. MDY 3670 and said that because there is the letter 'K' it signifies Karuppiah and 'P' for Poornathammal. Of course, there is no 'poorna' information. According to the Hon. Minister, in the Registration Certificate the letter 'K' signifies 'Kanniah Naidu' and 'P' signifies 'Palaniswami Chetty'(N).

When this is the fact, it is rather very unfortunate that members like me do not believe authenticated versions in a Legislative Body given by responsible Ministers and we do not have any belief in them. We have belief only in Yellow Journals printed by some irresponsible insipid persons outside the House. These are rather unfortunate state of affairs in this State. This should be checked. My earnest appeal to every member is that whether we belong to the Ruling Party or any of the Opposition Parties, we should see that the purity of public life is safeguarded, the responsibility of this House is upheld and the responsibilities of the members of this House are always kept in view. Let us not create an impression among the public that we members come to the House and waste our time and deal in matters with facts not authenticated, facts which are corrupt and motivated and which are not BONA FIDES. Therefore, these are my observations in respect of the remarks made by my learned friend, Dr. Hande whom I value with great respect.

Another thing is about a serious matter. Certain observations were made by my friend, Thiru A. M. Raja. Mr. Raja had been very very critical and he deplored the attitude of the Central Government and took exception to certain observations made by the Honourable, the undisputed National Leader of India, Mrs. Indira Gandhi, the Prime Minister of India. Not only it is not a new thing, but it is done by many others also. We heard recently the remarks of a responsible Minister. A Central Minister comes to Madras and in a public meeting says certain things. He poses a question to the democratically elected Government of the State. He wants this Government to state clearly—the Central Minister orders the State cabinet to state clearly—"whether you stand for co-operation or confrontation." Is this the way that a Central Minister should ask the State Government, to state their position clearly ? He asks as if he is a dictator. Where is democracy I ask. What is the value of democracy ? We say we are deeply committed to democracy. When a Central Minister asks like this, democracy is in jeopardy. We say we are committed to democracy. When democracy is in jeopardy, we raise our voice and we say we stand for democracy and we stand for the establishment of democracy and we work for restoration of democracy. But you ask the question to a man who has been democractically elected by the people of Tamil Nadu. You pose a question to 'state' his stand clearly whether you stand for co-operation or confrontation'. I would submit on

behalf of the people of this State and not only people of this State but on behalf of the people of India, and people in the democratically inclined countries to whoever that poses this question that people have decided to confront him and those who work against democratic principles, whoever he may be.

We are for co-operation where national interests are concerned› we are for co-operation where national integration is concerned, we are for co-operation where national unity is the issue and we are for co-operation wherever Indian defence is concerned, we are for co-operation wherever democratic structure of the entire country is in question. But we will confront if anybody goes against the wishes of the people, if anybody challenges the democratic aspirations of the people. We will confront you if you go against the democratically elected State Government, with such large mandate, with such large majority and we will confront you not only from Tamil Nadu, but all the States will confront you. There will be no co-operation but there will be only confrontation wherever it is necessary. I would say that hereafter, henceforward there will be co-operative-confrontation. There will be co-operative-confrontation wherever the States' rights are in jeopardy, wherever the rights of the States are questioned. There will be co-operation among the States and all the States will join together and they will confront against any undemocratic acts by anybody wherever he is. There will be co-operative-confrontation and that is the answer given by the people of Tamil Nadu and people of other States. That is my submission, Mr. Chairman.

I would like to say a few words about this Appropriation Bill. Even at the cost of the time of some of my friends, I would venture to say a few words. I hope that we should be clear as to what things should be brought in the discussion on an Appropriation Bill. We are duty-bound and as responsible members, we must bring to the force, the delays, the diversions and the misappropriation of the funds that have been authorised to be appropriated. That is the thing that we must discuss here and we must see that there are no lapses on the part of the Government in the matter of appropriation of authorised funds.

Why should we use the word 'Appropriation' when the amount is spent by way of public expenditure ? Why not call it public expenditure and why do you call it the Appropriation Bill. Money is going to be appropriated appropriately and there should not be and misappropriation and there should not be any lapse and there should not be any diversion and there should not be any delay and there should not be any lethargy on the part of the Government in the matter of spending the amounts that have been granted to the Government under this Bill. That is my submission.

Therefore, we must bring in cases where the Government has delayed in the matter of appropriation, where the Government has lapsed in the matter of appropriation and where the Government has diverted any amounts to such items which have not been authorised by the Legislature. These are the points we have to raise. I would submit respectfully to the hon. Members of the Opposition that we have to raise such points only.

We have got the responsibility in a Parliamentary Democracy and I am a person who always uphold democracy and believe in the successful functioning of democracy. The Opposition Parties should be alive to their responsibilities. Therefore this is my submission to the other members, and particularly to my long standing friend, Dr. Hande here. He was saying about direct taxes and indirect taxes and he was saying that there has been increase, very abnormal increase in the case of direct and indirect taxes. We must see the entire economy in its proper perspective and that should be our attitude.

The Great Economist W. W. Rostow has visualised four stages of economic development. The first is the Primitive stage and the second is the Take-off stage ; the third is Mass Consumption and the fourth and last is Automobile age. We have not achieved even the first two stages. There is no equitable distribution of national wealth. Wherever we go we see only the primitive stage and just we are entering into take-off stage. In some parts there is mass consumption stage and automobile stage.

In Madras also we see a number of automobiles plying. Even an M.L.A. from Periamet cannot cross in a taxi the busy Mount Road ; there are a number of halts and there are a number of automobiles on the roads. This is happening. Some people live in palatial houses and so many own more than two cars. But that is only a small number. The larger number of people are still primitive stage people. You can come and see my constituency. They live still in the past century. I invite the Hon. Ministers also to pay a kind visit to my Vaniambadi Constituency and see the people and how they live. Why is this so It is because, we have not developed our economy in a way to result in equitable distribution of wealth. Our distribution pattern has been basically defective.

It is not as if our production has not increased. It is not as if our national income has not increased. It is not as if we have not effected development in agriculture and industry. But we have miserably failed to effect equitable distribution in the economy. Now the prices,

are going up. The common man is suffering like anything. Of course, some people might say that because of the inflation the prices are going up. That is not the indication, Prices may be going up because of the reduced production or it might be due to other factors. I must say that there has been exhorbitant profit made by a few in the society and the Government must take the extra profit from the individual pockets and spent it for the common man.

Therefore the Government have to resort to direct tax. So the direct tax is justified. Another factor is that we have got the propensity to consume and not to save and invest. The propensity to save is very, very low. Therefore, whatever the Government give by way of increased wages, they consume and they do not save......

(Mr. Chairman sounded the gong.)

Then I come to the veterinary college students. As my hon. Friend Dr. Hande, has pointed out there is difference in the period of study of a veterinary college student and an M.B.B.S. student. The veterinary doctor has to work with animals and the M.B.B.S. doctor has to deal with human beings. As the veterinary students deal with the vital animals of our country, the Government may sympathetically consider their case as and by way of compensation. With these words, I conclude my speech.

திரு.கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் சேர்மன் சார், 1972-வது வருடத்திய 11-வது மசோதாவின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

பொதுவாக இந்த மாதம் பூராவிலும் பல மானியங்களின் பேரிலே கருத்துக்கள் எல்லாம் சொன்னதற்குப் பிறகு இந்த மசோதா மிக முக்கியமானது என்பதை நான் சொல்லாமலே நீங்கள் எல்லாம் அறிவீர்கள். பொதுவாக இந்த ஆண்டு நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அரசு செலவு செய்யலா மென்று சொல்லி 440 கோடி 80 லட்சம் ரூபாய் வரையிலும் சிபார்சு செய்திருக்கிறார்கள்; ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரியாக சார்ஜ்டு அக்கவுண்டில் 800 கோடி ரூபாய் வரையிலும் செலவழிக்கலாம் என்ற நியதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்ரோப்ரியேஷன் என்று சொன்னாலே

"State Government appropriate from the Consolidated Fund."

— என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அம்மாதிரி அப்ரோப்ரியேட் பண்ணிய பணத்தை எந்த முறையில் செலவழிக்க வேண்டும். இதற்கு முன்னால் செலவழித்த முறைகள் சரியாக இருக்கின்றனவா என்பதைப் பரிசீலனை செய்வதற்காகத்தான்

1972 மார்ச் 30] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சட்டமன்றத்தில் இருந்து கமிட்டிகள் அமைக்கிறோம். நான் அந்த கமிட்டிகளின் ரிபோர்ட்டுக்குள் போகாமல் இருந்தாலும் ஒரு குறை ஒவ்வொரு தடவையிலும் சுட்டிக் காட்டப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

In the Second Report of the Committee on Public Accounts (Fifth Assembly) at page 6 it is stated that the percentage of saving on voted grants was 4 per cent in 1965–66, 4 per cent in 1966–67 and 6 per cent in 1967–68. It occurred in Grants relating to Industries, Labour including Factories, Famine Relief, Compensation to Zamindars, Capital Outlay on Public Health, Capital Outlay on Agriculture, Capital Outlay on Industrial Development and Capital Outlay on Schemes of Government Trading என்ற விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக இண்டஸ்ட்ரியல் 19 சதமானம், ஸ்டேட் டிரேடிங்கில் 14 சதமானம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது, மேலும்—

" The Committee, therefore, invites attention to the recommendations in paragraph 15 of the Report on the accounts for 1966–67 and urges that adequate action be taken by the departments to avoid large savings in future. " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த ஆண்டுக்கும் அது பொருத்தமாகத்தான் இருக்கும். இப்போதே இதைச் சொல்லுவதன் காரணமாக இம்மாதிரி நாம் ஒதுக்கி இருக்கும் பணத்தில் குறிப்பிட்ட 1, 4, 5 ஐட்டத்திலிருந்து முறையாக, பரிபூரணமாகச் செலவழிக்கப்படும் என்ற உத்தரவாதம் இருக்க வேண்டும். 4 சதமானம் என்பதே அதிகம் என்று கருதுகிறேன். 1967–68-ல் 6 சதமானமாக ஆகியிருக்கிறது. 1968–69-ல் எவ்வளவோ தெரியாது ; 1969–70-ல் எவ்வளவோ தெரியாது ; 1970–71-ல் எவ்வளவோ தெரியாது.

ஆகவே, இந்த ஆண்டு 1971–72-ஐப் பரிசீலிக்கின்ற நேரத்திலே இந்த நான்கு சதமானத்திற்கும் குறைவாக சேவிங்ஸ் இருக்கிறது என்ற நிலையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்னொரு முக்கியமான தவறு என்ன ஏற்படுகிறது என்றால், இந்த மாதிரி சேவிங்ஸ் வரக் கூடிய காரணத்தால் இதே வருஷத்தில்—

" Surrenders of Rs. 59.13 crores were made only in the last month of the year ; of this, surrender of Rs. 38.25 crores was made on 31st March 1968. "

என்ற நிலை ஏற்படுகிறது. முறையாகச் செலவழிக்க முடியாத நிலைமையில் கடைசியில் செலவழிக்க வேண்டுமென்று முழு மூச்சாக வேலை செய்கிறார்கள் மார்ச் மாதத்தில். மார்ச் மாதத்தில் முழு மூச்சாக வேலை செய்தும் செலவழிக்க முடியவில்லை என்றால் திருப்பிக் கொடுக்கும்போது

கூட மார்ச் 31-ம் தேதிதான் பெருவாரியான தொகையைக் கொடுக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இன்னும் சில நிலைமைகள் என்ன ஏற்படுகிறது என்றால்—

"Savings of the total of Rs. 81.44 lakhs in four grants were not surrendered at all" என்ற நிலைமை ஏற்படுகிறது. இதற்கு எந்தவிதமான நியாயமும் கற்பிக்க முடியாது. ஆகவே, நான் உங்கள் மூலமாக நிர்வாகத்தை கேட்டுக் கொள்வது என்னவென்றால்—

"The Finance Departments should issue necessary instructions to the concerned departments to ensure that in future, savings are reduced to the minimum and whenever there are savings they are surrendered as and when the saving is envisaged."

இது பொதுவாகத் தெரிந்த நியதி என்று இருந்தாலும் கூட இந்த அப்ரோப்பிரியேஷனில் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இதே நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 13-வது மசோதா இங்கு விவாதிக்கப்படவில்லை. சாதாரணமாக, சப்ளிமென்டரி டிமாண்ட் என்று சொன்னால் இருக்கக்கூடிய 48, 49 டிமாண்டிலும் வரக் கூடாது. ஏதோ ஏழெட்டு டிமாண்டுகளிலே அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றால் புரிந்து கொள்ள முடியும். 48 டிமாண்டுகளிலும் சப்ளிமென்டரி போடுவது என்பது சரியல்ல.

"It reduces itself to a Mini-Budget."

சப்ளிமென்டரி என்று வரும்போது குறிப்பிட்ட சில ஐட்டத்திற்கு மட்டும் அதிகமாகச் செலவு இருக்கிறது என்ற முறையில் எதிர்பாராத முறையில் செலவு ஏற்பட்டுவிட்டது என்று வரவேண்டுமே தவிர, இப்படி ஆண்டு முடியும் காலத்தில் சப்ளிமென்டரி பட்ஜட் போட்டால்—

Let it not pose itself as a Mini-Budget என்ற இந்தக் கருத்தையும் சொல்லிக் கொள்ளலாம் என்று ஆசைப்படுகிறேன்.

பொதுவாக பல மானியங்களின் பேரிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சிறந்த கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களில் சிலவற்றை இன்னும் கொள்கை ரீதியாக இங்கே வலியுறுத்துகின்ற அந்த அளவுக்குத்தான் இப்போது சொல்லலாம் என்று நம்முடைய விதிகள் கூடச் சொல்லியிருக்கின்றன. நான் இதை ஒரு மானியத்தின் பேரிலே நடக்கக்கூடிய விவாதமாக மாற்றிவிட விரும்பவில்லை.

இன்றைக்கு லாண்ட் ரெவின்யூ அண்டு அக்ரிகல்சர் இந்த இரண்டும் நம்முடைய இந்த மசோதாவில் ஷெட்யூல் க்ளாஸ் 1-ல் 1, 16, 39 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் நாம் செல வழிப்பது 23·96 கோடி ரூபாய் ஆகும்.

இது மிக முக்கியமான மானியம். இந்த மானியத்தின் பேரில் கொள்கை ரீதியாகப் பார்க்கும்போது இரண்டு மூன்று விஷயங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒன்று, எங்களுடைய கட்சி சார்பில் நில உச்சவரம்பிற்கு விதி விலக்குகள் கூடாது என்ற முறையில் ஒரு மசோதாவை சமர்ப்பித் திருக்கிறோம். இங்கு கூட சில விதிவிலக்குகள் ரத்து பண்ண வேண்டு மென்று நாம் முடிவு எடுத்திருக்கிறோம். கொள்கை ரீதியில் இதன் அடிப்படையில் அந்த விதிவிலக்குகள் ரத்து செய்யப்பட்டு அதன் பலன் கள் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். நான் அதை அதிகமாக விளக்கிச் சொல்லாமல் போனாலும் எங்கள் மசோதாவில் உள்ள கருத்துக்களை ஆலோசனைகளாகச் சமர்ப் பிக்கிறேன்.

அடுத்து, இனாம் சம்மந்தமாக இருக்கக்கூடிய ஒரு விஷயம். இனாம் சம்பந்தமாக எனக்குத் தெரிந்த வரையில் இந்த மன்றத்தில் அதிகமாகத் தெரிந்தவர் நம் அமைச்சரவையிலே இருக்கிறார்கள். அதை அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். குறிப்பாக புதுக் கோட்டையில் 22-ம் தேதி 500 இனாம் விவசாயிகள் ஊர்வலமாகச் சென்று ஆர்.டி.ஓ. ஆபீஸுக்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்ற செய்தி வந்து அதை இங்கே எழுப்ப விரும்பினேன். அதன் சரித்திரத்திற்குள் நான் போகவில்லை. இனாம் ஒழிப்பு என்பது உண்மை யாக இருக்க வேண்டுமென்பதற்காக அன்று அண்ணா அவர்கள் விசேஷ அதிகாரியைப் போட்டு இருந்தார்கள்.

நூற்றுஇருபது கிராமங்களில் இந்த இனாம் நிலங்கள் இருக்கின்றன. இனாம் ஒழிப்பு வேண்டுமென்று சொன்னாலும் இன்று ஏற்கனவே அந்த நிலத்தில் இருந்து அனுபவித்து வந்தவர்கள் வெளியேற்றப் படும்படியான ஒரு துர்ப்பாக்கியமான காட்சியைப் பார்க்கிறோம். ஆகவே அந்த நிலங்களில் உள்ளவர்கள் வெளியேற்றப்படாமல் பாது காக்கப்பட வேண்டும். மேஜர் இனாம்ஸ், மைனர் இனாம்ஸ் ஒழிப்பு என்றிருந்தாலும் கூட அதன் பலன் அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. புதுக்கோட்டையை ஒரு உதாரணமாகச் சொன்னேனே தவிர, நெல்லை மாவட்டமாகட்டும், கோவை மாவட்டமாகட்டும், அல்லது மதுரையில் உள்ள சில விவசாயிகளாகட்டும், இனாம் விவசாயிகள் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் பலனை அனுபவிக்க முடியவில்லை. ஆகவே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, நில வெளியேற்றம் எந்த வகையிலும் நடைபெறாமல் நிறுத்தப்பட வேண்டும். தற்போது ரெவின்யூ கோர்ட், சிவில் கோர்ட் நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட வேண்டும். 1965-ம் ஆண்டிலிருந்து இனாம் கிராமங்களிலிருந்து

வெளியேற்றப்பட்ட இனும் விவசாயிகள் ரெஸ்டோர் செய்யப்பட வேண்டும். ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட்களில் இருக்கும் கேஸ்களை துரிதப்படுத்தி முடிக்க மாநில அரசு சட்ட இலாகா உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஸ்டே ஆர்டர்ஸ் இருந்தாலும் ஸெட்டில்மெண்ட் விசாரணை, பட்டா விநியோகம் நடைபெற வேண்டும். ஸ்டே ஆர்டர் இருந்தாலும் விவசாயிகளிடம் சர்க்கார் நேரடி வசூல் செய்ய வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இது சம்பந்தமாக எங்கள் கட்சி சார்பில் ஒரு தனியார் மசோதாவைக் கொடுத்திருக்கிறோம். இந்தக் காரியங்கள் எல்லாம் அதில் உள்ளன.

அடுத்து, காலம் 6-ல் 32 லட்சம் ரூபாய்—ஸ்டேட் லெஜிஸ்லேச்சர். ஒரு சிறிய கொள்கை இருக்கிறது என்று கருதுகிறேன். இங்கே பல முறை கிளப்பப்பட்டிருக்கிறது. ஓல்ட் ஹாஸ்டலில் டெலிபோன் இல்லை. பலர் நமக்கு டெலிபோன் செய்து பேச முடிவதில்லை. நாமும் பேச முடிவதில்லை.

அதே மாதிரி அங்கு ஒவ்வொரு கட்சிக்கும் ஆபீஸ் கொடுத்திருக்கிறார்கள். அங்கும் டெலிபோன் இல்லை. இது ஒரு சிறிய விஷயந்தான். இந்தச் சிறு விஷயத்தில் கூட அதை அமல் நடத்துவதில் கோளாறு இருக்கிறது என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, காலம் 24—லேபர் இன்க்ளூடிங் பாக்டரீஸ். ஒரு விஷயத்தைப் பற்றி ஏற்கனவே ஒரு உறுப்பினர் தெரிவித்தார். காஸ்ட் ஆப் லீவிங் இண்டக்ஸ் தயார் செய்வதில் கோளாறு இருக்கிறது. குறிப்பாக விலைவாசிகள் உயர்ந்து கொண்டு போய்க் கொண்டிருக்கும் போது பெப்ரவரியில் ·38 குறைந்தது. இது நடைமுறைக்கும் புள்ளிக்கும் சம்பந்தம் இல்லாமலிருக்கிறது. ஆகவே ,இந்தப் புள்ளி விவரங்களைத் தயாரிப்பவர்கள் நல்லமுறையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதிலுள்ள ஒரு சிரமம் எனக்குத் தெரியும். ஸிம்லாவில் தயாரிப்பதை வைத்துத்தான் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் அதை ரெக்டிஃபை செய்யும் வசதி வாய்ப்பு இருக்கிறது. அதையும் செய்ய வேண்டும்.

இன்னொன்று. இந்தப் புள்ளி விவரங்களைத் தருவது டைரக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ் என்று நினைக்கிறேன். அந்த இலாகா பற்றி பல புகார்கள் வந்துள்ளன. அங்குள்ள டைரக்டர் ஓய்வு பெறவேண்டியதற்குப் பதிலாக அவருடைய காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. முன்பு ஒரு காலத்தில் பி.ஏ., எம்.ஏ. படித்தவர்களுக்குச் சிறிது பதவி உயர்வு கொடுக்கவேண்டுமென்று 1967–68-ல் அண்ணா அவர்கள் சொன்னார்கள். பி.ஏ., எம்.ஏ. படித்தவர்கள் ஒதுக்கப்பட்டு எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களுக்கு ப்ரமோஷன் என்ற நிலை வந்திருப்பதாக செய்திகள் வருகின்றன. அதையும் சிறிது கவனிக்க வேண்டும்.

அடுத்து, 8 (ஏ)—பால் பண்ணைகள் சம்பந்தமாக அதிகக் கவனம் செலுத்துகிறோம் என்று தெரிவித்தார்கள். பத்து கோடி ரூபாய் வரையில் இதை விருத்தி செய்ய வசதி வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அப்படியிருக்க மதுரையில் இப்போது ஒரு பால் பண்ணை இருக்கிறது. அது வந்தது எங்களுக் கெல்லாம் சந்தோஷம். ஆனால், rated capacity is 50,000 litres. ஆனால் இன்று உற்பத்தியாவது 20,000 லிட்டர்தான். அதையும் சிறிது கவனிக்க வேண்டும். ஆகவே உற்பத்தியைப் பெருக்கி விற்பனை செய்வதற்கான காரியங்களை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, கல்வி. கல்விக்காக ஆண்டுக்கு ஆண்டு பணம் ஒதுக்குவதை உயர்த்திக் கொண்டு போகிறோம். பல கேள்விகள் இங்கே கேட்கப் பட்டிருக்கின்றன. முறையான பதில்களும் வருகின்றன. ஒன்று கூற விரும்புகிறேன். பால் கமிட்டி சிபாரிசு வந்திருக்கிறது. இன்று அரசு பணம் ஒதுக்கீடு செய்தாலும் அது அங்குள்ள ஆசிரியர்களுக்குப் போய் சேருவதில்லை. ஆகவே, அவர்களுக்கு நேரடியாகப் பணம் கிடைக்க வேண்டும் என்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது. அவர்கள் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்ற நிலையும் சொல்லப்பட்டது. ஆகவே அப்பேர்ப்பட்ட ஆசிரியர்களுக்கு நேரடியாகப் பணம் கிடைப்பதற்கு வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும். இந்தத் தொடரில் ஒரு மசோதா கொண்டுவருவதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டு வருவதாகத் தெரியவில்லை. மசோதா மூலம் செய்யாத காரியத்தை சர்க்கார் உத்தரவு மூலம் செய்யக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

அடுத்த சட்டசபைக் கூட்டம் கூடப்போவது ஜூன் அல்லது ஜூலையில் தான். ஆசிரியர்கள் பலர் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தினால் ஆரம்ப ஆசிரியர்கள் இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு ஒரு கிளர்ச்சிக்கு கிளம்புவதற்கு இடமில்லாத முறையில் செய்ய வேண்டும். ஆகவே ஒன்று. இந்தத் தொடரில் வாக்குறுதி அளித்தபடி ஒரு மசோதா கொண்டுவரப்பட வேண்டும். அப்படி மசோதா வராமல் போனாலும் கூட அந்த மசோதா விற்கு இணங்கிய விதத்தில் சர்க்கார் சரியான ஒரு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்.

அடுத்து, டைரக்டர் ஆபீஸில் டிலே இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதையும் அரசு கவனிக்க வேண்டும்.

பி.டப்ளியு.டி. பொறுத்தவரையில் ரூ. 34,71,00,000 நாம் மானிய மாக ஒதுக்கியிருக்கிறோம். அங்கும் டிலேதான். பீ.ஏ.ஸி. ரிப்போர்ட் டைப் பார்த்தால் ஐந்தாண்டுக் காலம் —சேலம் ஸ்டீல் ப்ளான்ட் ஐந்து ஆண்டுகள், பத்தாண்டுகள் டிலே ஆகிறது என்று சொன்னால்— நீர்ப்பாசனம் அல்லது சிறிய வேறு காரியங்களில் கூட டிலே ஏற்படுகிறது.

The initial estimate is always low, but the revised estimate is much higher ; at the time of conclusion, it is very much higher.

இந்த மாதம் 28-ம் தேதி கரூரில் ஒரு தலைவர் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்ற செய்தி வந்தது. காரணம், நொய்யல் திட்டம் ஏற்கனவே பல ஆண்டுகளாக பரிசீலனை செய்யப்பட்டும் எந்த

முறையில் அமல் ஆவது என்பது தெரியவில்லை. அதிலுள்ள சிக்கல் எனக்குத் தெரியும். எங்கள் கட்சியைச் சார்ந்த சுப்பையா அவர்கள் நொய்யல் திட்டம் மூலம் ஏற்படும் பலன் பற்றி, எந்தெந்தக் கிராமங்கள் எல்லாம் பயனடையும் என்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நொய்யல் திட்டத்தைப் பற்றியும் கவனிக்க வேண்டும்.

அடுத்து, பர்மாவிலிருந்தும், சிலோனிலிருந்தும் அகதிகள் வருகிறார்கள். சிலோன் அகதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தேயிலை தோட்டங்கள் அல்லது ரப்பர் தோட்டங்களில் பணியாற்றக்கூடியவர்கள். இந்த ஆண்டு 50,000 பேர்கள் வருவதாக தகவல் வந்திருக்கிறது. 50,000 பேர்கள் வரும்போது அவர்களில் இரண்டாயிரம் பேர்களை அந்தமானுக்கு அனுப்புவது மட்டுமல்ல, இங்கே வெகு சீக்கிரத்தில் நம் ரப்பர் தோட்டங்களை விரிவுபடுத்தப் போகிறோம். பத்தாயிரம் ஏக்கர் நிலத்தில் ரப்பர் போடப் போகிறோம் என்று தெரிவித்தார்கள். அது கண்டிப்பாக நடக்க வேண்டும்.

அப்போது நீங்கள் அங்கேயிருந்து வரும் அகதிகளுக்கு முதல் இடமாகக் கொடுக்க வேண்டும்.

அகதிகளுக்கு வீடு கட்டுவது என்று ஏற்பாடு இருப்பதாகத் தெரிகிறது. பர்மா அகதிகளுக்கு எனக்கு தெரிந்த வரையில் மதுரையில் திருப்பரங்குன்றத்தில் 12,000 வீடுகள் கட்டப்படுவதாகச் சொல்லப்பட்டு 100–150 வீடுகள் கூட வரவில்லை. அமைச்சர் அவர்கள் அதை கவனத்தில் கொண்டால் நிச்சயமாக வந்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

உணவு சம்பந்தமாக ரூ. 31,51,00,000 ஒதுக்கியிருக்கிறோம். இதிலே இரண்டு விஷயங்கள் கண்காணிப்பாகப் பார்க்க வேண்டும். முதலாவதாக நெல் கொள் முதல் விஷயம், இரண்டாவதாக, சீனி சம்பந்தமாகத் தான். இரண்டும் மக்களுக்குத் தேவையானது. எங்களுடைய கட்சியைச் சார்ந்த மணலி கந்தசாமி அவர்கள் பேசுகிற போது இந்த இலாகா எந்த அளவுக்கு நன்றாகச் செயல்படுகிறதோ, அந்த அளவுக்குத்தான் நல்ல பெயர் அரசுக்கு வரும் என்று சொன்னார்கள்.

5,000 டன் சீனி வினியோகிக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதிலே உள்ள சிக்கல் என்ன என்பது நமக்குத் தெரியவில்லை. கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுத்தால் சரியாக இல்லை என்கிறார்கள். இன்னொரு அமைச்சரைக் கேட்டால் நான் அதைப் பற்றி பேசத் தயாராக இல்லை என்று சொல்லுகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், எப்படியாகிலும், மக்களுக்கு சீனி கிடைக்க வேண்டும். இன்று 5,000 டன்னாக இருந்தது 7,000 டன்னாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறபோதும், மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கக் கூடாது.

நெல் கொள் முதல் சம்பந்தமாக சில விவரங்கள் எனக்குத் தெரியும். இந்த 52 பேருக்கு கொள்முதல் செய்வதற்கு அனுமதி கொடுத்திருப்பதை பற்றி பரிசீலனை செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அடிக்கடி இந்த 52 பேர், ஹல்லிங் ஏஜண்டைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். மார்டர் ரைஸ் மில்லை எந்த அளவுக்கு பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு பயன்படுத்தி விட்டு, மற்ற மாவட்டங்களில் எப்படி வைத்திருக்கிறோமோ அதேபோல் தஞ்சை மாவட்டத்திலும் ஹல்லிங் ஏஜெண்ட் வைத்திருக்கிறோம். நம்மிடமிருந்து யார் நெல்லை வாங்கி சரியான முறையில் அரவை செய்து கொடுக்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கிறோம். தவறு செய்பவர்களை பல இடங்களில் கண்டு பிடித்து, அவர்கள் மீது கிரிமினல் ஆக்ஷன் கூட எடுத்திருக்கிறோம். இன்னும் கிரிமினல் ஆக்ஷன் எடுக்க உத்திரவு போட்டிருக்கிறோம். அரசாங்கம் அந்த 52 பேருக்கு மட்டும் சலுகை கொடுக்கிறது என்று பேசுவது சரியல்ல. சரியான தகவலோடு பேச வேண்டும். அந்த 52 பேருக்குச் சலுகை செய்ய வேண்டுமென்று அரசு எதையும் செய்ய வில்லை. நெல்லை அரைத்துத் தருகிறேன் என்று யார் யார் முன் வருகிறார்களோ அவர்களிடத்தில் அரசிடம் உள்ள நெல்லைக் கொடுத்து அரைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் கேட்கிறேன், 52 பேரை மாற்றி, வேறு 52 பேரை ஏன் நியமிக்கக் கூடாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஹல்லிங் ஏஜெண்ட்டாக யார் கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். 52 பேர் மட்டுமல்ல. அந்த 52 பேர் யார் என்பது கூட எனக்குச் சரியாகத் தெரியாது. அவர்களுக்குச் சலுகை செய்ய வேண்டுமென்று இல்லை. இப்போதுகூடச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருப்பவர்கள் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பாக்கியைக் கொடுத்து விட்டு, ஹல்லிங் ஏஜெண்டுகளாக ஆகத்தயார் என்று எழுதியிருப்பார்களானால், அவர்களையும் நிச்சயமாக எடுத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். அரசாங்கத்தின் கையில் இருக்கும் நெல்லைக் கொடுத்து அரவை செய்து கொள்வதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: 52-ஐ பற்றி சில விவரங்கள் சொல்கிறேன். பல பேர் கொள் முதல் விலை ரூ. 32, ரூ. 33 என்று இருந்தால் கூட, ரூ. 33-க்கு கையெழுத்து வாங்கிக் கொண்டு விட்டு, ரூ. 30 கொடுத்து விட்டு, தாங்களே 3 ரூபாயை எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். என்னால் சில விவரங்களைக் கொடுக்க முடியும். அந்த ஏஜெண்டுகளுக்கு அப்படி அதிகாரம் கொடுப்பதால், அவர்கள் எந்த முறையில் இந்த 1 ரூபாய், 2 ரூபாய் எடுத்துக் கொள்கிறார்கள்? யார் தைரியம் கொடுக்கிறார்கள் அவர்களுக்கு இப்படிச் செய்ய?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: அவர்களையே கொள்முதல் ஏஜெண்டுகளாக வைத்திருக்கிறோம். அந்த வாதத்தை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். கொள் முதலை இரண்டு வகையாகச் செய்கிறோம். ஒன்று லெவி முறை. அதற்கு அரசாங்கம் ஃபேர் பிரைஸ் மூலம் செய்கிறோம்.

1972 மார்ச் 30] [திரு. ப. உ. சண்முகம்]

மற்றொன்று, ஓபன் மார்க்கெட் ப்ரொக்யூர்மென்ட் முறை வைத்திருக்கிறோம். ஓபன் மார்க்கெட் விலையை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயிக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திடம் நெல்லைக் கொடுக்கலாம், எப்.சி.ஐ. யிடத்தில் கொடுத்தாலும் கொடுக்கலாம், ஹல்லிங் ஏஜெண்டுகளிடத்தில் கொடுத்தாலும் கொடுக்கலாம். இந்த விலை இருக்கிறது என்று கிராமந்தோறும் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளை ஏமாற்றி ஹல்லிங் ஏஜெண்டுகள் யாராவது தவறு செய்திருப்பார்களேயானால் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 31 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.. நல்ல முறையில் கொள்முதல் செய்யப்பட்டு, உற்பத்தியாளருக்கு நல்ல விலை கொடுத்தும், மக்களுக்கு வாங்கக்கூடிய அளவுக்கு விற்க வேண்டுமென்ற கருத்தை சொல்லிக்கொள்கிறேன். இந்த மாதிரியான சில சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் டவுனுக்குப் பக்கத்திலே ஒரு கோவில் பாட்டுக் கச்சேரிக்குச் சென்றபோது, அங்கேயிருந்த வீடு இடிந்து விழுந்து 3–4 பேர் இறந்து விட்டதாகத் தெரிகிறது. மதுரையில் இந்த மாதிரி வைகையாற்றில் வெள்ளம் வந்த போது பல வீடுகள் இடிந்து போய் விட்டது. வீடு இழந்தவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்தது. அதே மாதிரி இப்போது இறந்து போனவர்களுக்கும் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது முதலமைச்சர் அவர்கள் 25,000 ரூபாய் உடனடியாகக் கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். இப்போது 11 பேர் உண்மையாகவே கஷ்டப்படுகிறவர்களுக்கு அது கிடைத்திருக்கிறது. அதேபோலவே, இப்போது இறந்து போனவர்களுடைய குடும்பத்திற்குக் கொடுத்தால் பேருதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தச் சம்பவம் எப்படி நடந்தது என்ற விவரத்திற்கு நான் போக விரும்பவில்லை.

பஞ்சாயத்து பிரிப்பது சம்பந்தமாக ஒரு கொள்கையை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேம்பார் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கேயிருப்பவர்கள் மரமேறும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்; கருப்பட்டித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். அதை இரண்டாகப் பிரிக்கக் கூடாது என்றப் பிரச்சனை கோர்ட் வரைக்கும் போய் இரண்டாகப் பிரிப்பது என்று வந்துவிட்டது. அதை வடக்கு வேம்பார், சுப்பிரமணியபுரம் என்று பிரித்திருக்கிறார்கள். அந்த மக்களுக்கு அந்த வேம்பார் என்ற பெயர் போகக் கூடாது என்று விரும்புகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியை வடக்கு வேம்பார், தெற்கு வேம்பார் என்று வைத்தால் நன்றாக இருக்கும். அவர்கள் அதை ஒரு பிரச்சனையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பெயர் இருக்கும் வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் நிறைய பேச வேண்டியிருக்கிறது. இங்கே மின்சாரத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்கள்.

பல தடவை வற்புறுத்தியிருக்கிறேன். இந்த மின்சார சப்ளை பொறுத்த வரையில் இப்போது கெமிகல்ஸ், அலுமினியம் போன்ற இம்மாதிரியான தொழிலுக்கு நாம் ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருக்கும் கன்சஷன் இருக்கிறதே அதைக் கொஞ்சம் நிறுத்தி வைக்கும் நோக்கம் இருக்கிறதா, அவர்களுக்கு கன்சஷன் கொடுப்பதிலிருந்து நீக்கிவிட்டால், 1 கோடி, 2 கோடி மீதம் வருகிறது. அதை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு பேருதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

லோன்ஸ் அண்டு அட்வான்சஸ் பற்றி பல விவரங்கள் வைத்து இருக்கிறேன். இதை இப்போது சொல்ல நேரம் இல்லை. லோன்ஸ் அண்டு அட்வான்சஸ் எந்த முறையில் இருக்கிறது, அது சரியாகப் பயன் படுத்தப்பட்டிருக்கிறதா என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்தின் அடிப்படையில் இன்று அரசு கொடுத்திருக்கும் பணத்தை, இந்த ஆண்டு வரக்கூடிய காலத்தில் நல்ல முறையாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா, அதனால் நாம் வகுத்து வைத்த கொள்கை அளவில் போய் இருக்கிறதா, பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி சுட்டிக் காட்டிய குறைபாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை பைனான்ஸ் டிபார்ட்மெண்ட் கான்ஷியன்சோடு இருந்து அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : தலைவரவர்களே, இறுதியாக ஓரிரண்டு கருத்துக்களை எடுத்துச் சொல்ல என் கட்சியின் சார்பாக முற்படுகிறேன்.

இந்த பட்ஜெட் அமைப்பில் உள்ள பல நல்ல அம்சங்களை யெல்லாம் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூறினார்கள். பொதுவாக, இந்த பட்ஜெட்டைப் பார்க்கிறபோது, ரசீட்ஸ் அண்டு எக்ஸ்பெண்டிச்சர் சரியான முறையில் குறித்துக் கொடுக்கப்பட வில்லை என்ற கருத்தினை நான் இங்கே கூற விரும்புகிறேன். உதாரண மாக, எப்போதும் ஆங்காங்கு எவ்வளவு ஆண்டிசிபேடட் ரசீட்ஸ், எவ்வளவு எக்ஸ்பெண்டிச்சர் என்ற கணக்கு இந்த பட்ஜெட் அமைப்பில் ஒழுங்காக இல்லை என்று குறிப்பிடுகிறேன். எப்போது பார்த்தாலும் இந்த ஆண்டிசி பேடட் பிகர்ஸ்க்கும், இட்ஸ் ஆக்ச்சிவலுக்கும் வித்தியாசமே இருப்பதால், இந்தமாதிரியான பட்ஜெட்டை திருத்தியமைக்க இலாகாவை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தம்பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏதோ 1961-ல் நிலச் சீர்திருத்தம் வந்துவிட்டது என்றாலும், அப்பொழுது முன் எச்சரிக்கை கொடுத்து விட்டார்கள், பலருக் கும் தங்களுடைய சொத்துக்களை யெல்லாம் பிரித்து வைத்து எழுதி விட்டார் கள், எவ்வளவோ தவறுகள் நடந்துவிட்டன, டிரான்ஸ்பேர்ஸ் ஏற்பட்டு விட்டன என்று பல தடவை மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சட்டம் நாணிக் கோணி நிற்கிறது என்ற ஆட்சேபணையை இந்த மன்றத்தில் தெரிவித்தார்கள்.

1972 மார்ச் 30] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தத்தில் விதி விலக்குகளை அகற்றுவதற்கு இப்பொழுது அரசாங்கம் திட்டம் தீட்டி வருகிறது. அதற்கு வேண்டிய சட்டங்களையும் இயற்றுவதற்கு முன் வந்திருக்கிறார்கள். மத்திய அரசு நம்முடைய மாகாண அரசுக்கு என்ன ஆலோசனைகளைப்பகிர்ந்து தந்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அர்பன் லாண்டு டாக்ஸ் சம்பந்தமாக மத்திய அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது, நம்முடைய அரசாங்கம் என்ன ஆலோசனை நடத்த இருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிய வேண்டும்.

அது மட்டுமல்ல. இன்று இருக்கிற அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் டிரஸ்ட்ஸ் அண்டு டிரஸ்டீஸ் எல்லாம் மத்திய அமைப்பில் எண்ட்ரி 10-க்கு உட்பட்டதாக இருக்கிறது. அதேமாதிரி கன்கரண்டு லிஸ்டில் 28-வது பிரிவில் சாரிடபிள் இன்ஸ்டிடியூஷன்ஸ்—சாரிடபிள் அண்டு ரிலிஜியஸ் எண்டவ்மெண்ட்ஸ் அண்டு ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷன்ஸ் என்று சொல்லியிருக்கிறது. ஆதலால் டிரஸ்டுகளுக்குக் கொடுத்திருக்கக் கூடிய உரிமைகள், அவைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடிய விதிவிலக்குகளை யெல்லாம் எப்படி மாற்றுவது நல்லது என்பதை நாம் ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டும்.

குறிப்பாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் கன்கரண்டு லிஸ்டில் வருகிறது சாரிடபிள் அண்டு ரிலிஜியஸ் எண்டவ்மெண்ட்ஸ் அண்டு ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷன்ஸ் ஆகியவைகளுக்கு என்ன முறையில் வழிவகைகள் வைக்க வேண்டும் என்பதையும் நாம் ஆராய்வது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். இந்த விதிவிலக்குகள் இவற்றை யெல்லாம் எடுப்பதிலே எங்களைப் போன்றவர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. நாம் எல்லோரும் சம தர்மத்தை நிறைவேற்றப் பாடுபடுகிறோம். இந்தத் தேசத்தில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு, குறிப்பாக நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க வேண்டும் என்ற கருத்தில் இரண்டு விதமான அபிப்பிராயத்திற்கு இடமில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திட்டவட்டமாகவும், தெளிவாகவும், இந்த விதிவிலக்குகளை யெல்லாம் எப்பொழுது அகற்றப் போகிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். முன்பு ஏதோ, 1961-க்கு முன்பு நிலச் சீர்திருத்தம் வருகிறது என்று சொன்னவுடனேயே எல்லோரும் மாற்றி வைத்துக் கொண்டு விட்டார்கள், பிரித்து வைத்துக் கொண்டு விட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறார்களே, ஊழல் என்று சொல்லக் கூடிய அளவுக்கு பலரும் இங்கே பேசினார்களே, இப்பொழுது எல்லா விதிவிலக்குகளையும் அகற்றப் போகிறோமே, இது ஊழலாகுமா என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது இருக்கிற சட்டப்படி பிணையாக இருப்பதை யெல்லாம் எப்படி அப்புறப்படுத்தப் போகிறார்கள், உரிமைகள் எல்லாம் எப்படி பாதிக்கப் படப் போகின்றன என்பதைச் சற்று நிதானமாகச் சிந்திக்க வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நமது இலாக்காக்கள். விஜிலன்ஸ் டிபார்ட்மெண்ட் பல இடங்களில் பல அதிகாரிகள்மீது வழக்கு தொடர்ந்து இருக்கிறது. ஆனால், விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டினால் போடப்பட்ட வழக்குகள்3

வருஷம், 4 வருஷம் இன்வெஸ்டிகேஷன் என்ற அளவிலே இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், சேலத்தில் ஒரு கேஸ், ஹைவேஸ் டிபார்ட்மெண்டு சம்பந்தப்பட்டது. அதில் இருக்கிற ஒரு சில அதிகாரிகள் இன்று கைது செய்யப்பட்டு ஜாமீனில் நிற்கிறார்கள். ஒன்று, கேஸ் போட்டால் அதைத் துரிதமாக பைசல் செய்ய வேண்டும், துரிதமாக கேஸ் முடிப்பதற்கு காலவரை நிர்ணயிக்க வேண்டும் என்ற கருத்தினையும் நான் கூற விரும்புகிறேன்.

அதே மாதிரிஎளங்கள் பகுதியிலே மரவள்ளிக் கிழங்கு போன்றவை களெல்லாம் விநியோகம் செய்வதிலே அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டில் இருக்கிற ஒரு சில அதிகாரிகளின் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டு, ஒரு சிலரைக் கைது செய்திருக்கிறார்கள். கைது செய்து, இரண்டு மூன்று வருஷங்கள் ஆகின்றன. ஒரு சிலர் ஜாமீனில் நிற்கிறார்கள். இதுவரை யிலும் சார்ஜ் ஷீட் ஃபைல் செய்யவில்லை, விசாரணை நடைபெறவில்லை. இம்மாதிரி நீண்ட நாட்களாக இந்த அதிகாரிகள் வெளியே இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து குற்றம் சாட்டப்பட்டால், சார்ஜ் ஷீட் கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வெடரினரி கல்லூரியில் நடக்கும் மாணவர்கள் போராட்டத்தைப்பற்றி எல்லாம் இங்கே விரிவாக எல்லோரும் பேசினார் கள். சுமார் 600 மாணவர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்தது. (மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள்). விடுதலை ஆகிவிட்டார்கள் என்று சொல்கிறார் கள். மிகவும் மகிழ்ச்சி. இம்மாதிரியான கிளர்ச்சி இல்லாத முறையில் மாணவர்கள் இருப்பார்களேயானால் நலமாக இருக்கும் என்ற கருத்தினை யும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இம் மாதிரி காரியங்களில் பலவிதமான வேற்றுமை இருக்கத்தான் செய்யும். ஆனால், அதற்கு முடிவு துரிதமாக ஏற்பட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பிளானிங் கமிஷன் பற்றி ஒரு வார்த்தை கூற வேண்டுமென்று நினைக்கிறேன். நமது ராஜ்யத்தில் பிளானிங் கமிஷன் நிறுவப்பட்டிருக்கிறது. அவர்கள் என்னென்ன திட்டங்களைத் தீட்டியிருக்கி றார்கள், அது சம்பந்தமாக அரசாங்கத்திடம் ஏதாவது திட்டங்களை வழங்கி இருக்கிறார்களா, அல்லது நகல்கள் தந்திருக்கிறார்களா என்பதைப்பற்றி இந்த மன்றத்தில் கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த ஜில்லாவில் என்ன வேலைகள் துவக்குவதற்கு இவர்கள் பரிந்துரை அளித் திருக்கிறார்கள்? ரீஜனல் இம்பாலன்ஸ் இன் பிளானிங் என்று சொல்கிற அளவில், எந்தப் பகுதி தாழ்ந்திருக்கிறதோ, அல்லது பிற்பட்ட பகுதியாக இருக்கிறதோ அதை முன்னேற்றுவதற்கு, ஊக்குவிப்பதற்கு என்ன நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை யெல்லாம்பற்றி இவர்களு டைய ஆலோசனைகளைப் பகிர்ந்து தந்திருக்கிறார்களா ? பல ஸ்டடி குரூப்ஸ் ஸ்டடி செய்திருப்பதாக அறிகிறேன். அந்த விவரங்களை யெல்லாம் இந்த மன்றத்தில் வைத்து, அதைப்பற்றி தனியாக விளக்குவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதன் விவரங்களை இந்த மன்றத்தில் அறிவிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.

1972 மார்ச் 30] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இன்னொரு விஷயம் எக்சைஸைப் பொறுத்தது. மதுவிலக்கு எடுக்கப்பட்டதால், அதிலும் குறிப்பாக, மூன்று அல்லது நான்கு ராஜ்யங்களிலே இருக்கிற இந்த மதுவின் விலையானது சற்று வேற்றுமையாக இருக்கிற காரணத்தினால் சில பகுதிகளிலிருந்து மற்ற பகுதிகளுக்கு கடத்தல் செய்யப்படுகிற தன்மையைப் பார்க்கிறோம். உதாரணமாக, கேரளா, மற்ற பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருகிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு பரவலாக கூறப்படுகிறது. நான்கு ராஜ்யங்களிலும் இருக்கிற அதிகாரிகளெல்லாம் ஒன்று கூடி, இது சம்பந்தமாக அவர்களுடைய ஆலோசனைகளைப் பகிர்ந்து, இதைத் தடுப்பதற்கு என்ன வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்பதையும் ஆராய வேண்டும் என்ற கருத்தினை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய இலாகாவைப் பொறுத்த அளவில் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற வேண்டும் என்று நினைக்கிறேன். இப்பொழுது ஏரியல் ஸ்ப்ரேயிங் பல இடங்களில் நடத்தப்படுகிறது. ஏரியல் ஸ்பேரயிங்சில் பலவிதமாக வேஸ்டேஜ் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதாவது ஃபாலோ நிலங்களிலெல்லாம் ஸ்ப்ரே செய்யப்படுகிறது. ஆதலால் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது என்ற கருத்துகூட கூறப்பட்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு என்ன பராமரிப்பு முறைகள் ஏற்பட வேண்டும் என்பதை அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், புல்டோஸர்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். முன்பு புல்டோஸர் கொடுத்தால் மணிக்கு ரூ. 52 என்று வாடகை இருந்தது. அதை இப்பொழுது ரூ. 60 என்ற அளவில் மாற்றியிருக்கிறார்கள். நாம் எல்லோரும் பசுமைப் புரட்சி என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளுக்காக பல நல்ல காரியங்களைச் செய்கிறோம் என்றெல்லாம் சொல்லுகிறோம். விவசாயிகளிடமிருந்து இப்பொழுது அதிகமாக வரியையும் வசூலித்துக் கொண்டிருக்கிறோம். ஆதலால், இந்த புல்டோஸர் வாடகையை ரூ. 60 என்று கூட்ட வேண்டிய அவசியமில்லை. முன்பு இருந்த ரேட்டே கூடுதலாக இருக்கிறது. அதற்கு முன்பு இருந்த ரேட்டே கூடுதலாகத்தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அதையும் குறைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மிகவும் முக்கியமான ஒரு விஷயம். மதுரையில் ஒரு ஹைகோர்ட்டு பெஞ்சு அமைக்க வேண்டும் என்று பலமுறை நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம். ஏனென்றால், தென் மாவட்டங்களில் இருக்கின்ற பலருக்கும் மதுரையில் ஓர் உயர் நீதிமன்ற பெஞ்சு ஏற்படுத்தினால், அது மிகவும் பொருத்தமாக இருக்கும். அது சம்பந்தமாக நமது உயர்நீதி மன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஆலோசனை நடைபெறுகிறதா, அது எந்த நிலையில் இருக்கிறது என்ற கருத்தினை நமது அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, கல்வி இலாகா சம்பந்தமாக பெருத்த அளவில் பணத்தைச் செலவழிக்கிறோம். இன்ஸ்டிடியூட் ஆஃப் எஜுகேஷன் என்ற அமைப்பைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறவேண்டுமென்று நினைக்

கிறேன். அந்த ஸ்தாபனம் 1965-ல் ஏற்படுத்தப்பட்டது. அதற்காக ரூல்ஸ்' அட்ஹாக் ரூல்ஸ் இதுவரையிலும் பிறப்பிக்கப்படவில்லை என்ற ஒரு குற்றச் சாட்டு இருந்து கொண்டே இருக்கிறது. அங்கே பணியாற்றுகிறவர்கள் எம்.ஏ., எம்.ஈ.டி. படித்து பட்டம் பெற்றவர்கள், எம்.ஏ., பி.டி. படித்து பட்டம் பெற்றவர்கள். அவர்கள் நல்ல பணிகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். இவர்களைப் போல அஸிஸ்டெண்டு ப்ரொபஸர்களாக இருப்ப வர்களுக்கு ரூ. 475 சம்பளம் கொடுக்கப்படுகிறது. இவர்கள் எம்.ஏ., எம்.ஈ.டி., எம்.ஏ.பி.டி. படித்திருந்தும் இவர்களுக்கு ரூ. 400 தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இவர்களுக்கும் அஸிஸ்டெண்டு ப்ரொபஸர்களைப் போல ரூ. 475 குறைந்த சம்பளம் நிர்ணயிக்க வேண்டும் என்ற கருத்து அவர்களிடையே இருந்து கொண்டிருக்கிறது. 1965-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்திற்கு இதுவரையில் விதிமுறைகள் பிறப்பிக்கப்படவில்லை. மிகவும் காலம் தாழ்ந்துவிட்டது என்ற காரணத் தினால், உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, என்குயரி ரிபோர்ட்ஸ் பற்றி ஒரு கருத்தைக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். பொதுவாக துப்பாக்கிப் பிரயோகம், அல்லது மற்ற விதமான நிகழ்ச்சிகள் நடந்தால், அடிக்கடி அதற்கு விசாரணை நடத்தப்படுகிறது. விசாரணை நடத்தி, அறிக்கைகளும் இங்கே வருகின்றன. அதுபற்றி ஒரு கருத்தினைக் கூற வேண்டும் என்று நினைக்கி றேன்.

இந்த விசாரணைகள் எல்லாம் சட்ட பூர்வமாக பார்க்கின்ற போது அதைப்பற்றி ஒரு தீர்ப்பிலே கீழ்க்கண்டவாறு கூறி இருக்கிறார்கள்.

"The Commission appointed under the Act is a fact-finding body meant only to instruct the mind of the Government without producing documents of Judicial nature. It is neither a judicial Court nor its proceedings judicial proceedings. Cr.P.C. and Evidence Act do not apply to its proceedings."

என்ற ஒரு தீர்ப்பு நமது உச்ச நீதி மன்றத்தால் கூறப்பட்டிருக்கிறது. 1960 பஞ்சாப் 86 என்ற தீர்ப்பிலே கூறியிருக்கிறது. இது சம்பந்தமாக முன்பொரு முறை கூறினார்கள். இந்த விசாரணைகள் எல்லாம் எப்படி நடத்த வேண்டு மென்று விதிமுறைகள் தனியாக பிறப்பிக்கப்படவில்லை. 1956-ல் ஏற் பட்ட மத்திய சட்டத்தின் கீழ் என்கொயரி எல்லாம் நடந்திருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் விதிமுறைகள் பிறப்பித்திருந்தும் நமது மாநில அரசாங்கம் விதிமுறைகள் பிறப்பிக்கவில்லை என்று இந்த மன்றத்தில் கூறினார்கள். இவ்வாறு விதிமுறைகள் அமைப்பது பொருத்த மாக இருக்கும். ஏனென்றால், அவர்கள் நீதிபதிகள் என்ற முறையில் சாதாரணமாக இருக்கக் கூடிய சட்டத்திற்குட்பட்டு அவர்கள் நடக்கவில்லை. ஆதலால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1972 மார்ச் 30] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்தபடியாக, நமது பட்ஜெட்டில் 400 கோடி ரூபாய் பொது மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்ன நேரங்களில் இந்த பணங்கள் எல்லாம் குறிப்பிட்ட காரியங்களுக்காகச் செலவழிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

'லாஸ்ட் மினிட் சரெண்டர்' போன்றவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு விஷயம், மத்தியிலிருந்து நமக்கு பல திட்டங்கள் மாநில அரசாங்கம் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறது. மத்திய சர்க்காரிலிருந்து கொடுக்கும் உதவியை வைத்து மாநில அரசாங்கம் இந்த திட்டங்களைத் தீட்டும்போது அது சரியான முறையில் ஆய்ந்து நன்மை பயக்கும் திட்டமாக உருவாக்கக் கடமைபட்டவர்களாக இருக்கிறோம். இதை சற்றுச் சிந்திக்க வேண்டும்.

இன்னொரு விஷயம். ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதில் இன்று பல சங்கடங்கள் இருக்கின்றன. ஏனென்றால் சில நேரத்தில் சிலர் கோர்ட்டில் சென்று 'ரிட்' மனு தாக்கல் செய்து விடுகிறார்கள். ரிட் மனு தள்ளுபடியான பிறகு, மறுபடியும் அரசாங்கத்தை அணுகி வேறு சிலர் "ஸ்டே" உத்தரவு பெற்று வருகிறார்கள். அதற்கு ஒத்துழைப்பு ஏற்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்ததில் பல இடங்களில் கட்டிக் கொடுத்த வீடுகள் இடிந்திருக்கின்றன, தரமான வீடுகள் கட்டாத காரணத்தினால் செலவழித்த பணம் ஒழுங்காக செலவழிக்கப்படவில்லை என்று ஆட்சேபணை பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி போன்ற கமிட்டியின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இந்த மாதிரி கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்படக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் எங்கள் ஜில்லாவைப் பொறுத்த ஒரு விஷயத்தை பற்றிக் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். நமது அரசு வெளியிட்டுள்ள, "தமிழரசு" 1972 மார்ச் 16-ம் தேதி இதழ் எங்கள் மாவட்ட சிறப்பு மலராக வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஒரு சிறு பகுதியை தங்கள் அனுமதியின் பேரில் படிக்க முற்படுகிறேன்.

"பின்னர் மொழிவழி நாட்டமைப்பில் பெருவேட்கை கொண்ட அப்பகுதி மக்கள் உரிமைக் கிளர்ச்சி தொடங்கினர். பேரறிஞர் அண்ணா அதனை ஆதரித்து ஆணையிட்டதற்கிணங்க பல நூற்றுக் கணக்கான தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றனர். அதன் பலனாக 1956-ம் ஆண்டு நவம்பர் முதல் நாள் இப்பகுதி திருவிதாங்கூரிலிருந்து பிரிக்கப்பட்டு தாய்த் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் பிறந்தது. ஆம். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இப்போது 16 வயதாகிறது."

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ஒரு சிறு குறிப்பு என்ற முறையில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். அந்த இயக்கத்திலே ஈடுபட்ட ஒரு ஊழியன் என்ற முறையிலும் கூற விரும்புகிறேன். அந்த ஒரு நாடு ஒரு ராஜ்ய "ஸ்டேட்" என்ற அமைப்பின்

கீழ் இருந்தது. அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகளோ அல்லது அமைப்புக்களோ எங்கள் பகுதியிலேயே இல்லை. அதிலும் குறிப்பாக மறைந்த மாமேதை தலைவர் அண்ணா அவர்களின் ஆணைக்கிணங்க வாலிபர்கள் சிறை சென்றார்கள் என்று கூறுவது சரி யல்ல. அது உண்மைக்குப் புறம்பானது என்ற கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் குறிப்பான அந்த இயக்கத்திற்கு உயர்வு கொடுத்த எங்கள் மாபெரும் தலைவர் நேசமணி அவர்கள் தலைமையில் தான் 1949-லும் 1954-லும் இரண்டு போராட்டங்கள் நடந்து பலரும் சிறைச் சாலைக்குச் சென்றார்கள். சட்டசபை உறுப்பினர்களும் சென்றார்கள். பொது மக்களும் சென்றார்கள். அது ஒரு வகை வீரக் கிளர்ச்சியாக இருந்தது என்றால் மிகையாகாது. திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் என்ற இயக்கத்தின் பேரால் எல்லோரும் வந்து செயலாற்றியவர்களை எங்கள் தலைவர் அவர்களைப் பற்றி ஒரு வார்த்தையாவது இந்த அரசாங்கம் இதுவரை கூறி இருக்கக் கூடாதா? அவரின் அன்றைய தொண்டைப் பற்றி அல்லது அவர் இந்த இயக்கத்திற்காக பாடுபட்டார்கள் என்று சொல்லாமல், ஏதோ அவர்களாகவே எங்களுடைய பகுதி எப்படி ஒன்றாகச் சேர்ந்தது என்பதற்கு புதிதாக ஒரு சரித்திரத்தை, வரலாற்றை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இது வருந்தத் தக்கது—அல்ல, வெறுக்கத் தக்கது.

It is objectionable ; it is a travesty of truth and it is an insult to imagination,

என்று ஆங்கிலத்தில் சொன்னால் அது மிகையாகாது. இந்த மாதிரி அரசாங்கமே வெளியிடும் ஏடுகளில் இந்த மாதிரி கருத்துகள் வருகிறது என்றால் நாங்களெல்லாம் வேதனை அடைகிறோம், வியப்படைகிறோம். ஆதலால் இந்தக் கருத்தை பிரசுரம் ஆவதற்கு முன்பு சற்று இலாகாவில் பொறுப்பிலே இருக்கின்ற மேல்மட்ட அதிகாரிகளை பராமரிக்க வேண்டும். யார் இதை வெளியிட்டார்கள் என்ற விவரங்கள் எல்லாம் அதிலே இல்லை. ஒரு வேளை அது சிறு காரியமாக இருக்கலாம். ஆனால் அந்தப் பகுதி யிலே வாழ்கின்ற மக்களுடைய உணர்வைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் யார் யாரெல்லாம் இந்தக் காரியத்திற்கு தூண்டுதலாக இருந்தார்கள், யார் உதவி செய்தார்கள் என்பதை யெல்லாம் இந்த மாவட்ட மக்கள் எல்லோரும் நன்றாக அறிவார்கள். ஆதலால் இந்த................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குமரி மாவட்டம் தாய்த் தமிழகத் துடன் சேர்ந்ததற்கு பலர் உதவி செய்தார்கள். நேசமணி அவர்களைப் பற்றி குறிப்பு அதிலே இல்லாததற்கு உள்ளபடியே வருந்துகிறேன். அண்ணா அவர்கள் அந்தப் பெரு மக்களை அறிந்தவர்கள். அந்த உன்னிப் பான போராட்டத்திற்கு அண்ணா அவர்கள் ஆதரவளித்தார்கள் என்று இருக்கிறது. இதிலே விவேகானந்தர் படம் வந்திருக்கிறது. சுந்தரம் பிள்ளை படம், மற்ற பெரியவர்கள் படங்களெல்லாம் வெளியிடப்பட்டிருக் கிறது. நேசமணி அவர்களைப் பற்றி படமோ, குறிப்போ இல்லாததற்கு வெளியிட்டவர்கள் சார்பாக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்

1972 மார்ச் 30]

திரு ஆர். பொன்னப்ப நாடார்: இன்னெரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். காந்தி மண்டபம் அதிலே படம் போடவில்லே. விவேகானந்தர் மண்டபம் இருக்கிறது. அதன் அருகாமையில் இந்த வரலாற்று சிறப்பு மிக்க இடம் இருக்கிறது என்று கூறி அத்துடன் விட்டு விடுகிறேன்.

என்னைப் பொறுத்தவரை இன்னெரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் 400 கோடியில் ஓர் ஐந்து லட்சமாவது செலவழிப்பதற்கு அரசாங்கம் முனைந்து முன் வர வேண்டும் அல்லவா? நாங்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களும் அரசாங்கத்திற்கு வரி கொடுக்கிருர்கள், என்ற பரிவு உணர்வுடன் எங்கள் ஜில்லாவில் வேலே துவங்க வேண்டும் என்று மறுமுறையும் சொல்வதற்கு கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு வேளே நான் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வருகிறவன் என்ற காரணத்தால் இதைக் கூறுகிறேன் என்று நினைக்க வேண்டாம். நாங்கள் மனதில் வேதனையுடன் இருக்கிறோம். எங்கள் பகுதியில் ஒரு வேலேயும் ஏற்பாடாகவில்லே என்ற ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் வார்த்தைகளே முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலேவரவர்களே நிதி ஒதுக்கீடு பற்றி விவாதத்தில் கலந்து கொண்டு அரிய கருத்துக்கள் பலவற்றை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கருத்துக்கள் உடன்பாடு ஆனாலும், உடன்பாடு அல்லனவானாலும், வழங்கப்பட்ட கருத்துக்களுக்கு நன்றி தெரிவிப்பதென்பது ஒரு மரபாகும். நான் நேசமணி அவர்களின் படம் வெளியிடப் படாததற்கு வருத்தம் தெரிவித்த போது பொன்னப்ப நாடார் அவர்களிடமிருந்து எதிர்பார்த்தேன்—முதலமைச்சர் விளக்கத்திற்கு நன்றி, என்று தெரிவிப்பார் என்று எதிர்பார்த்தேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தவறுதான். உள்ளபடி இப்போது நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிக் கேட்டு வாங்க வேண்டிய அளவிற்கு இருக்கிறது. நிதி ஒதுக்கீட்டில் எவ்வாறெல்லாம் செலவிடப்பட வேண்டும், எவ்வளவு சிக்கனமாக, விவரமாக செலவிடப்பட வேண்டும், எனபதற்காகவே இன்றைய விவாதம் நடைபெறுகிறது என்று சீரிய கருத்துக்களே கம்யூனிஸ்ட் கட்சித் தலேவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

நம்முடைய நண்பர் ஜேம்ஸ் அவர்கள், இந்த விவாதத்தைத் தொடங்கிப் பேசும்போது, எதிர் தரப்பில் இருக்கும் உறுப்பினர்களுக்கு சரியான பிரிதிநிதித்துவம், நியாயமான ஜனநாயகம் இங்கே வழங்கப்படவில்லே; வரவு செலவுத் திட்ட விவாதத்தில் ஆகட்டும், பட்ஜெட் விவாதத்தில் ஆகட்டும்; அல்லது மானிய விவாதத்தில் ஆகட்டும், பெரும்பான்மையான உறுப்பினர்கள் எதிர்

தரப்பிலிருந்து பேசவில்லை என்ற குறைப்பாட்டைத் தெரிவித்துக் கொண்டார்கள். பொது விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர் களுடைய எண்ணிக்கையைப் பார்க்கும்போது, முன்னேற்றக் கழகத்தின் சார்பில்—ஆளும் கட்சியின் சார்பில்—184 பேருக்கு 31 பேர் பட்ஜெட் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றி இருக்கிறார்கள். 15 பேர் இருக்கின்ற—மன்னிக்க வேண்டும், 14 பேர் இருக்கின்ற—ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர்களில் 11 பேர் உரையாற்றியிருக்கிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் 7 பேர், சுதந்திராக் கட்சியில் 4 பேர், ஃபார்வர்டு பிளாக் கட்சியில் 4 பேர், முஸ்லீம் லீகில் 3 பேர், பி.எஸ்.பி.யில் 2 பேர், தமிழரசு கட்சியில் ஒருவர், பிறகு நியமிக்கப்பட்ட சுயேச்சை ஒருவர் என்ற அளவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த 31 பேர்களும், நியமிக்கப்பட்ட ஒருவரும்—ஆக 32 பேர்களும், எதிர் தரப்பிலே இருக்கின்ற 32 பேர்களும் பேசியிருக்கின்றார்கள். 184 பேர்களுக்கு 32 பேர்களும், எதிர் தரப்பில் 32 பேர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள்.

மானிய கோரிக்கைகளில் 14 மானியங்களிலும் மொத்த மாகப் பார்த்தால் ஆளும் கட்சியின் சார்பில் 158 பேர்கள்—தனித்தனியாகப் பார்த்தால் ஒவ்வொரு மானியத்திலும் 11 பேர், 6 பேர், 8 பேர் என்று இருந்தாலும்—உரையாற்றியிருக்கின்றார்கள். ஆளும் கட்சி அல்லாத மற்றவர்கள் 184 பேர்கள் உரையாற்றி இருக்கின்றார்கள். ஆக, இந்த 14 மானியங்களில் ஒரு மானியத்திற்கு ஆளும் கட்சியின் சார்பில் 11 பேரும், மற்ற கட்சிகளைச் சேர்ந்த வர்கள் 14 பேரும் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, இதிலே எங்களுக்கு போதுமான நேரம் தரப்படவில்லை, பிரதி நிதித்துவம் தரப்படவில்லை என்று குறைப்படுவது பொருத்தமாகாது. இந்த மன்றத்திலே நாம் எதிர் கட்சிகளுக்கு நல்ல வகையிலும் ஜனநாயக ரீதியிலும் அளிக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை மறுக்க வில்லை என்பதற்காக இந்தக் கணக்கினை நான் அளித்தேனே அல்லாமல், வேறல்ல.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. அவர்கள், ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட துணை மானிய கோரிக்கை ஒரு சிறு பட்ஜெட்டாகத்தான் காட்சியளித்தது என்று குறிப் பிட்டார்கள். ஏனென்றால் 45 மானியங்களில் கிட்டத்தட்ட எல்லா மானியங்களிலும் திருத்தம் இடம் பெற்ற காரணத்தால் அது ஒரு சிறு நிதிநிலை அறிக்கை என்ற தலைப்பினை பெற இடம் இருக்கிறது என்று சொன்னார்கள். மொத்தம் உள்ள 45 மானியங் களில் 2 மானியங்கள் சாட்டிய செலவினங்களைக் குறிக்கின்றன. அதாவது மத்திய அரசு, ரிசர்வ் வங்கியிடம் வாங்கிய கடன் வகைகளுக்காக ஒதுக்கப்பட்டவை. மீதமுள்ள 43 மானியங்களில் 13 மானியங்களுக்கு அடையாள நிதி ஒதுக்கமாக ரூ. 1,000, ரூ. 100 என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 30 மானியங்களுக்கு

1972 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

அதிகப்படியாக நிதி ஒதுக்கம் கோரப்பட்டிருக்கிறது. இந்த அதிகப்படி நிதி ஒதுக்கம் கோரப்பட்டது என் என்பதற்கு நேற்றைய விவாதத்தின்போது பதிலளித்திருக்கிறேன்.

சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள், மத்திய அரசிலே இருந்து வருகின்ற சென்டரல் டாக்ஸ் தான் அதிகமாக இருக்கிறது என்று கூறி, நாம் ஏதோ மத்திய அரசு வரியையும் விதிப்பதுபோல ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்திய அரசு விதிக்கின்ற வரிகளில் நமக்குக் கொடுக்கின்ற பங்கு அதிகமாக இருப்பது, நாம் போடுகின்ற வரி எல்லாம் இன்னும் சேர்த்து மத்திய அரசு வசூலிப்பதால் நமக்கு வருகின்ற பங்குத் தொகை அதிகமாக இருக்கிறதே அல்லாமல் வேறல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விற்பனை வரியில் 1971–72-ல் 8 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்து விட்டது. இங்கே வரிச்சுமை மிக உயர்ந்துவிட்டது என்று சொன்னார்கள். இந்த ஆண்டு விற்பனை வரி எதுவும் புதிதாகப் போடப்படவில்லை. சென்ற ஆண்டு அரை சதவிகிதம் விற்பனை வரி அதிகமாக்கப்பட்டது. பொருளாதார நிலைமை காரணமாக, மக்களின் வருமானம் பெருகியிருக்கின்ற காரணத்தால் விற்பனை வரி மூலம் வருமானம் பெருகியிருக்கின்றதே அல்லாமல் புது வரிகள் எதையும் நாம் போடவில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயத் தீர்வையில் பத்து கோடிக்குமேல் வருமானம் கிடைக்கிறது என்று சொன்னார்கள். மதுவிலக்கை நாம் எடுத்துவிட்டால் இப்படிப் பட்ட ஒரு பெரிய வருமானம் கிடைக்கும் என்ற அடிப்படையில்தான் மதுவிலக்கை எடுத்துவிட்டோம். ஆகவே புது வரி போட வேண்டிய எண்ணத்திற்கு இடம் வரவில்லை.

மின்சாரத் துறையில் 1971–72-ம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 8.62 கோடி ரூபாய் என்பதற்கு மாறாக 1972–73-ல் 3.75 கோடி ரூபாய் என்று குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். அதற்கு இந்தக் குறிப்புப் புத்தகத்திலே 62-ம் பக்கத்தில் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. "மின்சாரத் தீர்வைகள்" என்பதன் கீழ் மதிப்பீடுகள் 1972–73-ல் வெகுவாய் குறைந்துள்ளன. மின்சார வாரியக் கட்டண வீத அமைப்பு முறையில் செய்த மாறுதலின் காரணமாக இவ்வாறு குறைந்தது. இக் கட்டண வீதத்துடன் மின்சாரப் பயனீட்டு வரியில் ஒரு பகுதி சேர்க்கப் பட்டுள்ளது. அரசு வருவாயில் குறைவு இருப்பினும், மின் வாரிய வருவாயில் நிகரான கூடுதல் இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. அரசு வருவாய் குறைவதற்கு ஏற்ப மின்வாரியத்தில் வருவாய் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல உறுப்பினர்களும் தங்கள் தங்கள் தொகுதிகளுக்குச் செய்யப்பட வேண்டிய காரியங்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் ஒவ்வொரு உறுப்பினரும் அவர்களுடைய தொகுதிகளுக்கு செய்ய வேண்டுமென்று கூறியவைகளை எடுத்து வைத்துக் கொண்டு, அவர்களுடைய பெயர்களை எல்லாம் இங்கே குறிப்பிட்டு, அவைகளை எப்படி எப்படி நிறைவு செய்ய முடியும் என்பதைக் கூறுவதற்கு நேரம் அதிகமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும், கருத்துக்களைத் தொகுத்தளித்த உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள்.

நம்முடைய நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், "ஊழல் ஆய்வுக் குழு ஒரு அறிக்கை வைத்திருக்கிறது; அதைப்பற்றி என்ன சொல்லப் போகிறார்கள்" என்று. ஊழல் குழு, ஊழல் குழு என்று அவர் குறிப்பிடுவது, ஒருவேளை அது ஊழலுக்கு வைத்திருக்கின்ற அடைமொழி போலும். அதனுடைய அறிக்கையை இந்த அரசு பரிசீலக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஊழல் மகா காவியத் தலைவர், கதாநாயகர்கள் யாரோ சிலர் கூடி, ஊழல் குழு அறிக்கை தந்து, நம்முடைய நண்பர் லத்தீப் அவர்கள் சொன்னது போல நீலப் பத்திரிகை, மஞ்சள் பத்திரிகைகளிலே வெளியிட்டு அதன் காரணமாக இந்த அரசினை நடத்துகின்றவர்கள் தலைகளை தாழப் போட்டுக் கொண்டு சிம்மாசனத்தைவிட்டு இறங்க வேண்டும் என்று எல்லாம் சிலர் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்.

ஊழல் இருந்தால் தெரிவிக்கட்டும்; ஆதாரங்களைத் தரட்டும். உடனடியாக நடவடிக்கை எடுக்க சித்தமாக இருக்கிறேன் என்று நான் பலமுறை இந்த மாமன்றத்திலும் தெரிவித்திருக்கின்றேன்; பொதுக்கூட்டங்களிலும் தெரிவித்து இருக்கிறேன். ஏடுகள் வாயிலாகவும், அறிக்கைகள் வாயிலாகவும் தெரிவித்திருக்கிறேன் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஊழல்களுக்கு நாம் வக்காலத்து வாங்கி கொண்டிருக்கவில்லை. ஊழலுக்கு வக்காலத்து வாங்கி, "மாமன் கொடுத்தான், மச்சான் வாங்கினான்" என்று சொன்னவர்கள் அன்று இருந்தார்கள். பெரிய, பெரிய தலைவர்கள் எல்லாம் கூட அப்படிக் கேட்டார்கள்.

ஊழல் பற்றி அடிக்கடி இங்கே பேசுகின்ற சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ஒரு சுவையான தகவலைத் தரமுடியும் என்று கருதுகிறேன். காமராஜ் அவர்கள் ஊழல், ஊழல் என்று பேசுகின்ற சுதந்திராக் கட்சிக்கு முன்பு ஒருமுறை அவர் அளித்த பதில் ஒரு புத்தகத்தில்—வானதி பதிப்பகத்தார், வெளியிட்ட "காமராஜ் உவமைகள்" என்ற புத்தகத்தில்—வந்திருக்கிறது. அந்தப் புத்தகத்தில் 31-ம் பக்கத்தில் காமராஜ் அவர்கள் உவமையாக வெளியிடப்பட்டிருக்கிறது. அவர் கூறுகிறார்,

"சுதந்திராக் கட்சிகாரர்கள் ஊழல், ஊழல் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். குழந்தைகளுக்குத் தாய் பூச்சாண்டி காட்டி மிரட்டுவதில்லையா, அதைப்போல. குழந்தைகள் அழுதால் பூச்சாண்டி

1972 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

வருவான், உன்னைத் தூக்கிக் கொண்டு போவான் என்று தாய் மார்கள் குழந்தைகளுக்குப் பயம் காட்டுவது உண்டு. திடீரென்று குழந்தை எங்கே அம்மா பூச்சாண்டி காட்டு பார்க்கலாம் என்று கேட்டால் விழிப்பார்கள். பூச்சாண்டியை எங்கிருந்து காட்டுவார்கள்? காட்ட முடியாதல்லவா? அதைப்போலத்தான் ஊழல், ஊழல் என்று பேசும் பேர்வழிகளை அதைக் காட்டு என்று சொன்னால் காட்ட முடியாமல் திகைக்கிறார்கள் ".

என்று காமராஜ் — அவர்கள் ஒரு காலத்தில் பேசியது புத்தக மாக வெளியிடப்பட்டிருக்கிறது.

அவர் இன்னும் ஊழல் இருக்கத்தான் செய்யும்; ஐயாயிரம் ஆண்டு காலம் இருந்து வருகிறது என்று சொல்லி இருக்கிறார். அதுபோல இப்போது இந்த அரசிலும் ஊழல் இருக்கும்; அதை யாரும் தவிர்க்க முடியாது; விரட்டிட முடியாது என்று சொல்லவில்லை. அனைவரும் சேர்ந்து விரட்டுவோம். இருக்கின்ற குறிப்புகளைத் தந்திடுங்கள், கிடைக் கின்ற ஆதாரங்களைத் தாருங்கள்; ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்று பன்னிப்பன்னிச் சொல்லிக் கொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறல்ல.

ஆனால் சொல்ல வேண்டியவைகள் எவை எவை என்று கவனித்து, அவற்றை ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லி, குற்றங்களைச் சாட்டினால் இந்த அரசு அவைகளைக் கவனித்து ஆராய்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறது. அதைத்தான் நண்பர் திரு. லத்தீப் அவர்கள் இங்கே சொன்னார்கள் இப்போது நிலைமை எப்படி இருக்கிறதென்றால்—வேடிக்கையான ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது—ஒரு சீமான் தன் மகனுக்கு ஆடை அணிகள் எல்லாம் புனைந்து, மணிகிரீடம் வைத்து, மரகதம் எல்லாம் பூட்டி, முத்துமாலை அணிவித்து, மெதுவாகச் செல்கிற குதிரைமேல் ஏற்றி உட்கார வைத்து—குதிரை போகிற நேரத்தில் பின்னாலே ஏதாவது கீழே விழுந்தால் அதைப் பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டு வா என்று ஏவலாளரிடம் சொல்லி அனுப்பினாராம். குதிரை வீட்டுக்கு வந்த பிறகு அந்த ஏவலாளர் ஒரு பெரிய மூட்டையைக் கொண்டு வந்து அந்தச் சீமானிடம் கொடுத்தானாம். என்ன அது என்று கேட்டதற்கு "பின்னாலே விழுவதை பத்திரமாக எடுத்துக் கொண்டு வரச்சொல்லவில்லையா, இவை குதிரைச் சாணம்" என்றானாம்—ஏராளமான ஆபரணங்களை எல்லாம் பூட்டி அனுப்புகிற காரணத்தினால் ஆபரணங்கள் ஏதாவது விழுந்தால் எடுத்து வரட்டும் என்று சொன்னதற்கு சாணத்தை பொறுக்கி வந்தது போல "இதோ பார், இதோ பார்" என்பதாக கையில் எடுக்கத் தகாததை எல்லாம் எடுத்துவைத்துக் கொண்டு கையை வீணாக அழுக்காக்கிக் கொள் ளாதீர்கள் என்று நான் அவர்களை மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

இங்கே நடைப்பெற்றது ஊழல்—அங்கே நடைபெற்றது ஊழல் என்ப தாக எல்லாம் ஊழல் விசாரணைக் குழு எங்கே கூட்டப்பட்டது? யாருடைய இல்லத்தில் திரட்டப்பட்டது? முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவத்சலம்

அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அங்கு தலையீடு, இங்கு தலையீடு என்பதாக அடிக்கடி பத்திரிகைகளிலும் கூட அறிவிக்கிறார். நிர்வாகத் தலையீடு, எல்லாவற்றிலும் தலையீடு என்பதாக ஏதோ புதிய புத்தர் பிறந்து வந்ததைப் போல அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். அவருடைய சார்பிலே, அவராலே வெளியிடப்பட்ட அறிக்கையை இந்த அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதன்பேரிலும் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது பற்றியும் எல்லோருக்கும் தெரியும். இன்னும் இரண்டு நாட்களில் அதுபற்றியும் விவரமான செய்தி வரும் என்றும் குறிப்பிட்டார்கள்.

முன்னாள் முதல் அமைச்சர் தலையீடு, தலையீடு என்று பேசுகின்றாரே, நான் அன்றைக்கு 1965 ஆம் ஆண்டு சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். தேனீ சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு திரு. பக்தவத்சலம் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார் என்றார்கள். என்ன பதில் சொல்லியிருக்கிறார்? "நாவலர் நெடுஞ்செழியன் அந்தக் கூட்டத்தில் தாறுமாறாகப் பேசினார். சப் மாஜிஸ்ட்ரேட் திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்-விடுதலை படிப்பார்-பெரியாரின் சீடர்—அவர் நாவலருக்கு உதவியாக இருந்தார். இதற்காக அவரை வேலையில் இருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட உத்தரவிட்டிருக்கிறோம்" என்று வாதிட்டிருக்கிறார். மன்றத்தில் உள்ள உங்கள் அனைவருக்கும் தெரியும். நாட்டுமக்களுக்கும் நன்றாகத் தெரியும். நமது நாவலர் தாறுமாறாகப் பேசக்கூடியவரா என்பது அனைவருக்கும் தெரியும். இரண்டாவது இன்னொரு விஷயம் கூட்டமே நடைபெறவில்லை. நாவலர் கூட்டத்திற்குப் போகாமலேயே தடுக்கப்பட்டார். தெருவில் இருந்து தாறுமாறாகப் பேசினாரோ என்னமோ தெரியாது. பக்தவத்சலத்திற்குத்தான் வெளிச்சம்.

அதோடு சப் மாஜிஸ்ட்ரேட் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவராம். திராவிடக் கழகத்தில் இருந்து நாங்கள் பிரிந்து இரண்டாண்டாகிவிட்டது. 1949-இல் நாங்கள் திரு. அண்ணா அவர்கள் தலைமையில் திராவிடக் கழகத்தில் இருந்து பிரிந்தோம். காங்கிரசுக்கும் எங்களுக்கும் அப்போது இருந்த சண்டையைவிட—திராவிடக் கழகத்திற்கும் எங்களுக்கும் திராவிடக் கழகத்தில் இருந்து பிரிந்த நேரத்தில் மிகஅதிகமாக இருந்தது. என்பதை அனைவரும் நன்றாக அறிவீர்கள். அந்த சப் மாஜிஸ்ட்ரேட் திராவிட கழகத்தைச் சேர்ந்தவர், பெரியாரின் அத்யந்த சீடர்—அவர் நாவலருக்கு ஆதரவு அளித்தார். ஆகவே அவரை வேலை நீக்கம் செய்தோம் என்பது எப்படிப் பொருத்தமாகும்? அவர் திராவிடக் கழகத்தையே சார்ந்தவராக இருந்தாலும் வேலையில் இருந்து நீக்கி வைக்கப்பட வேண்டுமா? இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும். தேனீ விவகாரத்தை நான் எடுத்துக்காட்டி குற்றம் சாட்டியதற்கு பக்தவத்சலம் மறுத்ததை யாரும் மறுக்க முடியாது. அந்தக் குற்றத்தை அவர் செய்யவில்லை என்பது விளக்கமாகும்.

1965-ம் ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் ஒரு பெரிய கலவரம் நடந்தது. 144 தடை உத்தரவை மீறி இரண்டு கட்சிகளும் மோதிக் கொண்டன. அந்தக் கலவரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்

48 பேர்கள் மீது போலீசார் வழக்குப் போட்டார்கள். அதேபோல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 20 பேர்கள் மீது அதே செக்ஷன் கீழ் வழக்குப் போட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீது என்ன என்ன செக்ஷன் கீழ் அந்தக் கலவரத்தில்வழக்குப் போட்டார்களோ ஏறத்தாழ அதே செக்ஷன்கள் கீழ் காங்கிரஸ் காரர்கள் 20 பேர் மீதும் அந்தக் கலவரத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். ஆனால் அப்போது முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் உத்திரவிட்டு காங்கிரஸ்கட்சிக்காரர்களின் மீது இருந்த வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொள்ளச் செய்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 48 பேர்களின் மீது வழக்கு நடந்து 3 மாதம், 2 மாதம், 1 மாதம் என்று பல பேர்களுக்குத் தண்டனை தரப்பட்டது. திரு. பக்தவத்சலம் அவர்கள் கொளுத்திய பைல்களில் இது ஒன்று. நல்லவேளையாக அவர் போட்ட உத்தரவு வடாற்காடு மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் இருந்தது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு தகவல் தருவதும், பழைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு தகவல் தருவதும் ஆக எங்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கிற காரணத்தினால் தான் முதல் அமைச்சர் அவர்களை ஒரு என்குவயரி கமிஷனையே போடுங்கள் என்கிறோம். அப்படிப் போட்டால் எல்லாம் வெளிவரும். மக்களுடைய நல னுக்கு அத்தனையும் வெளிவருவதை நாங்கள் வரவேற்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. பக்தவத்சலம் அவர் களுடைய விவகாரம் வெளி வருவதில் அம்மையாருக்கு ஆர்வம் இருக்கிறது என்கிற ஜாடை எனக்குப் புரிகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : திரு. பக்தவத்சலம் விவகாரம் வெளி வருவதில் எனக்கு ஒன்றும் தனி அக்கறை இல்லை. சொல்லப் போனால் அவர் இவர்களுக்குத்தான் நெருங்கியவராகவும் இருந்திருக்கிறார். என்னைப் பொறுத்தவரை இரண்டுபேர்களுடைய சமாசாரமும் வெளி வருவதில் எங்களுக்கு அக்கறை இருக்கிறது என்று சொல்ல விரும்பு கின்றேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கலெக்டர் மோரீஸ் அவர்களை வேலைநீக்கம் செய்ததுபற்றியும் கூறியிருக்கிறார்கள். அதுசம்பந்தமாகவும் முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மோரீஸ் நீக்கம் சம்பந்தமாக அவர் கற்பனை செய்து கொண்டு சொன்னதுபற்றி எல்லாம் எனக்கு என்ன தெரியும் ? நான் தேனீ சம்பந்தமாக அவர் சொன்ன பதில் சரிதானா என்பதற்குச் சொன்னேன். இதற்கு அவர் தந்த விளக்கம் நாவலர் தாறுமாறாகப் பேசினார் என்பது ஒன்று. சப் மாஜிஸ்ட்ரேட் திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்—விடுதலை படிப்பவர்—பெரியாரின் சீடர் என்பது ஒன்று. இரண்டையும் பக்தவத்சலம் அவர்களே ஒத்துக் கொண்டு பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதற்கு விசாரணை தேவை யில்லை.

திருவண்ணாமலை கலவரத்தில் 48 திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீதும், 20 காங்கிரஸ்காரர்கள் மீதும்—ஒரே கலவரத்தில் ஈடுபட்டவர்கள்—ஏறத்தாழ ஒரேவிதமான செக்ஷன்களின் கீழ் வழக்குத் தொடரப்பட்டவர்கள்—இவர்களில் காங்கிரஸ்காரர்களின் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற்று அவர்களை விடுவிக்க இங்கிருந்து அவர் அனுப்பிய தாக்கீதுகள் நல்ல வேளையாக வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருக்கிறது. அதைத் தான் எடுத்துக் காட்டினேனே அல்லாமல் வேறு இல்லை. இப்படித் தலையீடுகள்.

தலையீடுகளுக்கு அடுத்தபடியாக ஊழல்களைப் பற்றிப் பேசுவதற்கு தமிழ்நாட்டில் அந்த பக்தவத்சலம் அவர்களே தானைத் தலைவராக இருக்கிறார். இங்கே பொன்னப்ப நாடார் அவர்களும் கூடச் சொன்னார். அன்றைக்கு நான் பேசும்போது உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட நேரத்தில் எப்படி பூண்டி வாண்டையார், உக்கடைத்தேவர், கபிஸ்தலம் மூப்பனார் ஆகியவர்கள் எல்லாம் தங்கள் நிலத்தை விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டினேன். அதுபோல இப்போது நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். திரு. பக்தவத்சலம் அவர்கள் இது எல்லாம் ஊழல் இல்லை என்று பதில் அளித்திருப்பது பத்திரிகையில் எல்லாம் வந்திருக்கிறது. இன்று நான் சொல்லப் போவது அவரது குடும்ப விவகாரம். வி. என். வரதப்பன் சம்பந்தப்பட்டது.

1960-ஆம் வருடம் தமிழ்நாட்டில் உச்ச வரம்புச் சட்டம் தமிழ் நாடு சட்டப் பேரவையில் கொண்டுவரப்படுகிறது. அதற்கான நோட்டிபிகேஷன் 1962-ஆம் ஆண்டு வருகிறது. 6—4—1960-இல் சட்டம் கொண்டுவரப்படுகிறது. அதற்கான நோட்டிபிகேஷன் 2—10—1962-இல் வருகிறது.

நான் அன்றைக்குச் சொன்ன நபர்கள் எல்லாம் சட்டம் வருவதற்குள்ளாகவே விற்றுக் கொண்டார்கள். ஆனால் இந்த நபர் திரு. வரதப்பன் சட்டம் வருகிறது என்று அறிவித்த பிறகு நோட்டிபிகேஷன் செய்வதற்குள்ளாக 6—4—1960-இல் இருந்து 2—10—1962-க்குள் தம்முடைய நிலத்தை விற்றிருக்கிறார்.

திரு. வரதப்பனுக்குச் சொந்தமானது 283 ஏக்கரா. ஸ்டாண்டர்டுக் ஏக்கராக் கணக்கில் 142 ஏக்கரா. 6–4–1960-இல் இருந்து 2–10–1962-க்குள் இவர் விற்றது 137.45 ஏக்கரா. இந்த விற்பனையைச் செல்லாத தாக்க நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 15–11–1970-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு, நோட்டிபிகேஷனுக்காக நாள் குறிப்பிடப்பட்டு, 2–10–1962 என்று நோட்டிபிகேஷன் டேட் குறிக்கப்பட்டது. இந்த இடைவெளி இரண்டு ஆண்டுக் காலத்தில் உச்ச வரம்பு சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக என்னென்ன வழிகள் இருக்கின்றன என்று நினைத்தார்களோ, அல்லது நாம் அமைச்சர்களாக இருக்கிறோம் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்களோ, என்னவோ தெரியாது. 142 ஸ்டாண்டர்டு ஏக்கராவில்

1972 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

137 ஸ்டாண்டர்டு ஏக்கரா விற்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, அவர்களுடைய செல்வி சரோஜினி பெயரில் புஞ்சை 4 ஏக்கர், நஞ்சை 23 ஏக்கர் நிலங்கள் இருந்தன. 8–12–1959-ல் அந்த நஞ்சையை விற்றார்கள். பிறகு, 6-ம் தேதி நில உச்ச வரம்புச் சட்டம் வருகிறது. இவர்கள் 4-ம் தேதி 23 ஏக்கராவை விற்றிருக்கிறார்கள். அதுவும் 6-ம் தேதி சட்டம் வரும்போது 4-ம் தேதியே விற்றிருக்கிறார்கள் (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு).

ஏன் விற்றார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அந்த நிலம் இருந்தால் அதுவும் வரதப்பன் கணக்கிலே சேர்ந்து உபரியாக ஆகிவிடும் என்ற காரணத்தால் விற்றிருக்கிறார்கள். சரோஜினிக்கு உரியது வரதப்னுக்கு உரியதாகும் என்று அவர் கணக்கில் சேர்ந்துவிடும் என்ற காரணத்தினால் முதலிலேயே விற்றுவிட்டார்கள். இப்படி விற்ற பின்னர் அவர்கள் கணக்கில் மீதம் எவ்வளவு இருந்தது என்பதைப் பார்க்க வேண்டும். நோட்டிபிகேஷன் தேதிக்குப் பின்னால், சட்டம் வருவதற்கு இரண்டு நாள் முன்னதாக அதாவது 4-4-1960-லே நிலத்தை விற்றிருக்கிறார்கள். அப்படி விற்றது போக சட்டம் வந்த தேதியில் அவர்களிடம் மீதம் இருந்தது 21 செண்ட்தான்—பாவம்! (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரதப்பனுக்கும் சரோஜினிக்கும் என்ன சம்பந்தம்? யார் என்று சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சரோஜினியின் கணவர்தான் திரு. வரதப்பன். திரு. பக்தவத்சலத்தின் மருமகன். ஒருவேளை சரோஜினியும் வரதப்பனும் தனியாக இருக்கிறார்கள் என்று சொல்லிவிடக்கூடும். அதுவும் இல்லையென்பதைக் குறிப்பிடுகிறேன். இப்போதுகூட குடும்பக் கார்டு தருவதற்காக புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டது. திரு. பக்தவத்சலம் அவர்களுடைய குடும்பக் கார்டில் சரோஜினி, வரதப்பன் ஆகிய எல்லோருடைய பெயர்களும் எழுதப்பட்டுதான் இருக்கிறது. அவர்கள் எல்லோரும் ஒன்றாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஊழல், ஊழல் என்று மற்றவர்களைப் பார்த்துப் பேசுவதற்கு முன்னால் ஒரு தடவை தங்களுடைய முகத்தை முகக் கண்ணாடியில் பார்த்துவிட்டு (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு) மற்றவர்களைக் கண்டித்தால் நல்லதாக இருக்கும். உங்களுடைய செய்கைகளை மறைத்துக்கொள்ளத்தான் மற்றவர்களைப் பார்த்து, ஊழல் ஊழல் என்று சொல்கிறீர்கள்.

DR. H.V. HANDE: Was it not the duty of the Hon. Chief Minister and the distinguished Navalar who were powerful opposition leaders at that time to pinpoint all those things? I would have been happy if they had pointed out those things at that time.

Also, whatever mistakes that Government might have committed, is it not their duty to take action now because another Government may come tomorrow and they may have also access to the old records and say the same thing. I would be happy if the Hon. Chief Minister sets an example to others.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்போதும் பல விவகாரங்களைச் சொல்லியிருக்கிறோம். இன்னும் பல விவகாரங்களைக் கண்டு பிடிக்கத்தான் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம். இன்னும் சில விவகாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் பொதுக்கூட்டங்களிலே, "எங்களை அங்கே போய் உட்கார வைத்தால் இன்னும் பல விஷயங்களைக் கண்டுபிடிப்போம்" என்று சொன்னார்.

அதுமட்டுமல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலே டாக்டர் ஹாண்டே அவர்கள் கலந்து கொண்டு, "பக்தவத்சலம் அவர்கள் பைல்களைக் கொளுத்தினார். அவரைக் கூண்டிலே நிறுத்தி விசாரணை செய்வீர்களா?" என்று கேட்டது இன்னும்கூட என் நினைவில் இருக்கிறது. ஆகவே, சொல்கின்ற குற்றச்சாட்டுகளை ஆதாரங்களோடு சொன்னால் விசாரிக்கத் தயாராக இருக்கிறேன். அப்படியில்லாமல் யாரோ எழுதினார்கள், யாரோ அப்படிப் பேசினார்கள் என்று ஹாண்டே சொல்வது நல்லது அல்ல.

டாக்டர் ஹாண்டே அவர்களிடத்தில் தவறு காண்கிறேன் என்று நான் சொல்லவில்லை. நான் டாக்டர் ஹாண்டே அவர்களுடைய எழெட்டு ஆண்டுக்கால சட்டமன்ற நடவடிக்கைகளைக் கண்டு பாராட்டி வந்தவன். சமீப காலத்தில் அவர் என் ஆத்திரத்துக்கும் எரிச்சலுக்கும்—யாரோ சொல்கின்ற தவறான கருத்துக்கு—ஆட்படுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. சுதந்திராக் கட்சியின் சார்பில் நல்ல கருத்துக்களைச் சொல்லுங்கள், ஏற்றுக்கொள்கிறோம். இந்த ஆட்சி தவறு செய்தால், இந்த விதத்தில் தவறு என்று சுட்டிக் காட்டினால் அதை ஏற்றுக்கொள்கிறேன். நான் இதை வேடிக்கைக்காகச் சொல்லவில்லை; முதலமைச்சர் என்பதற்காக ஏதாவது சொல்லித் தீரவேண்டுமென்பதற்காகவும் சொல்லவில்லை. யார் தவறு செய்தார்கள், யார் ஊழல் செய்தார்கள், யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஆதாரங்களோடு நிரூபிக்க முயற்சித்தால் அவரைக் காக்க வைக்காமல் உடனடியாக நடவடிக்கை எடுத்து தண்டிக்கத் தயாராக இருக்கிறேன்.

பொதுவாக ஒவ்வொரு இடத்திலும் ஊழல், ஊழல் என்று சொல்லிக் கொண்டே போனால் அது அரசியல் மரபுக்கே இழுக்காக இருக்கிறது. இப்படிச் செய்தால் அரசியல் பண்பாடு கெட்டுவிடும், பொதுப் பணிக்காக வருபவர்கள் அரசியலுக்கு லாயக்கில்லை என்கிற நிலைமை வந்துவிடும். யாரோ ஒருவர் பத்திரிகை விற்பனையாக வேண்டுமென்பதற்காக எழுதினார் என்றால் அதற்காக நாம் கவலைப்பட முடியுமா? மேலும் தனக்கு ஒரு நீதி, பிறருக்கு ஒரு நீதி என்று வைத்துக்கொள்வதா?

எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. திருச்சியிலே ஒரு கலவரம் நடந்தது என்றால், இங்கே ஒரு ஒற்றிவைப்புத்தீர்மானம் வருகிறது. ஆனால், திரு. சுப்பிரமணியம் கூட்டத்தில் ஒன்று நடந்தது என்றால் ஒற்றிவைப்புத் தீர்மானம் வருவதில்லை. ஒருவருக்கு ஒரு நீதி, இன்னொருவருக்கு ஒரு நீதி என்று இருக்கக் கூடாது. பொதுக் கூட்டங்களிலே பேசுகின்ற பேச்சுக்கள் எந்த அளவிற்குத் தரக் குறைவாக இருக்கின்றன, ஏடுகளிலே எந்த அளவிற்குத் தரக் குறைவாக எழுதி வருகிறார்கள் என்பதைப்பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சுட்டிக்காட்டி, இதுபோன்ற பத்திரிகைகளைத் தடை செய்தாலும் வரவேற்பேன் என்று பேசினார்கள். அவ்வளவு மோசமாகப் போய்விட்டது. அரசியலில் ஈடுபட்டுவிட்ட ஒரே காரணத்திற்காக அவருடைய தாய்-தந்தை, சகோதரிகள், பெண்டு-பிள்ளைகளைப்பற்றி மேடைகளில் பேசுவது என்பதும், அதுவும் சொல்லத் தகாத வார்த்தைகளால் அவர்களை அவமானப்படுத்துவதுபோல் பேசுவதும் அதிகரித்து வருகிறது. "அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை" என்று கேட்டார்கள்.

மக்கள் அவர்களையெல்லாம், அவர்கள் பேசுவதையெல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் பேசுவது தரமா, தரமில்லையா என்பதை அவர்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கேற்ற முறையில் அவர்களை மட்டம் தட்டிக் கொண்டுதான் வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை மயிலாப்பூர் பொதுக்கூட்டத்தில் பேசும்போது, "எங்களை மாற்றார் ஏச ஏசத்தான் நாங்கள் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம். இன்னும் ஏசி ஏசி இந்தக் கழகத்தை மேலுக்கு உயர்த்தப் போகிறார்கள்" என்று கூறினார். ஆகையால்தான் கூறிக் கொள்கிறேன், இப்படிப் பேசுவதால் எங்கள் மனம் புண்படவில்லை. ஆனால் நாட்டிலே உள்ள அனைவரும் காட்டி வருகின்ற அரசியல் பண்பாடுகள், அரசியல் ஒழுக்கம், அரசியல் நெறிகள், ஆகியவற்றைக் குழிதோண்டிப் புதைத்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேனேயல்லாமல் வேறு எதற்காகவும் அல்ல.

DR. H.V. HANDE: Does it not hold good for 'Murasoli' also? For, sometime back, there was some reference to Mr. Mohan Kumaramangalam I am not speaking for him. But what I want to know is whether the same norms should not be applied where the paper belongs to the ruling party? We have forgotten about that affairs. Still I wanted to know.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் சொல்வது எல்லாப் பத்திரிகைகளையும்தான். திரு. மோகன் குமாரமங்கலத்தைப் பற்றி எழுதும்போது, பிராமணத் தாய்க்குப் பிறந்தவர் என்று எழுதியிருந்தது. திரு. மோகன் குமாரமங்கலத்தினுடைய வரலாறு எழுதப்படுமானால், அவர் தகப்பனார் பெயர், தாயார் பெயர் போட்டுத்தான் எழுத வேண்டும். தாக்கப்படுகின்ற நேரத்தில் அப்படி எழுதிக் காட்டுவது சரியல்ல. ஆளும் கட்சியின் சார்பில் அந்தப் பத்திரிகை வரலாம். என்றைக்கோ ஒருநாள் பத்திரிகை நிறுவனராக

இருந்தேன் என்ற காரணத்திற்காக அதில் வருகின்ற ஒவ்வொரு எழுத்துக்கும் நான் பொறுப்பாளியாக ஆக முடியுமா? ஒரு பத்திரிகை என்றால் அதில் வருகின்ற ஒவ்வொரு எழுத்துக்கும் ஆசிரியர் பொறுப்பாளியாக இருக்க முடியாது. நியாயமாகப் பார்த்தால் துணை ஆசிரியர்கள், இணை ஆசிரியர்கள் இவர்கள் செய்திகளை சாதாரணமாகப் போட்டுவிடக்கூடும். அந்தப் பத்திரிகையில் அப்படிச் செய்தி வந்ததற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டேன். வேறு பத்திரிகைகளுக்கு வருத்தம் தெரிவித்துக்கொள்கிற பண்பாடாவது இருக்கிறதா? பிற்பாடாவது வருத்தம் தெரிவித்திருக்கிறதா? மீண்டும் மோகனைப்பற்றி வந்ததாகச் சொல்வது, அது ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிறது என்பதற்காகச் சொல்லப்படுவதே தவிர வேறல்ல, இடையில் எனக்கும் அந்தப் பத்திரிகைக்கும் தொடர்பில்லை. இப்போதும் அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சி ஏடுகளில், வேறு கட்சி ஏடுகளில் எவ்வளவு அவதூறான செய்திகள், கர்ணகடூரமான வார்த்தைகள் வெளிவருகின்றன. அதற்காக யாராவது வருத்தம் தெரிவித்துக்கொள்ள தயாராக இருக்கிறார்களா என்றால் இல்லை. ஆகவேதான் அந்தப் பண்பாடு எல்லாத் தரப்பிலும் இருந்து வந்தாக வேண்டுமென்பதற்காகக் கூறுகிறேனேயல்லாமல் வேறல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள், "கன்னியாகுமரி மாவட்டம் கேட்பாரற்றுக் கிடக்கிறது" என்று சொன்னார்கள். வேறு மாவட்டங்களின் தன்மையையும் எடுத்துச் சொன்னார்கள். அமைச்சர்களே வந்து கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்த்து சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட்டி வைத்து ஆலோசனை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரயத்துவாரி 1963-ம் ஆண்டு முதல் வசூலிக்கப்படலாம் என்று ஆணையிடப்பட்டது. ஆனால் சர்வே செட்டில்மெண்டு இந்த ஆண்டுதான் முடிந்தது. கடந்த 7 ஆண்டுகள் வரி பாக்கியை வசூலித்தால் விவசாயிகளுக்குச் சங்கடமாக இருக்கும் என்று சொல்லப்பட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறை ஆண்டு பாக்கியை செலுத்தினால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் முன்பிருந்த பாக்கி அதாவது அரசுக்கு அளிக்கப்பட வேண்டிய தொகை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கணக்குப்படி 31 லட்சம் ரூபாய் இழப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தை கவனிக்கவில்லையென்று சொல்வது பொருந்தாது. இன்னும் நல்ல முறையில் வட்டார ரீதியில் செய்யப்படுகின்ற காரியங்களில் அரசு முனைப்பாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இப்போது அறிமுகப்படுத்திய சில வரிகளைப்பற்றிப் பேசினார்கள். மின் கட்டண உயர்வைப்பற்றி கோவை மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் பேசினார்கள். எப்ரல் முதல் வாரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு, இதுபற்றி இவர்களுடன் பேசுவதாக இருக்கிறேன். இது சம்பந்தமாக ஒரு முடிவு எடுக்கப்படும் என்று கருதுகிறேன்.

1972 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

வாகன வரிக்குப் போடப்பட்ட 10 சதவீதம் சர்சார்ஜில் பஸ்களுக்கு குறைக்க வேண்டுமென்று யாரும் கூறமாட்டார்கள். ஏனென்றால் தமிழ் நாட்டிலே கால் ஆண்டுக்கு இருக்கையொன்றுக்கு 85 ரூபாய் என்றும் ஆந்திராவிலே 104 ரூபாய் என்றும் இருக்கிறது. இந்த சர்சார்ஜ் பத்து சதவீதம் உயர்த்தப்படுவதனாலே அது 90 ரூபாய் அல்லது 95 ரூபாய் என்ற அளவுக்குத்தான் போகுமே தவிர ஆந்திராவிலே இருப்பதற்கு அதிகமாகப் போய்விடாது. லாரிகளுக்கு 10 சதவீதம் என்று உயர்த்தியிருப்பதை குறைக்க வேண்டுமென்று லாரி சொந்தக்காரர்கள் சங்கத்தார் நேற்றைய தினம் என்னிடத்தில் பேசும் பொழுது தெரிவித்தார்கள். நான் அவர்களிடத்திலும் கூறினேன். அவர்கள் பத்து சதவீதம் உயர்வைத் தாங்க முடியாது என்ற காரணத்தினாலே அதிலே 5 சதவீதம் குறைத்து 5 சதவீதமாக ஆக்கப்படுகிறது என்ற கருத்தை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்கூட்டர்களுக்கு இந்த சர்சார்ஜ் வருமா என்ற சந்தேகம் எழுப்பப்பட்டது. 10 சதவீதம் சர்சார்ஜிலிருந்து ஸ்கூட்டர்களுக்கும் விலக்கு அளிக்கப்படும் என்ற கருத்தையும் நான் மன்றத்திலே மகிழ்வோடு அறிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதேமாதிரி பிரைவேட் கார் வைத்திருக்கிறவர்களுக்கும் விலக்கு அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வேண்டாமென்று சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களே சொல்கிறார்.

மினிமம் பென்ஷனைப் பற்றி பல நேரங்களிலே பல உறுப்பினர்களும் எடுத்துப் பேசி இருக்கிறார்கள். பல்வேறு கோரிக்கைகளும் அதைப் பற்றி வந்திருக்கின்றன. 30 ரூபாயாக இருப்பதை 50 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதிகமாக கேட்டு வைப்போம் என்று கேட்டார்கள். இரண்டுக்கும் இடையில் அது 40 ரூபாயாக ஆக்கப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன்.

